Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00


දිනමුරසු වාරමලර් ஆக. 17-23, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 675



## கந்தளாயில் அழுகுரல்கள்!



## நிலச் சிறைக்குள் முஸ்லிம் இளைஞர்கள்!

மாவிலாறு - மூதூர் பற்றிய பிரேதப் பரிசோதனை!


## அவல நிலைக்குள் தமிழ் மக்கள்!



## மாவிலாறு நீர்

'தாத்தா....போறேன்....'

சிறுமியின் கடைசி வார்த்தை!



போவோம்! ரசிப்போம்!


அந்தரங்கம்!

40 கோடி வசூல்!



சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்



## ஆலய வழிபாடு!

**ஆ**ன்மாக்கள் அமைதி காண்பதற்கு அமைக்கப்பட்ட இடந்தான் 'ஆலயம்' என்ற கருத்து பரந்துபட்ட அளவில் பேசப்பட்டு வந்தாலும். அதிலுள்ள உண்மை நிலை இதுவரை கேள்விக் குறியாகத்தானிருக்கிறது. அந்த வழியிலிருந்து சற்று விலகி நின்று பார்ப்போமானால் ஆலயங்களில் நடக்கின்ற விழாக்களில் கலந்து கொள்கின்றவர்களின் மனோ நிலை அனைத்தும் களியாட்ட நோக்குடனேயே தோன்றும்.

அத்தகைய விழாக்கள் தவிர்ந்த நேரங்களில், ஆன்மா அமைதி காணக் கூடிய ஏதாவதொரு செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா? என்றால் கடைசிவரையில் அது பதிலற்ற வினாவாகவே இருந்துவிடும். ஆதலின், ஆன்மா ஒரு நிலைப்படுவதற்கு அமைதியான சூழ்நிலையே உகந்தது என்றால் வியப்பதற்கில்லை.

"ஆடை அணிகள் ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவதில்லை" என்ற பாடலடிகள் கவனிக்கத்தக்கவை.

**-என். எஸ். ராஜா, தம்பலகமம்.**

## பிரார்த்தனையின் பலன்!

"**ஆ**ண்டவரே! என் பிரார்த்தனைக்குச் செவிமடுத்து என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்" என்று நாம் கர்த்தரிடம் மன்றாடும் போது அந்த விண்ணப்பம் கர்த்தரைச் சென்றடைகிறது. அவர் மக்களின் எல்லா விண்ணப்பங்களையும் அறிந்தவராக - தெரிந்தவராக இருக்கிறார். அவர் சர்வ வல்லமைமிக்க கர்த்தர். ஆனால் அந்தப் பிரார்த்தனையின் பலன் உடன் கிடைப்பதில்லை. காலம், நேரம் பார்த்து தக்க தருணத்தில் அது நம்மை வந்தடைகிறது.

எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பதை நமது தேவன் அறிவார். அது மனித உருவில் அல்லது பல வழிகளில் உதவியாக வந்து சேரும்.

ஆகவே காலம் கனியும் போது காயும் கனியாகும் என்பது போல, கர்த்தரை வேண்டினால் அவர் கருணை பிறக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**"தட்டுங்கள் திறக்கப்படும்.**
**கேளுங்கள் கொடுக்கப்படும்.**
**தேடுங்கள் கண்டடைவீர்கள்."**

நேரமும், காலமும் வரும்போது எல்லாம் தானாக நடக்கும். கவலையை விட்டு கர்த்தரை துதிப்போம்!

**-வீ. எஸ். மதிவாணன், கெரவலப்பிட்டிய.**

## மாமறை கூறும் மனித வாழ்க்கை

**ம**னிதனிடம் நீதி செய்யும் பண்பு இருக்கிறது. நல்லறிவு தேடும் சக்தியும் இருக்கிறது. ஆனால் மனிதன் இன்று இவ்விரு பண்புகளையும் தன் வாழ்க்கையின் உறுதுணைகளாக வைத்துக் கொள்கிறானா? இல்லவே இல்லை. நீதியையும் மறந்து விடுகிறான்; நல்லறிவையும் மறந்து விடுகிறான். இப்பொழுது இவன் கொடுமையும் தீங்கும் விளைவிக்கின்றான்.

மனிதன் அறியாமை மிகுந்தவனாகவும், கொடுமையிழைப்பவனாகவும் ஆகிவிடுகிறான் என்றால் அது அவன் உலக ஆட்சிக்குள் சிக்கிவிட்டான் என்றுதான் நாம் கருதவேண்டும்.

"கற்க கசடறக் கற்க' கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற அடிப்படையை மறந்து கற்றவற்றுக்கும் முரணாக அவன் நடந்து கொள்கிறான்.


அறிவைப் பெருக்கும் அருள் வேதம் கூறுகிறது : "மனிதன் அறியாமையால் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொள்கிறான். தனக்கே கொடுமையிழைத்துக் கொள்கிறான்".

***அல்குர் ஆன்* 33:72.**

ஆம், மாமறையில் மக்கள் குலம் உய்ய, உயர உத்தம வாழ்வு பெற அல்லாஹ் எத்தகைய வழிகளைக் காண்பித்திருக்கின்றான் என்பதை அறிந்து அதன்படி நாம் நாளும் நடப்போமாக!

**-எம். சீ. கலீல், கல்முனை - 05**

## கவிதைப் போட்டி இல.672



### பரிசுக்குரிய கவிதை

#### கயமை

முளையிலே கிள்ளியெறிய
முனைந்து
தோற்றுப் போனதாரு?
மாற்றுக் கருத்தானின்
மகன் என்று
மழலைப் பிஞ்சை
சிறை வைப்பானுக்கு
முட்டாள் என்றுதான் பேரு
- பதில்
காலம் சொல்லும் கேளு!

*-ஏ. ஆர்.எம். நதார், ஜின்னாநகர்*

## கவிதைப் போட்டி இல.675



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.08.2006.

கவிதைப் போட்டி இல.675
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### உண்மையை யாரறிவார்?

பெற்றோரை பேரலை அழித்தது!
உற்றாரை ஊமைப் போர் அழித்தது!!
உன்னைச் சிறையில் அடைத்தது
உதாரணக் கைதியாக உலகுக்குக்
காட்டவோ?

*-கௌரி சங்கர், கொழும்பு - 13.*

### யார்...?

கூண்டுக்கிளியென
கூட்டுக்குள்
அடைப்பட்டக்
குழந்தையே!
உன்னைக்
கெடுத்தவர்
யார்...?
கொண்டுவந்தவர்
யார்...?
தத்து எடுத்தவர்
யார்...?
தடுத்து வைத்தவர்
யார்...?

*-நா.ஜெயபாலன், பிபிலை.*

### மனித உரிமையா இது?

மனித உரிமைச் சட்டம்
மண்ணாங் கட்டி...
கொடுப்பவர்க்கெல்லாம்
கொடுத்தாகிவிட்டது
காலை போகின்றாய்
கலிபோனியாவுக்கு
அகதி என்ற பெயருடன்
விற்பனைச் சந்தைக்கு.

*-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

### பிறந்த பாவம்

இப்பொழுதே பழகிக் கொள்!
வளர்ந்ததும்
சிறைக்கூடங்களில்
கம்பி எண்ணவேண்டி வரும்
இந்நாட்டில்
தமிழனாகப்
பிறந்த பாவத்தால்!

*-அ.சந்தியாகோ, கண்டி.*

### இது நியாயமா?

கொள்ளைக்காரரும் வெளியே...
கொலைகாரரும் வெளியே...
கடத்தல் காரரும் வெளியே...
பாவிகள் பலர் வெளியே...
பாலகனான நானோ உள்ளே!
இது நியாயமா?

*ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, கொடிகாவத்தை.*

### இதுதான் கதியா?

தொட்டில் கம்பிகளுக்குள்
பச்சிளம் பாலகன்!
ஆனால்...
தந்தையோ இரும்புக்
கம்பிகளுக்குள்!
இதுதான் கெதியோ?

*-ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு - 15.*

### சிறையறை

தாயின் கருவறை
அது இன்பச் சிறையறை!
அதில் விடுதலை
கிடைத்தும் - உன்னை
இவ்வுலகம்
துன்பச் சிறையினுள்
தள்ளி விட்டதே!

*-ஏ.ஜே.நஸ்லி, கிண்ணியா.*

### பதில் கூறுங்கள்!

உள்ளே உள்ள அத்தனை பேரும்
குற்றவாளி இல்லீங்க!
வெளியே உள்ள அத்தனை பேரும்
புத்தன், காந்தி இல்லீங்க!
என்பது எவ்வளவு உண்மை!
அப்பாவியான நான் உள்ளே!
பாவிகள் வெளியே!

*-மர்ஸியா நாபிர், பேருவளை.*




# உங்கள் பக்கம்

## பாதை சீர்கேட்டால் தோட்ட மக்கள் அவதி!

**ஊவா** மாகாணத்திற்கு உட்பட்ட எல்ல கினலன் தோட்டத்தில் வசிக்கும் மக்களும் பாடசாலை செல்லும் மாணவர்களும் பாதை சீர்கேட்டினால் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இப்பாதைகள், குண்டும் குழியுமாகக் காணப்படுவதால், நகர்ப்புறங்களிலிருந்து வருபவர்களும், இரவு நேரங்களில் வருபவர்களும் அதிக பணம் கொடுத்து போக்குவரத்தினை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன் முச்சக்கர வண்டி ஓட்டுனர்களும் தோட்டப் பாதை என்றால் வருவதில்லை. இதனை, தோட்ட நிர்வாகமும் கவனத்திற் கொள்வதில்லை. தேர்தல் காலங்களில் வாக்குறுதி அளித்தவர்களும் வருவதில்லை. எனவே இது சம்பந்தப்பட்ட தோட்ட உட்கட்டமைப்பு அதிகாரி அவர்களே, இதை உரிய கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுப்பீர்கள் என மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

***-இரா.குமரேசன், கினலன், எல்ல.***

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

## மக்கள் சேவையில் முரசு!

'**மலசல** கழிவு நீரும் அதிகாரிகளின் பாராமுகமும்' என்ற தலைப்பில் உங்கள் பக்கம் பகுதியில் என் கடிதத்தை வெளியிட்டிருந்தீர்கள். அதற்காக மிகமிக நன்றி. அதன் பலனாகப் பாதையின் பாரிய குழி திருத்தி அமைக்கப்பட்டுவிட்டது. மக்கள் சேவையில் தினமுரசின் மகத்தான சேவை பாராட்டுக்குரியது. வாசகர்களின் கருத்துக்கு முதலிடம் கொடுக்கும் தினமுரசின் சேவை தொடர எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றேன்.

*-ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு - 15.*

## முரசின் தர்மம்!

**கடந்த** 664ஆவது தினமுரசில் சிந்தியா பதில்கள் கிண்டலாகவும், ஆச்சரியமாகவும் இருந்தன. ஆசிரியர் கடிதம் அர்த்தமுள்ளதாகவுமிருந்தது. சில செய்திகளை தினமுரசு கூறுகிறது. அதைப் பல பத்திரிகைகள் ஏனோ மறுக்கின்றன?...இல்லை மறைக்கின்றன. பத்திரிகை தர்மத்தைப் பாதுகாக்கும் தினமுரசே!...உனக்கு எதிர்க்கருத்தும் தேவைதானே!...

*-அ்.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.*

## என் இனிய முரசே!

"முரசு"க்கு என் முதல் வணக்கம்.
நீ தாங்கி வரும் அம்சங்கள்
அனைத்தும்
மிகவும் பயனுள்ளது. ஒவ்வொரு
பக்கமும் எங்கள் வாழ்வில்
ஒவ்வொரு
பகுதியாகின்றன. உன்னை ஒரு
வாரம்
காணாவிட்டாலும் சுனாமியால்
பாதிக்கப்பட்டது போல் ஒரு பிரமை.
மெய்யாய் தரும் உன் விடயங்கள்
மெய்சிலிர்க்க வைக்கட்டும்.
வாழ்க நீ...வளரட்டும் உன் சேவை.
எங்கள் பாராட்டும் வாழ்த்தும்
என்றும்
உனக்கே சேரும்.

*-பி.சத்தியவாணி, மஸ்கெலியா.*

## முரசுக்கு நன்றிகள்

**கற்பிட்டி** பிரதேச சபைக்குட்பட்ட கொத்தாந்தீவு நூல் நிலையத்தில் காணப்பட்ட முக்கியமான சில குறைபாடுகளை தினமுரசு 'உங்கள் பக்கத்தில்' முரசு சுட்டிக்காட்டியதைடுத்து உடனடியாகச் செயற்பட்ட கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் ஜனாப் எம்.எஸ். சேகு அலாவுதீன், நேரில் நூல் நிலையம் சென்று அங்குள்ள குறைபாடுகளைக் கேட்டறிந்து, அக் குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

எனவே எமது பிரதேசத்திலுள்ள பெரும் குறையைத் தீர்க்க வழிவகுத்த முரசுக்கு எனது நன்றிகள்.

*-கவிமலர், முந்தல்.*

# யுத்தத்தை நிறுத்து;

## வடக்கு, கிழக்கு மக்களை வதைக்காதே!

### -தமிழ் பேசும் மக்களிடமிருந்து ஓர் உருக்கமான வேண்டுகோள்

வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்து அடிப்படை வசதிகளின்றித் தவிக்கும் ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட அகதி மக்களின் உடனடித் தேவைகளைக் கவனத்தில் கொண்டு அரசாங்கமும் புலிகளும் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யவேண்டுமென்று வடக்கு - கிழக்கு ஜனநாயகப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

2002ஆம் ஆண்டு அரசுக்கும் - புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டபோது இயல்பு வாழ்க்கை ஏற்படுமென்று வடக்கு - கிழக்கு மக்கள் எதிர்பார்த்தார்கள். பெருமளவுக்கு சுமுக நிலையும் ஏற்பட்டிருந்தது. ஆனால் அவ்வப்போது இடம்பெற்று வந்த அத்துமீறல் சம்பவங்கள் கடந்த வருடம் அதிகரிக்கத் தொடங்கின. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையோடு ஆரம்பித்த இந்த வன்செயல்கள், கடந்த நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலோடு மிகவும் மோசமடையத் தொடங்கின. ஜனநாயகத் தேர்தலைக் கூட நடத்த முடியாத அளவுக்கு அச்சுறுத்தல்களும் வன்செயல்களும் கட்டவிழ்த்து விடப்பட்டன. கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டினார். ஒன்பது நாட்கள் கழித்து நவம்பர் 27ஆம் திகதி புலித் தலைவர் பிரபாகரன் நிகழ்த்திய தனது பிறந்த நாள் உரையில், ஜனாதிபதி ராஜபக்ஷவை யதார்த்தபூர்வமான அரசியல் தலைவரெனப் பாராட்டியதோடு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவருக்கொரு சந்தர்ப்பம் வழங்குவோமெனத் தெரிவித்தபோது, தமிழ் மக்கள் அனைவருமே மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் இவ்வாறு கூறி ஒரு மாதம் கழிவதற்கிடையில் படையினர் மீது சிறு சிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 'மக்கள் படை' என்ற பெயரில் தமிழ் மக்கள் தாமாகவே இத் தாக்குதல்களை நடத்துவதாகப் புலிகள் இயக்கம் கூறிக்கொண்டது. பின்னர் படையினர் மீது கிளைமோர் தாக்குதல்கள் பெருமளவில் ஆரம்பிக்கப்பட்டதோடு மாற்றுக் கருத்துக் கொண்டவர்களும் கொல்லப்பட்டு வந்தனர். கடந்த டிசம்பர் மாதப் பிற்பகுதியில் உக்கிரமடைந்த படையினர் மீதான தாக்குதல்கள் மோதலாக வெடித்து அப்பாவிப் பொதுமக்களை பல்லாயிரக்கணக்கில் பலியெடுக்கும் அளவுக்கு இன்று வளர்ந்து விட்டிருக்கிறது. அன்று பிரச்சினைகள் எதுவுமின்றி இருந்த படையினர் மீது தாக்குதல்களை நடத்தி அவர்கள் பதில் தாக்குதல் நடத்தும் அளவுக்கு உசுப்பிவிட்டவர்களும் புலிகள்தான். தேவையற்ற இவ்வாறான தாக்குதல்கள்தான் எறிகணை, பல்குழல் பீரங்கித் தாக்குதல்கள் என்ற வகையில் மிகமோசமான அளவுக்கு வளர்ந்து விட்டிருக்கிறது.

மாவிலாறு விவகாரத்தை தேவையற்ற விதத்தில் புலிகள் இயக்கம்தான் உருவாக்கி அரசாங்கத்தையும் சீண்டிவிட்டது. இதன் தொடர்ச்சியாக முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மூதூருக்குள் நுழைந்து தாக்குதல்களை ஆரம்பித்தவர்களும் புலிகள்தான். 1990ஆம் ஆண்டு வடக்கில் நடத்தப்பட்ட இனச் சுத்திகரிப்பைப் போன்று மூதூரிலிருந்து 45 ஆயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம் மக்கள் இடம்பெயர்வதற்குக் காரணமாக அமைந்தவர்களும் புலிகள்தான். இதன் எதிரொலியாகத் திருமலையிலும் மூதூர் கிழக்கிலுமிருந்து 45 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தஞ்சம் தேடி இடம்பெயர்ந்திருக்கிறார்கள். முஸ்லிம் அகதிகளைப் போல் இவர்களும் பெரும் கஷ்டங்களையே அனுபவித்து வருகின்றனர். படையினர் மீதும் மக்கள் வாழும் பகுதிகளின் மீதும் புலிகள் தாக்குதல்களை நடத்திக் கொண்டு, பதில் தாக்குதல் நடத்தாமல் கை கட்டிக் கொண்டு இரு என்று அரசாங்கத்தை எதிர்பார்க்க முடியாது. அது மட்டுமல்ல, பலாலி விமானத் தளத்தின் மீது விமானத் தாக்குதல் நடத்தியதாக வீராப்புப் பேசியதும், யாழ்.குடா நாட்டிலுள்ள மக்களை இடம் பெயருமாறு எச்சரிக்கை விடுத்ததும் யுத்தத்திற்கான முஸ்தீபு என்பதை யாரும் மறுக்க முடியாது.

எறிகணைத் தாக்குதல்களால் ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டியில் மக்கள் தஞ்சம் அடைந்திருந்த பிலிப் நேரியார் தேவாலயம் தரைமட்டமாகியிருக்கிறது. இருபதுக்கு மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் எனவும் ஐம்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்திருக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. புலிகளே இந்த எறிகணைத் தாக்குதலை நடத்தினரென்று அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். தமது எச்சரிக்கையை ஏற்று மக்கள் இடம் பெயர மறுத்ததாலேயே புலிகள் இத் தாக்குதலை நடத்தினர் என்பது மக்களின் குற்றச்சாட்டு. மண்டைதீவுக்குள் நுழைந்து புலிகளே தாக்குதல்களை நடத்தியுள்ளனர். மண்டை தீவைக் கைப்பற்றியதாக முதலில் கூறிய புலிகள் பின்னர் அதனைக் கைவிட்டு ஓடியது ஏன்? புதுக்குடியிருப்பில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 61 பெண் பிள்ளைகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் நூற்றுக்கு மேற்பட்ட சிறுமிகள் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு யுத்தச் சூழ்நிலையை புலிகள் உருவாக்கியிருக்காவிட்டால் இத்தகைய அவலங்கள் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்காது. எனவே யுத்தம் நீடிக்கும் ஒவ்வொரு கணமும் துயரங்களைச் சந்திக்கப் போகின்றவர்கள் தமிழ் பேசும் மக்கள் தான் என்பதைப் புலிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தமிழீழம் கேட்கவில்லை. அவர்கள் கோரும் கௌரவமான தீர்வை துப்பாக்கிகள் மூலம் அல்ல, சமாதானப் பேச்சுகளினூடாகவே ஏற்படுத்த முடியுமென்பதைப் புலிகள் இயக்கம் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை நிலை தொடர்பாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் கூட்டம்

இலங்கையில் எழுந்திருக்கும் மோசமான யுத்தச் சூழ்நிலை மற்றும் கொழும்பில் பாகிஸ்தான் உயர்ஸ் தானிகருடன் சென்றுகொண்டிருந்த சிறப்புப் பாதுகாப்புப் படைத் தொடரணி மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் உட்பட பல குண்டுத் தாக்குதல்களையடுத்து இலங்கை நிலை பற்றி ஆராய்வதற்காக புதுடில்லியிலுள்ள பந்தோபஸ்து அதிகாரிகளின் அவசரக் கூட்டமொன்று நடைபெற ஏற்படாகியுள்ளதாகத் தெரியவருகிறது. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் புதுடில்லி சென்றிருந்தபோதும் கூட ஆயுதத் தேவைகள் பற்றிக் குறிப்பிட்டதாகவும் தகவலறிந்த புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை அண்மைய சில வாரங்களாக தமிழகம் வரும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்தும் ஆராயப்படுமெனத் தெரியவருகிறது.

இலங்கையில் அரச படையினருக்கும் புலிகள் இயக்கத்துக்குமிடையிலான பாரிய மோதல்கள் ஏற்பட்டிருக்கும் இத் தருணத்தில் இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கையில் பாரிய மாற்றமெதுவும் ஏற்படப் போவதில்லையென்று தமிழக ஆளுந்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. வைகோ, இராமதாஸ் போன்ற தமிழகத்திலுள்ள புலிச்சார்பு அரசியல்வாதிகள் சிறுசிறு சலசலப்புகளை ஏற்படுத்தினாலும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் விசேட பிரதிநிதியாக தமிழகம் வந்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசிய இந்திய பாதுகாப்பமைச்சின் ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்த கருத்துக்கள் இதனை உறுதிப்படுத்துவதாகவும் அவ் வட்டாரங்கள் கூறின. இலங்கைப் பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிடாதென்று தெரிவித்த நாராயணன், புலிகளை ஆபத்தான ஓர் இயக்கமென்று வர்ணித்தார். இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா அழுத்தத்தைப் பிரயோகிக்குமெனத் தெரிவித்த அவர், இந்தியா செல்வாக்குமிக்க நாடாக இருப்பதால் நோர்வே உட்பட இலங்கைப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட சகல நாடுகளும் அது குறித்து இந்தியாவோடு ஆலோசித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

## வானைப் பிளந்த அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் தேவாலய அழுகுரல்கள்!



அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் தேவாலயம்

ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டியில் கடந்த பதினொராம் திகதி வெள்ளிக்கிழமை புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை முப்பதைத் தாண்டலாமென்று தன்னார்வத் தொண்டர் நிறுவனப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். எறிகணை வீச்சினால் தரைமட்டமாகிய புனித நேரியார் தேவாலய இடிபாடுகளுக்குள் சிக்கிய சடலங்கள் சில இன்னமும் மீட்கப்படவில்லையென்றும் அவர் சொன்னார். தென்மராட்சியிலுள்ள புலோப்பளை, எழுதுமட்டுவாள், வரணி, கச்சாய், மீசாலை, கொடிகாமம் மற்றும் ஊர்காவற்றுறையிலுள்ள மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள மக்களை அங்கிருந்து இடம்பெயருமாறு எச்சரித்து விட்டுத் திடீரென கடந்த பதினொராம் திகதி மண்டைதீவுக்குள் நுழைந்த புலிகள் சரமாரியாக எறிகணைத் தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர். படையினருக்கும், புலிகளுக்குமிடையில் மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் தேவாலயத்துக்குள் தஞ்சம் புகுந்தனர். சிலர் பாதுகாப்புத் தேடி வேறு இடங்களுக்கு ஓடினர். இரு தரப்பினருக்குமிடையில் நடைபெற்ற சரமாரியான எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் பல்குழல் தாக்குதலின் போதே தேவாலயம் தரைமட்டமாகியது. தந்திரோபாய ரீதியாக முதலில் பின்வாங்கிய படையினர், புலிகளை உள்ளே நுழையவிட்டுச் சுற்றிவளைத்து நடத்திய தாக்குதலில் புலி உறுப்பினர்கள் பெருந்தொகையினர் கொல்லப்பட்டனரென்றும்யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் அல்லைப்பிட்டி வாசியொருவர் தெரிவித்தார். மக்களை இடம்பெயரச் செய்வதற்காக முதலில் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியவர்கள் புலிகளேயென்றும் அவர் சொன்னார். மக்கள் வாழும் பகுதிகளுக்குள் புலிகள் நுழைந்து நடத்தும் யுத்தத்தினால் பாதிக்கப்படுவது தமிழ் மக்களேயென்றும் அவர் சொன்னார்.

## புதுக்குடியிருப்புக் குண்டுவீச்சு உண்மை என்ன?



புதுக்குடியிருப்பு உடையார் கட்டிலுள்ள வள்ளிப்புனம் என்ற பகுதியில் விமானப்படையினர் நடத்திய தாக்குதலின்போது, இறந்தவர்கள் பெற்றோரை இழந்த ஆதரவற்ற சிறுமிகளென்று புலிகள் இயக்கம் தெரிவித்த குற்றச்சாட்டை அரசாங்கத்தின் பாதுகாப்புப் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல வன்மையாக மறுத்துள்ளார். பல்வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் பதினைந்துக்கும் பதினெட்டுக்குமிடையிலான வயதுடைய சிறுமிகளே கொல்லப்பட்டனர். நூறுக்கு மேற்பட்ட சிறுமிகள் காயமுற்றனரென்றும் 61 சிறுமிகள் கொல்லப்பட்டனரென்றும் புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது. வள்ளிப்புனத்தில் புலிகள் முன்னர் வைத்திருந்த சித்திரவதை முகாம், முல்லைத்தீவு நகர்ப் பகுதிக்கு அண்மையிலுள்ள வட்டுவாகல் என்ற இடத்துக்கு மாற்றப்பட்ட பின்னரே தாக்குதலுக்குள்ளான இடம் பயிற்சி முகாமாக மாற்றப்பட்டதாக முல்லைத்தீவுச் செய்திகள் கூறுகின்றன. சம்பவ இடத்தில் முதலுதவிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுவதே யுத்தத்தோடு சம்பந்தப்பட்டதுதான் என்கின்றனர் படைத்தரப்பினர். புலிகள் கூறுவதுபோல ஆதரவற்ற அநாதைப் பிள்ளைகள் தானென்றால், கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சடலங்களைப் பொறுப்பேற்க பெற்றோர்கள் வந்தன ரென்று பி.பி.ஸி. தமிழோசைக்கு இளந்திரையன் கூறியது பொய்யா? என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது. எது எப்படியிருந்தாலும் புலிகள் யுத்தத்தைத் தொடங்கியிருக்காவிட்டால் விமானக் குண்டு வீச்சு இடம் பெற்றிருக்காதேயென்று எழுப்பப்படும் கேள்வியை மறுக்க முடியாது.

## மூதூரில் கொலையுண்ட நிவாரண ஊழியர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு

மூதூர், அக்கரைச்சேனையில் கொல்லப்பட்ட 'பட்டினிக்கெதிரான நடவடிக்கை' என்ற பிரான்ஸ் தொண்டர் அமைப்பின் பதினேழு அப்பாவி மக்களின் குடும்பங்களும் மூதூரில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்வதால் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு அரசாங்கத்திடமும், சம்பந்தப்பட்ட தன்னார்வத் தொண்டர் நிறுவனத்திடமும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. கொலையுண்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில் 54 வயதான எஸ்.கணேஷ் என்பவரும் அவரது மகளான 26 வயதான கவிதா என்பவரும் அடங்குகின்றனர். கணேஷின் மகனான 22 வயதுடைய மாணவன் கஜன் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார். தாயார் சிவனேஸ்வரி இன்னமும் துயரிலிருந்து மீளமுடியாமல் அடிக்கடி அழுது கொண்டிருக்கிறார். ஏனைய தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் இவர்களுக்கு மனோரீதியாக உதவுவதோடு, வாழ்வாதார வசதிகளும் செய்து கொடுக்க வேண்டுமென்று பாதிக்கப்பட்டவர்களின் நெருங்கிய உறவினர்கள் தெரிவித்தனர். ஏனைய குடும்பத்தவர்களின் நிலைமையும் இதுதான்.

## யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த குடும்பப் பெண்களுக்குத் தையல் பயிற்சி



பயிற்சியில் கலந்துகொண்ட பெண்களில் ஒரு பகுதியினரையும் நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சின் செயலாளர் திருமதி வீ.ஜெகராசசிங்கம், அமைச்சரின் ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து கொழும்பில் வாழும், பொருளாதார ரீதியில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற குடும்பப் பெண்களுக்கான தையல் பயிற்சி நிலையம் கொழும்பு, இசிப்பத்தான மாவத்தையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கட்டடத் தொகுதியில் இப்பயிற்சி நிலையத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் ஆரம்பித்துவைத்தார். சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சு மேற்கொண்டு வரும் சமூக நலன்புரித் திட்டங்களின் ஓர் அங்கமாக அமைச்சரின் ஆலோசனையின் பேரில் இப்பயிற்சித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. ஆறு மாத காலம் வழங்கப்படும் இப் பயிற்சித் திட்டத்தின் முதற் கட்டத்துக்கு 23 குடும்பப் பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். பயிற்சியின்போது இவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவடைந்த பின்னர், சுயதொழில் வாய்ப்புகளில் ஈடுபடுவதற்கான உதவிகளும் வழங்கப்படுமென்றும் அமைச்சரின் ஆலோசகர் தெரிவித்தார். இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் திருமதி வீ.ஜெகராசசிங்கம், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எஸ்.தவராசா, அமைச்சின் தொழிற்பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் திரு.கோணேஸ்வரன் மற்றும் அமைச்சின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



முகமாலை முன்னரங்கப் பகுதியில் படையினருடன் நடைபெற்ற மோதலின்போது கொல்லப்பட்ட 79 புலிகளின் சடலங்களையும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும் கொடிகாமம் கிழக்கில் பத்திரிகையாளர்களை அழைத்துச்சென்று படையினர் காண்பித்தனர்.

## இப்படிச் சொன்னார் தூயவன்

"தமிழ் மக்களைத் துன்பப்பட வையுங்கள்; அப்போதுதான் தமிழ் மக்கள் எமக்கு ஆதரவு தெரிவிப்பார்கள்" என்று பிரபாகரன் 2000ஆம் ஆண்டு வன்னியில் பயிற்சி முடித்து வெளியேறிய புலி உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார். இவ்வாறு கருணா அணியின் பேச்சாளரான தூயவன் அம்பாறையில் கடந்த 14ஆம் திகதி தமது அரசியல் அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

## கேதீஸைக் கொன்றவர்கள் பிடிபடுவார்களா?

கேதீஸ்வரன் லோகநாதனின் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் விசேட புலனாய்வுக் குழுவுக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களையடுத்து வெள்ளவத்தையில் இரு வீடுகளிலும் கொட்டாஞ்சேனைப் பகுதியிலுள்ள விடுதிகளிலும் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. விசாரணைக்காக இருவரை அழைத்துச் சென்ற இரகசிய பொலிஸார், கொலைகாரர்களைக் கண்டுபிடித்துவிட முடியுமென்று நம்பிக்கை தெரிவித்தனர். கேதீஸ்வரனின் கையடக்கத் தொலைபேசிக்கு சம்பவ தினத்தன்று வந்த அழைப்புகள் குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தாலும் இனந்தெரியாத கொலைஞர்களின் பட்டியலில் கேதீஸின் மரணத்துக்கான சூத்திரதாரிகளும் இடம்பெறுவார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## மக்களை கேடயமாக பயன்படுத்தாதீர்கள்!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

**இலங்கையில்** சமாதான முயற்சிகள் சாத்தியத்தை இழந்து அதற்கான கதவுகள் இழுத்து மூடப்பட்டுவிட்டன. ஆயுத மோதல்கள் எந்தத் தரப்புக்கும் வெற்றியைத் தரப்போவதில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டபோதும், இருதரப்புமே மோதல் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றன. மாவிலாறு தண்ணீர் விவகாரத்தில் ஆரம்பமான மோதல்கள் வடக்கு - கிழக்கில் வியாபித்துள்ளன. படைகளுக்கும் - புலிகளுக்கும் பெருமளவிலான உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இருதரப்புமே உண்மைகளை மறைக்கின்றன. படைத்தரப்பின் சேத விபரங்கள் ஓரளவுக்கு தெரியவந்தபோதும், புலிகள் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் பெரிதும் மறைக்கப்பட்டுள்ளது. ஆனால் அரச தரப்பு தம்மிடம் 79க்கும் மேற்பட்ட புலிகளின் சடலங்கள் இருப்பதாகத் தெரிவிக்கின்றது. இதுதவிர, வடக்கில் 26000பேர் வரையான மக்களும் கிழக்கில் 94000 பேர் வரையான மக்களும் இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். பொதுமக்கள் தரப்பில் 600க்கும் 750க்குமிடையிலானவர்கள் மோதல்களில் அகப்பட்டு இறந்திருக்கலாமென்று அறியமுடிகிறது. சரியான கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டால் மக்களுக்கான இழப்பும், இறப்பும் இன்னும் அதிகரிக்கக் கூடும் என்ற அச்சமும் உள்ளது.

இதற்கிடையே கொழும்பில் ஈ.பி.டி.பீ.யின் முன்னாள் பா.உ.ரும், பனை அபிவிருத்திச் சபையின் தலைவருமான எஸ்.சிவதாசன் மீது 08.08.06 அன்று புலிகளால் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் அவர் படுகாயங்களுடன் உயிர் தப்பினார். ஒரு பாதுகாப்பு அதிகாரியுட்பட மூவர் உயிரிழந்தனர். 12.08.06 அன்று அரச சமாதானச் செயலகத்தின் பிரதிச் செயலாளர் கேதீஸ் லோகநாதனை, தெஹிவளையில் அவரது வீட்டில் வைத்துப் புலிகள் சுட்டுக் கொன்றனர். 14.08.06 அன்று பாகிஸ்தானின் புதிய தூதுவர் பசீர் வாலி முகமட்டை இலக்கு வைத்து ஆட்டோவில் பொருத்தி வைக்கப்பட்ட கிளைமோர் குண்டு புலிகளால் வெடிக்க வைக்கப்பட்டது. அதில் அவர் உயிர் தப்பினார். பாதுகாப்பு அதிகாரிகள் நால்வர் உட்பட 7 பேர் மரணமாகினர். வத்தளை, மாபொலையில் ஆயுதங்களுடன் வந்த லொறி கைப்பற்றப்பட்டது. இப்படியான சம்பவங்கள் கொழும்பில் தொடர்கின்ற வாய்ப்பும் அதிகமாகவே உள்ளது.

இதற்கிடையே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமது பணிகளை வடக்கு - கிழக்கில் நிறுத்திக் கொண்டு கொழும்பிற்கு நகரும் தமது முதற்கட்ட நகர்வைச் செய்துள்ளனர். தவிரவும் தாம் இலங்கையிலிருந்து வெளியேறுவது தொடர்பா கப் பரிசீலிக்கும்படி நோர்வேயைக் கேட்டிருக்கின்றனர். மறுபுறத்தில் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் உட்பட சர்வதேச நாடுகள் இலங்கையில் தொடரும் வன்முறைகளையும் கொலைகளையும் அடிக்கடி கண்டித்து வருவதோடு இருதரப்பையும் யுத்த நிறுத்தம் செய்து சமாதானப்பேச்சுக்களுக்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தியா நிலைமைகளை மிகக் கூர்மையாக அவதானித்து வருவது, ஒருபுறமிருக்க அரசியல் தீர்வு ஒன்றை முன் வைக்குமாறும் இலங்கை அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தி வருகிறது.

இவை எதையுமே பொருட்படுத்தாமல் வடக்கிலும் கிழக்கிலும் மோதல்கள் தொடர்கின்றன. புலிகள் முன்னேறித் தாக்குகின்றனர். ஆகவே அரசு தடுப்புத் தாக்குதலை நடத்துகின்றது என்று அரசும், அரசு வலிந்து தாக்குகிறது அதை முறியடித்து தாக்குகிறோம் என்று புலிகளும் கூறுகின்றனர். இருதரப்பும் இப்படிச் சொன்னாலும் முழு அளவிலான யுத்தமொன்று ஆரம்பித்துவிட்டதை உணர முடியாதளவுக்கு எவரும் அடிமுட்டாள்கள் அல்லர். சில ஊடகங்கள் பாதிக்கப்பட்ட மக்களிடமே பொய்யான கூற்றைத் திணிக்க முயற்சிப்பதையும் அவதானிக்க முடிகிறது.

யார் எதை வேண்டுமானாலும் சொல்லட்டும், செய்யட்டும். அப்பாவி பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும், இழப்புக்களை சுமத்தாத வகையிலும் நடந்து கொள்வதில் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புகள் நிதானித்துச் செயற்படவேண்டும். அப்பாவி மக்களை இலக்குவைக்கும் எந்த நடவடிக்கையையும் அனுமதிக்கமுடியாது. இலங்கை நாடு போருக்குள் வீழுந்து அழிந்து கொண்டிருக்கையில், மக்கள் காப்பாற்றுவாரின்றி அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கையில், வெறுமனே சர்வதேச நாடுகள் கண்டிப்பதோடு நிற்பது அர்த்தமற்ற செயற்பாடாகும். இனி யார் சொல்லியும் யுத்தம் நிறுத்தப்படும் சாத்தியம் கிஞ்சித்தும் இல்லை. ஆகவே மக்களைப் பாதுகாக்க வல்லமையுள்ள சர்வதேச சக்திகள் முயற்சிக்க வேண்டும். அதுவே இலங்கை மக்கள் தற்போது கொண்டிருக்கும் அதிக பட்ச எதிர்பார்ப்பாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## ஊரிலிருந்து....



**கடந்த** 11ஆம் திகதி மாலை முதல் யாழ் குடாநாட்டில் இடம் பெறும் சமரில் புலிகள் மேற்கொண்ட யுத்தம் 10 சதவீதம் மட்டும்தான். மிகுதி 90 சதவீதம் புலிகளுக்காக இன்னொரு ஆக்கள்தான் யுத்தம் செய்தவை எண்டார் மாஸ்டர்.

என்ன மாஸ்டர்! புலிக்காக யார் களத்தில இறங்கினது? ஆச்சரியத்துடன் கேட்டேன்.

வேற யார்? எங்கட தமிழ் ஊடகவியலாளர்கள்தான். பலாலியில புலிகளின்ர விமானத் தாக்குதல் எண்டதில இருந்து. தங்களத்தானே இராணுவ ஆய்வாளர்களாக நியமித்துக் கொண்ட தமிழ் பத்திரிகையாளர்கள் குடாநாட்டு வரைபடத்தையும் போட்டு சும்மா பூந்து விளையாடி விட்டிச்சினம். இந்தா யாழ்ப்பாணம் விழப்போகுது எண்டும், 40 ஆயிரம் படை எப்படி தப்பப்போகுது எண்டு கூட எழுதிச்சினம்.

புலி எள் எண்டதை எண்ணெய்யாக மாத்தி கொடுத்திச்சினம். இப்ப சாயம் வெளுத்துப் போச்சுது, நான் சொல்லுறது சரியோ எண்டார். சரிதான்.

# நிலச் சிறைக்குள் முஸ்லிம் இளைஞர்கள்; அவல நிலைக்குள் தமிழ் மக்கள்!

## மாவிலாறு - மூதூர் பற்றிய பிரேத பரிசோதனை

நரன்

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

**இந்த** வருடம் ஆரம்பிப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்னரேயே ஆரம்பிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட யுத்தம், மட்டுப்படுத்தப்படாத நீரோட்டம் போல மாவிலாறுக் கூடாகப் பாய்ந்தது, மூதூரையும் எட்டிப் பிடித்து, அதனை யும் தாண்டி யாழ் - குடாவுக்குள்ளும் பரவி, பாரிய யுத்தமாக வெடித்து நிற்கி றது. சில நிபந்தனைகளின் பேரில், மனிதாபிமானமற்ற ரீதியில் மாவி லாறு அணைக்கட்டைக் கடந்த 20ஆம் திகதி மூடிய புலிகள், கிட்டத்தட்ட இரு வாரங்களுக்குப் பின்னர் மனிதாபிமானக் காரணங் களுக்காக மாவிலாற்று நீரைத் திறந்து விட்டதாக அறிவித்தனர். மூடும்போது மனிதாபிமானத்தைப் பார்க்காத புலிகளுக்கு நீரைத் திறந்து விட்டபோது மனிதாபிமானம் அலை அலையாகச் சீறிப் பாய்ந்து வேடிக்கையானதுதான்.

மாவிலாறு அணைக்கட்டை திறக்கும் வரை தாக்குதல் நடத்துவோம் என்று கூறிய அரசாங்கம் அணைக்கட்டுத் திறக்கப்பட்ட பின்னரும் தாக்குதலைத் தொடர்ந்தது. இன்னமும் மோதல் தொடர்கிறது. மாவிலாறு அணைக்கட்டை மூடியமை மனிதாபிமானமற்ற செயல் என்று கூறியே படை நடவடிக்கைகள் ஆரம்பித்தன. இரு தரப்புகளுமே ஏராளம் தாராளமாக எறிகணை வீச்சுக்களை நடத்தியதால், எந்த வகையிலும் யுத்தத்தோடு சம்பந்தப்படாத அப்பாவிப் பொதுமக்கள் அபயம் தேடி இடம்பெயர்ந்தனர். மாவிலாறு விவகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மூதூருக்குள் புலிகள் நுழைந்தபோது - நிலைமை மேலும் மோசமடைந்தது. மனிதாபிமானத்தை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட மாவிலாறுப் பிரச்சினை மூதூருக்கூடாகப் பிரவாகித்துச் சென்றபோது மனிதர்கள் செத்து மடிந்தனர்.



மூதூரிலிருந்து இடம் பெயர்ந்து செல்லும் மக்கள்.

இருதரப்புக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் அபயம் தேடி ஓட்டம் பிடித்தனர். மூதூரில் மட்டும் ஏட்டிக்குப்போட்டியான தாக்குதல்களில் கிட்டத்தட்ட 400க்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனரென்று ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்கள் கூறுகின்றன. கிட்டத்தட்ட என்பது முஸ்லிம் இளைஞர்கள் புலிகளால் கைது செய்யப்பட்டு நிலச்சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ளனரென்றும் கூறப்படுகிறது.

1890ஆம் ஆண்டு பிரிட்டிஷாரினால் மாவிலாறுடன் சம்பந்தப்பட்ட மூல நீர்ப்பாசனத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. அல்லைக் குளத்திற்கு நீர்வழங்கும் நோக்குடனேயே பிரிட்டிஷார் இதனை நிர்மாணித்தனர். புலிகள் மாவிலாறு அணைக்கட்டை மூடிய போது பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதாக எழுந்த மனிதாபிமான குரல்களுக்கு புலிகள் செவிசாய்க்கத் தவறினர். அரசாங்கமும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் அணைக்கட்டைத் திறந்து விடுமாறு விடுத்த கோரிக்கைக்கு புலிகள் மதிப்பளிக்கவில்லை. இதற்கிடையில் பஞ்சசீல பௌத்த தர்ம கோட்பாட்டை மக்களுக்குப் போதிக்க வேண்டிய காவியுடைப் பிக்கு ஒருவர் மக்களைத் திரட்டிக்கொண்டு மாவிலாற்றைத் திறக்கப் போவதாகப் சண்டித்தனப் பாணியில் சூளுரைத்தார்.

இந்த 'ஸ்டன்ட்' விளையாட்டிற்கு படையினர் அனுமதியளிக்கவில்லை. பிக்குவும் அவரது போராளிகளும் வந்த வழியில் திரும்பிச் சென்றுவிட்டனர்.

"மாவிலாறு விவகாரம், மக்களுக்குத் தோல்வி, தொடரும் தாக்குதல்கள் நீடிக்கும் அபாயம்" என்ற தலைப்பில் கடந்த வாரம் எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் எழுதப்பட்ட ஆய்வு விடயதானம் உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளது. கிழக்கில் ஆரம்பித்த மோதல்கள், வடக்கு வரை நீடித்துச் சென்றுள்ளன. எறிகணைத் தாக்குதல்கள், ஏவுகணைத் தாக்குதல்கள், பல்குழல் பீரங்கித் தாக்குதல்கள் என்ற இத்தியாதி வேட்டுகளால் அப்பாவி மக்கள் வீடு, வாசல்களை விட்டுத் தஞ்சம் தேடி ஓட்டம் பிடித்துள்ளனர். இன்னமும் ஓடிக் கொண்டிருக்கின்றனர். மோதலில் ஈடுபட்டுள்ள அரச படையினரும் புலிப் படையினரும் மக்கள் வாழும் இடங்கள் மீது தாக்குதல்களை நடத்தவில்லையென அடித்துச் சொன்னாலும் அவை உண்மையல்ல என்பதை மக்களின் அவலங்கள் அம்மணமாகத் தோலுரித்துக் காட்டுகின்றன. பிந்திக் கிடைத்த செய்திகளின்படி வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை ஒன்றரை இலட்சத்தை எட்டிக் கொண்டிருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. பலியானவர்களின் எண்ணிக்கையை ஊர்ஜிதப்படுத்தக்கூடிய திட்டவட்டமான தகவல்களைப் பெற முடியவில்லை. இருந்தாலும், இறந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் எட்டியிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. அங்கவீனமுற்றவர்கள், காயமுற்றவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டியிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. மாவிலாறு 'நீர் யுத்தம்' மட்டும் இரு தரப்புக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மக்களை இடம்பெயரச் செய்திருக்கிறது. அதன் பின்னர் மூதூரில் இடம்பெற்ற மோதல்களால் மூன்று இனங்களையும் சேர்ந்த நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். வடக்கே கிளாலி வாவிப் பகுதி, ஊர்காவற்றுறை, வடமராட்சி, தென்மராட்சி மற்றும் குருநகர், பாசையூர், கரையூர், அரியாலை உட்பட யாழ்நகரப் பகுதிகளிலிருந்து 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாக ஆரம்பத் தகவல்கள் தெரிவித்தன.

இராணுவ முகாம்களுக்கு அண்மையில் வாழும் மக்களை இடம்பெயருமாறு புலிகள் விடுத்த எச்சரிக்கையையடுத்தே மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். யாழ்ப்பாணம், பாசையூருக்கு மூன்று மைல்கள் அப்பாலுள்ள கௌதாரிமுனை அல்லது கல்முனைப் பொயின்றிலிருந்து பலாலி விமான தளத்தின் மீது புலிகள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி யிருக்கின்றனர்.

நீண்ட தூரம் செல்லக் கூடிய 130 மில்லிமீற்றர் ஏவுகணைக் கொண்டு புலிகள் இத் தாக்குதல்களை நடத்தியிருக்கலாமென்று படைத்தரப்பினர் கூறுகின்றனர். இத் தாக்குதலின்போது பெல் 212 ரக ஹெலிகொப்டரொன்று சிறு சேதத்துக்கிலக்காகியதைப் படைத்தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் பலாலி படைத்தளத்தின் மீது விமானத் தாக்குதல் நடத்தியதாகப் புலிகளின் நிதர்சனம் இணையத்தளம் படுபொய்யான செய்தியை வெளியிட்டிருந்தது. இதனை அப்படியே சில தமிழ்ப் பத்திரிகைகள் காப்பியடித்துப் பிரசுரித்துப் புலிகளின் பலமென்று மார்தட்டிக் கொண்டன. புலிகளிடம் நான்கு சிறிய ரக விமானங்கள் இருப்பது உண்மைதான். ஆனால் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் செல்லக் கூடிய சக்தி வாய்ந்த விமானங்கள் புலிகளிடம் இல்லையென்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

"பலாலி விமானத் தளம் மீது புலிகள் இயக்கம் விமானத் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறதே. அது உண்மையா?" என்று லண்டன் பி.பி.ஸி. தமிழோசைச் செய்தியாளர் கேள்வி எழுப்பியபோது, "எமது மூலோபாய நடவடிக்கைகள் பற்றி கூறமுடியாது" என்று புலிகளின் இராணுவப் பேச்சாளரான இராசையா இளந்திரையன் கூறியிருப்பதானது, புலிகளின் பொய்யை அம்பலமாக்குகிறது. அரசாங்கப் படையினர் மத்தியில் பீதி மனோபாவத்தை உருவாக்குவதற்காக அல்லது தமது தரப்பினர் மத்தியில உற்சாக மனோபாவத்தை ஊட்டுவதற்காகப் புலிகள் இவ்வாறான கதைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கலாம். இதைப் போன்று படைத்தரப்பினரும் கதையளப்பதை மறுத்துவிட முடியாது. இம்மாதம் முதலாம் திகதி அல்லது இரண்டாம் திகதி வாக்கில்தான் புலிகள் மூதூருக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இரு நாட்கள் அங்கு தங்கியிருந்த புலிகளை அரசாங்கப் படைகள் விரட்டியடித்து விட்டதாக அரச தரப்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. நான்காம் திகதி இரவோ அல்லது ஐந்தாம் திகதி காலையோதான் அக்ஷன் பாம் என்ற பிரெஞ்சுத் தன்னார்வத் தொண்டர் நிறுவனத்தில் பணிபுரிந்த 17 அப்பாவித் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். திங்களன்று ஏழாம் திகதி சி.என்.என். தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த அமைச்சரொருவர் புலிகள்தான் இக் கொலைக்குப் பொறுப்பென்று கண்கண்ட சாட்சிகள் தெரிவித்திருப்பதாகப் பேட்டியளித்திருந்தார். ஆனால், ஆறாம் திகதி திங்கட்கிழமை இச்சம்பவம் தொடர்பாகக் குறிப்பிட்ட பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இக்கொலைகளுக்கு யார் பொறுப்பென கூறுவதற்கான ஆதாரபூர்வமான சாட்சியங்கள் எதுவும் கிடைக்கவில்லையென்று தெரிவித்திருக்கிறார். பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு மாஜிஸ்திரேட் விசாரணையின் பின்னரே விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியுமென்றும் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கிடையில் ஐ.நா.சபை, ஐரோப்பிய ஒன்றியம், சம்பந்தப்பட்ட பிரெஞ்சுத் தொண்டர் நிறுவனம் ஆகியவை உள்ளிட்ட சர்வதேச ஸ்தாபனங்கள் இக்கொலையைக் கண்டித்த பின்னர் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் வெளியிட்ட அறிக்கையில், இந்த அப்பாவிக் குடிமக்களின் படுகொலை சம்பந்த மான விசாரணை முடிவுகளைக் கொண்டு இதில் சம்பந்தப்பட்ட வர்கள் எத்தகைய உயர் நிலையில் இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று உறுதியளிக்கப்பட்டிருந்தது. அப்படியானால் யார் இந்தப் படுகொலையைச் செய்தார்களென்ற ஈடாட்டம் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்திற்கு ஏன் ஏற்பட்டது? மிலேச்சத்தனமான இந்தப் படுகொலைகளில் யார் ஈடுபட்டாலும் அவர்களைக் கண்டு பிடித்து தண்டிப்பதன் மூலமே தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியுமென்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மோதல் இப்போது வடக்குக் - கிழக்கையும் தாண்டி கொழும்புக்கும் நகர்ந்துவிட்டது. கரந்தெனிய பொலிஸாரால் பெந்தோட்டையில் ஆயுதங்களுடன் லொறியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த ஆயுதங்கள் எல்பிட்டியிலுள்ள தோட்டமொன்றிற்கு எடுத்துச் செல்லப்படவிருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதே வேளை, வத்தளையிலும் ஆயுதங்களுடன் வேறொரு லொறி கைப்பற்றப்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி யிலும், கொள்ளுபிட்டி யிலும் குண்டுத் தாக்குதல் களும் கிளைமோர் தாக்கு தல்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. அரசாங்க சமாதானச் செயலகத்தின் பிரதிச் செயலாளர் நாயகம் கேதீஸ்வரன் லோகநாதன் தெஹிவளையில் உள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கையில், நாம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கூறியது போல் நான்காவது ஈழ யுத்தத்திற்கான முஸ்தீபுகளில் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

கையாலாகாத கண்காணிப்புக் குழு நாட்டை விட்டே வெளியேறப்போவதாக மிரட்டிக் கொண்டிருக்கிறது. தமக்குப் பாதுகாப்பு இல்லை என்பதற்காக கடல் கண்காணிப்பைக் கைவிட்ட அதே குழு, மூதூர் மோதல்களின் போது தம்மை அங்கு சென்று கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட அரசாங்கம் அனுமதிக்கவில்லையென்று அழுது வடிந்திருக்கிறது. இதைப் போன்றுதான் கண்காணிப்புக் குழுத் தலைவர் அரசாங்கத்துக்கோ அல்லது பாதுகாப்புப் பிரிவுக்கோ அறிவிக்காமல் தன்னிச்சையாக மாவிலாறு அணைக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குச் சென்று விட்டு, வீரபாண்டிய கட்டபொம்மன் படப் பாணியில் வசனம் பேசியிருக்கிறார். புலிகள் இயக்கமும் அரசாங்கமும் மக்களின் நலனை மனதிற் கொண்டு, யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டும். கடந்த நான்கு வருட யுத்தநிறுத்த காலத்தில் புலிகள் யுத்தத் தயாரிப்புகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். புலிகளின் தாக்குதல்களையடுத்து சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு சிங்கள இளைஞர்களைக் கொண்ட ஊர்க்காவல் படை அணிகள் அனுப்பப்பட்டு வருகின்றன. முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கமே ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப் போவதாகத் செய்திகள் வெளிவருகின்றன. மூதூர் சம்பவத்தையடுத்து முஸ்லிம் இளைஞர்கள் விரக்தியடைந்து ஆயுதமேந்தக் கூடிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்களென்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எச்சரித்துள்ளார். இவையெல்லாம் அப்பாவித் தமிழ் மக்களைப் பொறுத்த வரை நல்ல சகுனங்களாக அமையப் போவதில்லை என்பதைப் புலிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். மூதூர் மோதல்களின் விளைவாக திருகோண மலையிலுள்ள கட்டைபறிச்சான், சேனையூர், கடற்கரைச்சேனை சம்பூர், கூனித்தீவு, சூடைக்குடா, இலக்கந்தை, அம்மன்நகர், தங்கநகர், சகாயபுரம், பாட்டாளிபுரம், உப்பூரல், பூநகர், ஈச்சிலம்பற்று, மாங்கேணி ஆகிய புலிக்கட்டுப்பாட்டுக் கிராமங்கள் உட்பட இன்னும் பல கிராமங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் கதிரவெளி, வெருகல் போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்திருக்கிறார்கள். இவர்களின் அன்றாடத் தேவைகளையும் அடிப்படைத் தேவைகளையும் ஈடுசெய்து, அவலங்களைப் போக்க தம்மால் முடியாதென்பதைப் புலிகள் இயக்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதேபோன்று வாழ்விடங்களை விட்டு வெளியேறுமாறு யாழ்.குடாநாட்டிலுள்ள மக்களுக்குப் புலிகள் விடுத்த எச்சரிக் கையால் யாழ்.மக்கள் தேவாலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் தேடி வருகிறார்கள். மனிதாபிமானக் கண்கொண்டு புலிகள் தமது செயற்பாடுகளை மீளாய்வு செய்ய வேண்டுமென்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாகும்.

அண்மையில் இந்திய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்த கருத்துக்களை இலங்கை அரசு கவனத்திற் கொள்ள வேண்டும். புலிகள் இயக்கம் ஆபத்தான இயக்கமென்றும் இலங்கை அரசாங்கம் நீடித்து, நின்று நிலைக்கக்கூடிய அதிகாரப் பகிர்வு யோசனைகளை முன்வைக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதை இலங்கை அரசு கவனத்திற்கொள்ளுமா?

# புதிய போர்முனைகளும் பொது மக்களின் அவலமும்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் முழுமையான போர்க்கால நிலை தோன்றியுள்ளது. மாவிலாறு நீரைப் புலிகள் தடுத்து நிபந்தனைகள் தெரிவித்ததைத் தொடர்ந்து ஆரம்பமான அரசின் அணை மீட்புத் தாக்குதல்களும், இதற்குப் பதில் தாக்குதல் என்ற பெயரில் புலிகள் மூதூரில் தாக்கியதும் இன்று கிழக்கின் அம்பாறை வரையும், வடக்கின் தீவகம் வரையும் வியாபித்துள்ளது. இந்த மோதல்களில் படைத் தரப்பிலும், புலிகள் தரப்பிலும் பெருமளவிலான இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அதேபோல் இரு தரப்பிலும் காயப்பட்டவர்களின் எண்ணிக்கையும் ஏராளமாகவே உள்ளது. ஆனால் இரண்டு தரப்புமே உண்மையான செய்திகளை வெளியில் சொல்லாமல் மூடிமறைக்கிறார்கள். அதற்கு சில ஊடகங்களும் நன்றாக பக்கவாத்தியம் பாடுகின்றன. சண்டை நடைபெறும் இடங்களில் களநிலைமைகள் எப்படி இருக்கிறதோ என்பது ஒருபுறமிருக்க, ஊடகங்கள் தமது பங்குக்கு ஒரு யுத்தத்தை தயார் பண்ணி நடத்திக் கொண்டிருக்கின்றன. சண்டையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் என்னதான் தமது தரப்பு இழப்புகளையும், பின்னடைவுகளையும் மறைத்தாலும், இதற்குள் அகப்பட்டு உயிரிழப்புகளையும், உடைமை இழப்புகளையும் அனுபவிக்கும் பொதுமக்கள் தொடர்பான விடயங்களை மறைக்க முடியாது என்பதை மக்களின் இழப்புகளும், இடப்பெயர்வுகளும் சாட்சியங்களாக இருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மூதூர் மற்றும் மூதூரை அண்டிய அயல் கிராமங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் திருமலை மாவட்டத்தின் பல கிராம மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். குறிப்பாக மக்களின் இடப்பெயர்வு இரண்டு முனைகளாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் நிகழ்ந்துள்ளது.

மூதூர், மூன்றாம் கொலனி, இறால்குழி, மேன்காமம், கங்குவேலி, மல்லிகைத்தீவு, மணல்சேனை, பெருவெளி, பச்சநூல், கிளிவெட்டி, பாரதிபுரம், பாலத்தடிச்சேனை, தோப்பூர், பாலத்தோப்பூர், சேருவில பகுதிகளில் இருந்து மக்கள் முற்றாக வெளியேறியுள்ளனர். முஸ்லிம் மக்கள் மட்டும் இதுவரை 45,540 பேர் அகதிகளாகியுள்ளனர். இவர்கள் 44 இடங்களில் தங்கியுள்ளனர்.



மூதூரிலிருந்து மக்கள் இடம் பெயரும் காட்சி

இவர்களில் பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் கந்தளாயிலும், கிண்ணியாவிலும், சேருநுவரவிலும் உள்ளனர். கந்தளாயில் 36,000 பேரும் கிண்ணியாவில் 3,750 பேரும், சேருநுவரவில் 900 பேரும் அகதிகளாகவுள்ளனர். அத்துடன் நீர்கொழும்பு காமச்சோலையில் 160 குடும்பங்களும், மாவனெல்லையில் 132 குடும்பங்களும், வாழைச்சேனையில் 30குடும்பங்களும், தம்புள்ளையில் 168 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.


தமிழ் மக்கள் திருமலை நகரப் பகுதிக்குள்ளாகவே அகதிகளாகியுள்ளனர். சென்.ஜோசப் கல்லூரியில் 200 குடும்பங்களும், லிங்கநகர் ஸ்ரீ கோணலிங்கம் வித்தியாலயத்தில் 150 குடும்பங்களும், உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் 100 குடும்பங்களும், புனித வளநாரில் 150 குடும்பங்களும், சென். சேவியர் மகாவித்தியாலயத்தில் 80 குடும்பங்களும், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் வித்தியாலயத்தில் 100 குடும்பங்களும், மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில், 200 குடும்பங்களுமாக, சுமார் 7,000பேர் அகதிகளாகவுள்ளனர். இது தவிர, ஆலங்கேணி, ஈச்சந்தீவு பகுதிகளில் ஓடி வரும் மக்கள் இடைத்தங்கல் முகாம்களாகத் தங்கியுள்ளனர். அங்கு சுமார் 300 குடும்பங்கள் தங்கியிருக்கின்றன. கட்டைப் பறிச்சான், சேனையூர், கடற்கரைச்சேனை, சம்பூர், கூனித்தீவு, சூடைக்குடா, இளக்கந்தை, அம்மன் நகர், தங்கபுரம், சகாயபுரம், பாட்டாளிபுரம், உப்பூரல், பூநகர், ஈச்சிலம்பற்று, இலங்கை துறை முகத்துவாரம், முட்டிச்சேனை ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி இடம் பெயர்ந்து தற்போது வாகரை, கதிரைவெளி மாங்கேணி ஆகிய பகுதிகளில் தங்கியுள்ளனர். இவர்கள், மரநிழல்களிலும், பழைய போக்குகளுக்குள் கீழும், மாட்டு வண்டி, உழவு இயந்திரம் ஆகியவற்றுக்குக் கீழும் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வந்த மக்களை விடவும் இந்த மக்களின் நிலைமை மிக மோசமாகவுள்ளது. அரச கட்டுப்பாடற்ற பகுதி என்பதால் படையினரின் எறிகணைகள் எந்த நேரமும் ஏவப்படக்கூடிய அபாயம் இருப்பதும், புலிகள் அந்தப் பகுதிகளிலிருந்து தாக்குதல்களை நடத்துவதும் நீடிக்கின்றமையால் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான உதவிகளை வழங்குவதிலும், அந்தப் பணிகளுக்காக அரச நிறுவனங்களையும், தொண்டு நிறுவனங்களையும் அங்கு செல்ல அனுமதிப்பதிலும் அரசுக்கு தர்மசங்கடமான நிலை இருக்கிறது.

> **இரு தரப்பும் என்னதான் தமது தரப்பு இழப்புகளையும், பின்னடைவுகளையும் மறைத்தாலும், இதற்குள் அகப்பட்டு உயிரிழப்புகளையும், உடைமை இழப்புகளையும் அனுபவிக்கும் பொதுமக்கள் தொடர்பான விடயங்களை மறைக்க முடியாது என்பதை மக்களின் இழப்புகளும், இடப்பெயர்வுகளும் சாட்சியங்களாக இருக்கின்றன.**

இயற்கை அனர்த்தமோ, போர் அனர்த்தமோ ஏற்படும் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவிகள் கிடைக்காது என்பதும், அரசின் உதவிகள் தாமதிப்பதும் வழமையானது. அதேவேளை, தொண்டு நிறுவனங்களின் பணிகூட பாதுகாப்புக் காரணங்களுக்கு உட்பட்ட வகையிலேயே இருக்கும். இத்தனையையும் மீறி உதவிகள் மக்களைச் சென்றடைந்தாலும், சில குறைபாடுகள் இருக்கவே செய்யும். அதாவது, அரசு தரும் நிவாரணம் போதாது அல்லது நிவாரணம் முழுமையாகக் கிடைக்கவில்லை, மோசடி நடைபெற்றுள்ளது என்று புகார்கள் வரும். இதில் ஒரு உண்மை என்னவென்றால் அகதிகளான மக்களுக்கு திருப்தியான வகையில் இதுவரை எந்த நாட்டிலும் உதவிகள் வழங்கப்பட்டதில்லை. அது முடியாது. நிலைமை இப்படி இருக்கையில், அரச கட்டுப்பாட்டற்ற பகுதியில் இருக்கும் சுமார் 40 ஆயிரம் மக்களின் நிலைமையும், தேவையும் எப்படி இருக்கும் என்பதை புரிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

இது தவிரவும், மூதூரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நடந்த தாக்குதல்களில், முஸ்லிம்கள் 75 பேர் இறந்துள்ளதாகவும் 100 பேர் காணாமல் போயுள்ளதாகவும், 56 பேர் காயப்பட்டுள்ளதாகவும், தமிழர்களில் 83 பேர் இறந்துள்ளதாகவும், 600 பேர் வரை காயப்பட்டிருப்பதாகவும், 55 பேர் காணாமல் போயிருப்பதாகவும் இதுவரையில் வெளியான தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தகவல்கள் முழுமையானவை அல்லவென்றும், இந்த எண்ணிக்கைகள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும் மக்கள் கூறுகின்றனர். பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து இன்னும் சரியான கணிப்பீடுகள் செய்யப்படவில்லை என்றும் மக்கள் கூறுகின்றனர். கிழக்கு நிலைமைகள் இன்னும் மோசமடையக்கூடும் என்ற அச்சமும் பீதியும் மக்கள் மனதில் காணப்படுகிறது.



யாழிலிருந்து மக்கள் இடம் பெயரும் காட்சி

வடக்கில் இராணுவத்தின் முன்னரங்க நிலைகளை நோக்கி 11.08.2006.திகதி புலிகள் ஆரம்பித்த தாக்குதல் மூன்று

அலசுவது
- மதியூகி -

நாட்களாக நீடித்து வருகிறது. இந்தத் தாக்குதல்கள் மூன்று போர்முனைகளாகப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது. முதல் போர்முனையானது, முகமாலை கிழக்காக நாகர்கோயிலிலிருந்தும், முகமாலை மேற்காகக் கிளாலி ஊடாகவும் புலிகள் ஊடறுத்துத் தாக்குதலை நடத்தினர். இரண்டாவது போர்முனையாக கெற்பலி - கிளாலி ஊடாக கச்சாய் வழியான கடல் வழியாகவும் ஒரு ஊடறுப்புத் தாக்குதலை புலிகள் நடத்தினர். மூன்றாவது போர்முனையாக தீவகப் பகுதிகளூடாக மண்டைத்தீவு, அல்லைப்பிட்டி, வேலணை ஆகிய பகுதிகளுக்குப் பூநகரி, கல்முனை பகுதிகளிலிருந்து வந்து தரை இறங்கி கடல் வழியாகவுமான ஒரு ஊடறுப்பை புலிகள் நடத்தினர். இந்தத் தாக்குதல்களில் படைத்தரப்பு புலிகளை உள்வாங்கித் தாக்கும் தந்திரத்தைக் கையாண்டுள்ளது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)

## அதிரடி அய்யாத்துரை



**பம்பலப்பிட்டி** டிக்மன் ரோட்டில பனை அபிவிருத்திச் சபையின்ர தலைவருக்கு வச்ச குண்டு வெடிச்சதில ரெண்டரை வயதுச் சிறுமி அஸ்வினி பலியானாள். பிறகு அந்தச் சிறுமியின்ர தாயும் படுகாயமடைஞ்சிருந்து பலியானார். பாவம், அவை ரொம்பவும் ஏழ்மையானவை. குண்டு வெடிப்பில பலியாகிட்டினம் எண்டது ஊருக்கே தெரியும். தெரியாத விஷயம் என்ன தெரியுமோ? அவை வாழ்ந்த சித்தார்த்த பகுதிக்கு மேலகத்தில முன்னணி நடத்திற கணேசனாரும், எங்கட மண்ணெண்ணையாரும் போட்டி போட்டுக் கொண்டு வாக்குக் கேட்டு வந்திச்சினமாம். அவை அடிபுடிப்பட்டு ஒட்டின போஸ்டர்கள் கூட அங்க இன்னும் இருக்குதாம். அப்புடியானவை உந்தச் சிறுமியின்ர மரணத்துக்கோ, தாயின்ர மரணத்துக்கோ கூட ஆறுதலும் சொல்லயில்லையாம், தலையையும் காட்டயில்லையாம் எண்டினம் அங்க இருக்கிற மக்கள். ஏன் தெரியுமோ? ரெண்டெழுத்தார் வச்ச குண்டுக்குப் பலியானவையின்ர செத்த வீட்டுக்குப் போனால் அதை ரெண்டெழுத்தார் மிஸ் அண்டர்ஸ்டேண்டிங் பண்ணிப்போடுவினம் எண்டதாலதான் போகாமல் அவாய்ட் பண்ணிப்போட்டினமாம். உதில மண்ணெண்ணையாரை விடவும் கணேசனார்தான் அந்த மாவத்தையை தன்ர ஏரியா யாரும் உள்ள வராதிங்கோ எண்டு எலக்ஷன் காலத்தில சொன்னவராம். எப்புடிப் போகுது பங்காளிகளின்ர பொலிரிக்ஸ், பாத்தியளோ...

**கூத்தமைப்பு** எம்.பி. ஜெயமான ஆனந்தமூர்த்தியின்ர வீடு கிட்டடியில ஆர்.பி.ஜி.தாக்குதலுக்கு உள்ளானதெண்டதும், அதில உவரும் குடும்பமும் தப்பிப் பிழைச்சினமெண்டதும் நீங்கள் கேள்விப்பட்ட நியூஸ்தானுங்கோ. கேள்விப்படாத லேட்டஸ்ட் நியூஸ் என்ன தெரியுமோ? அவர் அந்த தாக்குதல் நடந்த வீட்டுப் போட்டோவையும் தன்ர எம்.பி.பவரையும் காட்டி தன்ர குடும்பத்தோடை நாட்டை விட்டுப் போக வீஸா கேட்டுத் திரியிறாராம். உப்பிடி எம்பஸிகளுக்கு திரியிறதின்ர ஒரு கட்டமாக எலிசபெத் இராணியின்ர நாட்டுக்கு அப்பிளிகேஷன் குடுக்கிறதுக்கு கொள்ளுப்பிட்டியில இருக்கிற வீஸா விண்ணப்ப சென்டரில உள்ளுக்குக் குந்திக் கொண்டிருந்தவராம். அருகில நம்ம நண்பரும் இருந்திருக்கார்.

என்ன உதுக்க நிக்கிறியள்? எண்டு நம்மட நண்பர் சாதாரணமாகக் கேக்கவும்,

அதுக்க வச்சுப் பொய் சொல்ல முடியாமல் உண்மையைச் சொல்லிப் போட்டாராம். சரி, நாட்டு நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போகுது எண்டதாலை வசதியைப் பார்த்து குடும்பத்தோடை நாட்டை விட்டுப் போறது உத்தமம்தான். உதில நண்பர் என்ன கேக்குறார் எண்டால் குறுக்கு வழியால எம்.பி.யானதை மறந்து கொஞ்சமும் வெக்கமில்லாம இருக்கிற மக்களையும் கொலைக்கு அனுப்புற கதையளையும் அறிக்கைகளையும் வீரம் சொரிய அனுப்பிப்போட்டு, இப்ப உவர் மட்டும் குடும்பத்தோடை ஓடி ஒளிக்க நினைக்கிறது நியாயம் தானோ எண்டிறார். நியாயமில்லைத்தான். அதுக்காக என்ன செய்யமுடியுமுங்கோ...

**உங்களுக்கு** ஞாபகம் இருக்குமெண்டு நினைக்கிறன். யாழ்ப்பாண கூத்தமைப்பு எம்.பி. குதிரைக் கஜேந்திரன் எம்.பி.யாகி முதல் முதல பார்ளிமெண்டுக்குள்ள போய் தான் கூட்டிக் கொண்டு வந்த ஆக்களும், ஊடகக்காரரும் இருக்கினமோ எண்டு பார்த்துப்போட்டு ஆற்றின கன்னி உரையில "யுத்தம் துவங்கினால் யாழில இருந்து நாற்பதாயிரம் இராணுவத்தின்ர சடலங்களை தென் இலங்கை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும்" எண்டு சொன்னவர்.

அப்புடிப் பேசினவர் போன கிழமை யாழில சண்டை நடக்கேக்க, ஆமை ஓட்டுக்குள்ள தலையை இழுக்குமாப்போலை இழுத்து ஒளிச்சுப் போட்டார். மல்டிபெரல் ஆடின கபடி ஆட்டத்தில மருண்டு போய் இருந்தவர் நிலைமை சாதுவா வெளிக்கவும்தான் புத்துக்குள்ள இருந்து வந்தவர் போல "ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவேணும், தாக்குதல்கள் நிறுத்தப்பட வேணும்" எண்டு ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுறார். யாரைப் பாத்து நாற்பதாயிரம் பொடி வரும் எண்டு சொன்னாரோ, அவையைப் பார்த்து சண்டையை நிப்பாட்டுங்கோ எண்டு கோரிக்கை விடுக்கிறார். குதிரையாருக்கு அண்டைக்கே பதில் சொல்லியிருந்தால் புரிஞ்சிருக்காது எண்டதாலதான், காலம் தாழ்த்தி எண்டாலும், மல்ட்டியாலை மறுமொழி குடுத்திருக்கினம் எண்டு குதிரையாருக்கு வெறுப்பேத்திறவை சொல்லினமுங்கோ...

**சண்டை** ஒண்டு ஆரம்பமாகி வடக்கிலையும், கிழக்கிலையும் சனம் அங்காலை, இங்காலையுமா திரியினம். ஆனால் கூத்தமைப்பு எம்.பி.மார் இருபத்திரெண்டு பேரில ஒருவர் கூட தங்கட தங்கட சொந்தத் தொகுதியில போய் அல்லோலகல்லோலப் படுகிற சனத்துக்கு ஆறுதல் சொல்லாமல், கொழும்பில பதுங்கி இருந்து கொண்டு அறிக்கைப் போர் நடத்திக் கொண்டிருக்கினமுங்கோ. அதிலையும் கேவலம் என்ன தெரியுமா? தங்கட அறிக்கையை ஊடகங்கள் கட்டாயம் செய்தியாகச் சொல்ல வேணும் எண்டு கெஞ்சிறதுதானுங்கோ. உதாரணத்துக்கு, ஜனாதிபதிக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கினம் எண்டொரு கடிதம் எண்டால் அந்தக் கடிதம் ஜனாதிபதிக்குக் கிடைச்சுதோ? அதுக்கு உரிய நடவடிக்கை எடுபட்டுதோ? எண்டதுகளை விட்டுப் போட்டு நாங்கள் கடிதம் எழுதினனாங்கள் எண்டதை மட்டும் ஊடகங்களுக்கு அனுப்பிப் போடினமாம். ஏனெண்டால் தாங்கள் தலைநகரில இருந்து வேலை செய்யுறம் எண்டதைக் காட்டத் தானாம்.

ஆனால் கூத்தமைப்பு எம்.பி.மார் கேட்டால் அவை யாழ்ப்பாணம் போறதுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும் எண்டு படைத்தரப்பு சொல்லுது. பாதை மூடியிருக்காம் எண்டு இவை சொல்லினம். எப்புடி பகிடி பாத்தியளோ?

**மின்னிற** நிகழ்ச்சி நடத்திர ரங்கமணி, நிகழ்ச்சி நடத்திறதை ஏதோ நாட்டின்ர நிர்வாகத்தை நடத்திற நினைப்பில நடத்திக் கொண்டிருக்காருங்கோ. இப்ப கொஞ்ச நாளா ஒவ்வொரு நிகழ்ச்சியிலையும் யாரையோ நினைச்சுக் கொண்டு நிகழ்ச்சிக்கு சம்பந்தமில்லாத விஷயத்தைப் பேசிக்கொண்டிருக்கிறார் எண்டு சொல்லினம். 'அவலை நினைச்சு உரலை இடிச்ச மாதிரி' இவர் தன்ர மேதாவித்தனத்தைக் காட்ட வெளிக்கிட்டிருக்காருங்கோ. "உன்னுடைய கருத்தில எனக்கு உடன்பாடு இல்லையெண்டாலும் உனது கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க என்ர உயிரையும் தருவன்" எண்டு சொல்லுவினம். அதுபோலை ஜனநாயகம் தெரிஞ்சவை ஒரு சிரிப்போடை விட்டுப்போடுவினம். ஆனால் ஒரே கல்லில ரெண்டு மாங்காய் அடிக்கிற ரெண்டெழுத்தார், உவரைக் காயடிக்காமல் இருப்பினமோ எண்டு தெரியலை. உவர் அதிகாரமானவரின்ர காலில கிடக்கிறதை பரமசிவனின்ர கழுத்தில இருக்கிறதாக நினைச்சுக் கொள்ளுறார் போலை. இருக்குமிடத்தில ஒழுங்கா இருந்தால் தான் எல்லாம் சௌக்கியமெண்டதை ரங்கமணி புரிஞ்சுகொண்டால் எல்லாருக்கும் சௌவுக்கியமுங்கோ...வ்...

# கண்கள்

**"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."**


என்று வள்ளுவர் கூறுகின்றார். அவசியமானதைக் கற்று, அதன்படி வாழ்பவனுக்கே ரெண்டும் கண்கள். இல்லையெனின் அவையிரண்டையும் முகத்திலிருக்கும் புண்கள் என்று அவர் வலியுறுத்துகிறார்.

உலகத்துள்ளும் உலகத்துக்கப்பாலும் உள்ள அழகையும், அசிங்கத்தையும் பார்க்க கண்கள் நமக்குக் கிடைத்த வரப்பிரசாதம். சிரிக்கும் வாய்ப்பை மனிதனுக்கு மாத்திரம் கொடுத்து படைத்தவன், பார்வையில் அப்படி பாகுபாடு பார்க்கவில்லை. வெறுமனே பார்ப்பது மட்டும் கண்களின் பணியில்லை. கண்களின் அசைவுகளைக் கொண்டு இன்னொருவரின் மனதை வாசித்துவிடவும் முடியும். கண்களைப் பற்றிய என் வியப்பில் எப்போதும் முதன்மை வகிப்பது ஒன்றுதான். அதாவது இந்தக் கண்களால் எப்படி இத்தனை வர்ணங்களையும் பிரித்தறிய முடிகிறது என்பதுதான். பெண்ணைக் கட்டிக்கொடுப்பவர் சொல்வார் "என் கண்ணையே உங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்று அவர் ஏன் அப்படிச் சொல்கிறார் என்று அவருக்குத் தெரியுமோ தெரியாதோ. நான் நினைக்கிறேன், இரண்டுக்கும் அழத் தெரியும் என்பதாலாக இருக்கும். பெண்களின் அழுகையால் ஆக வேண்டியதைச் சாதித்து விடுவார்கள் என்று, சொல்வார்கள். இதனாலோ என்னவோ எனக்கு, அவசியமில்லாமல் அழும் பெண்களைப் பார்த்தாலே அவர்கள் மீது இருக்கும் மதிப்புக் குறைவதோடு கோபமும் வரும். பெண்களின் ஆயுதங்களில் கண்ணீர் சக்தி வாய்ந்த ஒன்று. அதேபோல் ஆண்களின் சபலப் பார்வையையும் எனக்குப் பிடிக்காது. குறிப்பாக பெண்களைப் பார்க்கும்போது நிமிர்ந்து பார்க்கின்ற திராணியற்று, உதடு திறந்து பேச வலுவிழந்து, பார்வையாலேயே ஒழுகி ஊற்றிப்போகும் ஆண்களில் அர்த்தமற்ற பார்வைகளின் போது, கண்கள் அவரின் கயமையை அப்படியே படம் போட்டுக் காட்டும்.

நேர்மையும் நம்பிக்கையும் உடையவர்களின்




பார்வை நேருக்கு நேர் இருக்கும். யாருடனும் பேசும் போது அவரது கண்களைப் பார்த்துப் பேசுங்கள். அவர் நம்பிக்கைக் குரியவர் என்றால் அவரது கண்கள் உங்களையே பார்த்துக்



தருவது :- தேசன்

கொண்டிருக்கும். பேராசையும் பற்றும் இல்லாமல் உலக வாழ்வை உண்மையாகப் புரிந்து கொண்டவரின் கண்களில் பிரகாசமும், ஒரு தெளிவும் இருக்கும். அன்பு கொண்டவர்களின் கண்களில் கருணையும், இரக்கமும் வழியும். சில பெண்களின் கண்கள் தாய்மையோடு பார்க்கும். அந்தக் கண்களைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கும். உள்ளத்தின் உணர்ச்சிகளை மறைக்கத் தெரியாத ஒரே உறுப்பு கண்கள்தான். கோபம், தாபம், ஏக்கம், மகிழ்ச்சி, காமம், ஏமாற்று, காதல், அன்பு, துயரம், ஏமாற்றம் இப்படி மனிதன் வெளிப்படுத்தும் எல்லா உணர்ச்சிகளையும் கண்கள் வெளிப்படுத்தும். வெள்ளையை மஞ்சள் என்றும் பச்சையை நீளம் என்றும் நாக்கு நிரூபித்துப் பேசலாம். கண்கள் பொய்மையை வெளிப்படுத்துவதில்லை. சகிப்புத்தன்மை என்பது மனசுக்கு மட்டுமல்ல, கண்களுக்கும் தெரியும். மணக்காது போனால் மனிதன் சாக்கடையையும் குடிப்பான். ஆனால் கண்கள்தான் காட்டிக் கொடுத்து விடுகிறதே!

சாராயம் குடித்து வாழ்க்கையை சாக்கடையாக்கிக் கொண்டவர்களுக்கு சாக்கடையும் சாராயமும் ஒன்றுதான்.

பாவம் அவர்களின் கண்கள் ஒளியிழந்து போயிருக்கும். இதே வகையைச் சேர்ந்தவர்கள் கண்ணிருந்தும் கபோதிகளாகத் திரிபவர்கள். இன்னொருவர் மீது பரிவு காட்டாதவர்களும், பாதையில் கிடக்கும் ஆபத்தான பொருளை அப்புறப்படுத்தாமல் தாண்டிக் கொண்டு போவோரும், தான் வாழ்ந்த உலக வாழ்வை பதியாமல் பிறந்தேன் - வளர்ந்தேன் - இறந்தேன் வேறொன்றும் யான் அறியேன் பராபரமே என்று வாழ்ந்தவரும், கண் இருந்தும் குருடராக வாழ்ந்தவர்களே. வாழ்க்கை அவர்களை சபித்து விட்டிருக்கிறது.

வெயிலைப் பார்த்து ஒருவரிடம் என்ன நிறம் என்று கேட்டால், கேட்பவரிடம் திருப்பி தண்ணீர் என்ன நிறம் என்று கேட்பார்கள். யார்தான் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லிப்பழகியிருக்கிறோம். ஒருவரை மிஞ்சி நாம் அதிபுத்திசாலிகள் என்று காட்ட முற்படுவதிலேயே பாதி வாழ்க்கை போய் விடுகிறது. ஆனால் விஞ்ஞானத்தின் தந்தை சேர்.ஐஸாக் நியூட்டன் 1645ஆம் ஆண்டு இந்தக் கேள்விக்குச் சொன்ன பதில், வெயில் ஏழு நிறங்களைக் கொண்டது. அதை அவர் நிரூபித்தும் காட்டினார். இனி வெயில் ஏழு நிறமென்று நினைத்துக் கொள்ளுங்கள். மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை வளர்ச்சியுமில்லாமல், தேய்மானமும் இல்லாமல் இருக்கும் ஒரே உறுப்பு 'கண்மணி' அல்லது 'பார்வை பாப்பா' மட்டும்தான். கண்களைப் பற்றி இன்னொரு முக்கிய விடயமும் உண்டு. அது லூயிஸ் பிரையில்கின் அர்ப்பணிப்பு. இவர் 1809 - 1852 காலப்பகுதியில் வாழ்ந்தவர். அவருக்கு இரண்டு கண்களும் தெரியாது. அவர் உலகத்தைப் பார்க்க ஆசைப்பட்டார். அது முடியவில்லை. தான் பிறந்தது இருட்டு வாழ்க்கை வாழவா என்று யாரையும் எரிச்சலோடு பார்க்கவில்லை. தன் வேதனைகளையும், ஏமாற்றங்களையும் அவர் ஏற்றுக்கொண்டார். அந்தப் பக்குவம் அவரை ஒரு கண்டுபிடிப்பாளராக மாற்றியது. அவரால் கண்டு பிடிக்கப்பட்டதுதான் பார்வை அற்றவர்கள் பயன்படுத்தும் எழுத்து வடிவம். அதன் பெயர் (பிரையில்) சமூகச் சிந்தனையும் மனித நேசிப்பும் இருப்பவர்கள் பிரையில் போல் வழிகாட்டிகளாக வாழ்வார்கள். இரண்டு கண்களும் நன்றாகத் தெரியக்கூடிய நாம் காட்சிகள் எப்போதும் ஒன்றாகவே தெரிகிறதே என்பது பற்றி யாருமே விடைகாண முற்பட்டதில்லை. ஒரு கண்ணை மூடிக் கொண்டு இன்னொரு கண்ணைத் திறந்து பார்த்தாலும் அந்தக் காட்சி தெரியும். இரண்டு கண்களால் பார்க்கும் போதும் அதே காட்சி தெரிகிறதே ஏன்? என்று நான் இன்னும் சிந்தித்துக் கொண்டே இருக்கிறேன்.

பார்வை இல்லாதவர்களை நினைத்து நான் மிகவும் உடைந்து விடுவேன். சில சமயங்களில் வீதியால் போகும்போது பார்வை தெரியாத வயதானவர்களைச் சிறுவர்கள் கையைப் பிடித்து கூட்டிக் கொண்டு போவார்கள். அவர்கள் மேடு பள்ளங்கள் பற்றி அறியாதவர்கள். ஆனால் அந்த முதியவர்கள் சிறுவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு கால்களைத் தடவித்தடவி வைத்துப் போகும் காட்சி என்னை உருக்கும் சம்பவங்களில் ஒன்று. அந்த வயோதிபர்களின் நம்பிக்கையும், சிறுவர்களின் அறியாமையும் என்னை குடைந்து கொண்டே இருக்கும். நான் எப்போதுமே அங்கவீனர்களைச் சந்திக்கின்றபோது அவர்களின் குறைகளைக் குறிப்பிட்டு பேசும் சொற்களை தவிர்த்துக் கொள்வேன். அவர்களை முழு ஆரோக்கியமானவர்களாகவே வலியுறுத்திப் பழகுவேன். எனக்குப் பொதுவாகவே ஒரு பழக்கம் உண்டு. என்னுடன் பேசிக் கொண்டிருக்கும் மற்றவர்களை ஒரு தடவையாவது சிரிக்கும படியாகப் பார்த்துக் கொள்வேன். முக்கியமாக அவர்கள் என் முன்னிலையில் வெட்கிக் குனியவோ, அந்தரப்படவோ விடாமல் அவர்களின் கௌரவத்தை முடியுமானவரை பாதுகாத்துக் கொள்வதில் எனது பேச்சில் கவனமாக இருப்பேன். பார்வை அற்றவர்களுக்கு வெள்ளைப் பிரம்பு ஒரு தோழனைப் போன்றது. ஒவ்வொரு ஆண்டின் பத்தாம் மாதம் பதினைந்தாம் திகதி வெள்ளைப் பிரம்பு தினம் கொண்டாடப்படுகிறது. இந்த பிரம்போடு வீதிகளில் போகும் ஒருவருடன் பழகி, அந்த அனுபவத்தை பதிய வேண்டும் என்பது என் விருப்பங்களில் ஒன்று. ஆனால் ஒரு சஞ்சலம். அதாவது அவரை பார்வை அற்றவராகப் பார்க்க பேச வேண்டியிருக்கும், அவரிடம் அதைப் பற்றிப் பேச வேண்டி யிருக்கும், அப்போது அவர் கூச்சப் படுவார். நீங்களும் மற்றவரை எப்படி மதிக்கிறீர்கள் அவரின் உணர்வுகளை எப்படி மதிப்பீடு செய்கிறீர்கள் என்பதைச் சிந்தித்துப்பார்த்து உங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.




இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## மணிச் செய்திகள் மணியாய் இருக்கட்டுமே!

**அண்மைக்காலமாக தனியார் வானொலிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு குறுகிய காலத்திலேயே நேயர்களின் பெருமதிப்பினைப் பெற்ற விடயம் மணித்தியாலச் செய்திகளாகும். அந்தந்த வேளைகளில் இடம்பெறும் முக்கியமான விடயங்களை சுடச்சுட அறியத்தருவதில் பெரு வரவேற்பினைப் பெற்றிருந்த மணிச் செய்திகள் தற்போது அதன் மதிப்பினை சிறிது சிறிதாக இழக்கத் தொடங்கியுள்ளன.**

**பிரதான செய்தி அறிக்கைக்கு உரித்தான சில செய்திகளை உதாரணமாக - ஓர் பா.உ, பொலிஸ்மா அதிபருக்கு அல்லது ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தினை முழுமையாக வாசித்தல், அல்லது புள்ளி விபரங்களுடனான செய்திகளை விலாவாரியாகச் சொல்லுதல் போன்றவற்றினால் மணிச் செய்தியின் தனித்துவம் இழக்கப்படுகின்றது.**

**மணிச்செய்தி என்பது - பாஸ்ட் பூட்,**

**பிரதான செய்திகள் - வாழையிலையில் அறுசுவை விருந்து,**

**மணிச் செய்திகள் மணியாய் இருக்கட்டும். ஒன்றிற்குள் ஒன்றினைக் கலவாமல் செய்தி ஆசிரியர்கள் கவனமெடுப்பார்களா?**

***—எஸ். விஸ்வேஸ்வரன், நல்லூர்.***


# விளம்பரப் பகுதி

### மலையாள மாந்திரீகம்



தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்
**P.K.சாமி (J.P.) ஐயா**


### அருள் சித்த எண்ணெய்



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்
**P.K.சாமி (J.P.) ஐயா**

### ஜாதகம்



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.


ஜோதிட தத்துவ ஞானி
**P.K.சாமி (J.P.) ஐயா**

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.

### நவசித்தர் மாந்திரீகம்



ஓம் குருவே நம: கர்ம வினைகளினால் தீய சக்திகளால் ஏற்பட்ட தீராத துன்ப துயரங்கள், வீட்டில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டு பிரயாணத் தடை, காதல் பிரச்சினை, காதலர்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்ய, பிரிந்தவர் ஒன்று சேர, கணவன் மனைவி பிரச்சினைகள் தீர வேண்டாதவரை பிரிக்க, கிரக தோஷ நிவர்த்தி செய்து வீட்டில் லட்சுமிகரம் ஏற்பட, வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு கடல் கடந்து பலன் அளிக்கக் கூடியவாறு விசேடமாக செய்து கொடுக்கப்படும். இன்னும் அநேக காரியங்களுக்கு மட்டக்களப்பு பரம்பரை மஹா சக்தி உபாசகர் சித்த ஆயுள்வேத மாந்திரீக விஷ மருத்துவர்.

Dr.T.Murukuppillai (S.A.M.P.), Main Street, Pandiruppu - 01.
Kalmunai. (Sri Lanka) Tel: 067 - 2224077, வெளிநாடு: 0094672224077

**ABI Beauty Parlour**



Abi Beauty Parlour
Bridal Dressing, Latest Facials
Hair Rebonding, Hair Treatments
Watts Removing.....

No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)

# ‘தாத்தா... போறேன்...’

## சிறுமியின் கடைசி வார்த்தை!

**கொழும்பு** தெற்கு கிருலப்பனை பகுதியில் உள்ள சித்தார்த்த லேன் பகுதியில் அமைந்துள்ள தோட்டக் குடியிருப்பு. இன, மத, பேதம் பாராமல் எல்லா சமூகத்தவர்களும் கலந்து ஒற்றுமையாக வாழும் பகுதி. ஆயினும் பெரும்பான்மையாக வசிப்போர் தமிழர்கள். அதிலும் இந்திய வம்சாவளி மற்றும் கொழும்பு வாழ் தமிழர்கள். அப்பேற்பட்ட பகுதியில் தனது பிஞ்சுப் பாதங்களைப் பதித்து ஓடி விளையாடி, அப்பகுதி மக்கள் அனைவரினதும் ‘செல்லக் குட்டி’ யாக விளங்கிய அஸ்வினி இன்று உயிருடன் இல்லை.


குண்டு வெடிப்புக்கு இலக்காகிய வாகனம்

வடக்கு - கிழக்கில் தாண்டவமாடி கொழும்பு வரை வியாபித்த பயங்கரவாதம் அந்தச் சின்னஞ்சிறு மொட்டைக் கருக்கிவிட்டது. ஆம், கடந்த 8ஆம் திகதி கொழும்பு டிக்மன்ஸ் வீதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. முக்கியஸ்தருமான எஸ்.சிவதாசன் அவர்களை இலக்கு வைத்து புலிகள் நடாத்திய குண்டுத் தாக்குதலில் அஸ்வினி என்ற அந்த இரண்டரை வயதுப் பாலகி ஸ்தலத்திலேயே கருகி மாண்டு போனாள்.

ஒரு கூட்டுப் பறவைகளாக இருந்த அழகான சிறிய குடும்பம் அது. அஸ்வினியின் குடும்பத்தில் மொத்தம் 6 பேர். தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, அண்ணா, அஸ்வினி - எவ்வளவு இனிமையான வாழ்க்கை. அவ்வளவும் நொடிப்பொழுதில் சிதைந்தழிந்து விட்டது.

குறிப்பிட்ட அந்தக் குடியேற்றத்திட்டம் முன்னர் ஒரு சகதிப் பகுதியாக விளங்கிய ஓர் இடம். ஜனாதிபதி பிரேமதாசாவின் பதவிக் காலத்தில் ஏழை மற்றும் சேரிப் பகுதி மக்களை நோக்காகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டத்தில் அப்பகுதி நிலமீட்பு செய்யப்பட்டு வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வோருக்கு வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் கண்டியில் கலஹா எனும் பகுதியில் உள்ள எஸ்டேட் ஒன்றில் பாதுகாவலராகக் கடமையாற்றிப் பின்னர், கொழும்பில் குடியேறிய ஜோன்


கருகிய நிலையில் அஸ்வினி.

ராசையாவிற்கும் அங்கு ஒரு காணித் துண்டு கிடைத்தது. ஜோன் ராசையா அவரது மனைவி சரோஜா மற்றும் மூன்று பிள்ளைகள் ஆகியோர் தமது சொந்த முயற்சியினால் கட்டி முடித்த வீட்டில் வசித்து வருகின்றனர். இவர்களில் மூத்த மகளே சசீதா.

1995ஆம் ஆண்டில் மூத்த மகள் சசீதாவிற்கும் மாநகரசபை ஊழியராகப் பணியாற்றிய ஜெகதீஸ்வரனுக்கும் பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். அன்று முதல் கூட்டுக் குடும்பமாக ஒற்றுமையாக அவர்கள் வாழ்ந்து வருவதை அந்தத் தோட்ட மக்கள் அனைவரும் அறிவார்கள்.


அஸ்வினி.

இந்நிலையில் 96ஆம் ஆண்டு சசீதாவுக்கு மூத்த மகன் திவாகரன் பிறந்தான். பின்னர் கடந்த 2004ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி அஸ்வினி பிறந்தாள்.

அஸ்வினியின் குடும்பத்தில் அனைவருமே கடுமையான உழைப்பாளிகள். தாத்தா எஸ்டேட்டில் இருந்து ஓய்வு பெற்று விட்டபோதும் தான் ஒருபோதும் சும்மா இருக்க வேண்டும் என எண்ணியதில்லை. பம்பலப்பிட்டி தொடர்மாடியில் உள்ள வசதிமிக்க ஒரு குடும்பத்தினருக்கு இராசையாவும் அவரது மனைவி சரோஜாவுமே வலது, இடது கைகள். அந்த வீட்டின் சமையல் வேலைகள் அனைத்தும் சரோஜாவே செய்வார். வீட்டு வேலைகள் வெளி வேலைகள், கடைகளில் பொருட்கள் வாங்குதல் அனைத்தையும் ராசையாவே மேற்கொள்வது வழக்கம்.

ராசையாவும் அவரது மனைவி சரோஜாவும் வேலை செய்யும் அந்தத் தொடர்மாடி வீட்டின் நேர் கீழ் வீட்டிலேயே மூத்த மகள் சசீதா பணி புரிந்து வந்தார்.

சசீதா மற்றும் அவரது பெற்றோர் பணிபுரிந்த குறிப்பிட்ட வீட்டு உரிமையாளர்களுடன் நாம் உரையாடியபோது, தமது பெயரைக் குறிப்பிட வேண்டாம் எனக் கூறிய அவர்கள் சொன்ன முக்கியமான விடயம் அந்த குடும்பத்தின் நேர்மை. பல


கதறியழும் அஸ்வினியின் தாத்தா.

தடவைகளில் முழு வீட்டினையும் அவர்கள் வசம் ஒப்படைத்து விட்டு வெளியே சென்று மீண்டும் வரும்போது சமையல் உட்பட அனைத்து வீட்டு வேலைகளும் நேர்த்தியாகச் செய்து முடிக்கப்பட்டிருக்கும். ஒரு குண்டுமணி கூடக் காணாமற் போயிருக்காது. அவ்வளவு வேலை சுத்தமும், நேர்மையும் உடைய குடும்பம் அது என அவர்கள் வாயாரப் புகழ்ந்தார்கள்.

அஸ்வினியைப் பற்றிக் கேட்டதும், வீட்டு உரிமையாளரின் கண்களில் குபுக் என்று கண்ணீர் தெறித்தது. “அவளை (அஸ்வினியை) ஒருபோதும் எங்கள் வீட்டில் பணிபுரியும் ஒருவரின் பிள்ளையாக நாங்கள் கருதியதில்லை.

அவளின் பாதம் இந்த வீட்டில் படாத இடமே இல்லை. படுசுட்டி. எங்களுக்கு இருக்கும் வேலைப் பளுவில் அவளுடன் 5 நிமிடம் செலவிட்டாலே போதும். எல்லா மனச்சுமையும் இறங்கிவிடும்” என சிலாகித்துச் சொன்னார்கள்.

உண்மையில் அன்று நடந்தது என்ன?

ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி வழமைபோலவே தான் பணிபுரியும் வீட்டிற்கு அஸ்வினியையும் அழைத்துக் கொண்டு அம்மா சசீதா சென்றார். அண்ணன் திவாகரன் இந்துக் கல்லூரியில் 4ஆம் வகுப்பு படிக்கிறான். அவனும் பாடசாலைக்குப் போய்விட்டான். தாத்தாவும் அம்மம்மாவும் மேல்வீட்டில் வேலை.

வழமைபோலவே தனது சிறு பாதங்களினால் குறுகுறு என ஓடித்திரிந்த அஸ்வினி மேல் மாடியில் தாத்தாவிடமும் கீழே அம்மாவிடமும் என மாறிமாறி ஓடித்திரிந்து விளையாடிக் கொண்டிருந்தாள். அன்று அவளுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருப்பதை அவள் தெரிந்திருக்கவில்லை.

அஸ்வினியின் தாத்தா, அன்றைய தினம் அவளுக்கு ஓர் புதிய, குழந்தைகளுக்கான சப்பாத்து ஒன்றினை வாங்கி பரிசளிப்பதற்காக வைத்திருந்தார். தனது கடமைகளை முடித்துக்கொண்ட சசீதா, வழமைபோல அஸ்வினியையும் தூக்கிக்கொண்டு தகப்பனாரிடம்


அஸ்வினியின் உடல் தாங்கிய பேழை

விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட போது, தாத்தா அந்தச் சப்பாத்தினை எடுத்துக் காட்டினார்.

அவ்வளவுதான்! முகமெல்லாம் மலர்ச்சியாகக் குதூகலத்துடன் அதனைப் பெற்றுக்கொண்ட அஸ்வினி, தனது பிஞ்சுப் பாதங்களில் அதனை அணிந்து கொண்டதுடன் “அம்மா தூக்க வேண்டாம்” எனக்கூறி தையத்தக்கா போட்டு நடை பயின்றாள். அன்றைய தினம் சம்பளம் பெற்றுக்கொண்ட சசீதா, “அப்பா ஏதாவது பணம் வேண்டுமா” எனக் கேட்டபோது “வேண்டாம்” எனக்கூறிய அவர், கவனமாகச் செல்லும்படி கூறிவிட்டுத் தனது மேல் வீட்டிற்குச் சென்றுவிட்டார்.

இது நடந்து 10 நிமிடங்கள் தான். ‘டமார்’ என அப்பகுதியே கிடுகிடுக்க அந்தக் குண்டு வெடித்தது. அன்ன நடைபோட்டு நடந்து சென்று பஸ்ஸிற்காகக் காத்திருந்த அஸ்வினியும், அம்மாவும் கருகிப்போனார்கள்.

பயங்கரவாதத்திற்கு எங்கே குழந்தைகளை இனம் தெரியப் போகிறது? அதே இடத்தில் கரிக்கட்டையாகிப் போனாள் அஸ்வினி. குற்றுயிரும் குலையுயிருமாகத் துடிதுடித்தார் சசீதா.


அஸ்வினியின் தந்தையும் தமயனும்

வெடிச்சத்தம் கேட்டு, தான் இருந்த வீட்டில் இருந்து ஓடி வந்த தாத்தா கண்டது, குற்றுயிராகத் தனது மகள் வாகனத்தில் ஏற்றப்படுவதைத்தான். தனது பேத்தி அஸ்வினியைத் தேடிய அவர் கண்டது கரிக்கட்டையாகிப் போயிருந்த அந்தப் பிஞ்சைத்தான். அதுவும் தான் வாங்கிக் கொடுத்து அணிந்த புதுச் சப்பாத்து, கரிக்கட்டையாகி இருந்த பிஞ்சு உடலில் உருகி ஊற்றியபடி இருந்தது.

“ஐயோ என் அஸ்வினி” என்று அவர் போட்ட கதறலில் அங்கு நின்றிருந்த எத்தனையோ சமர்களைக் கண்ட இராணுவத்தினர் கூட கலங்கித்தான் போய்விட்டார்கள்.

அந்தக் குண்டு வெடிப்பில் காயமடைந்த முன்னாள் பா.உ.சிவதாசனுடன் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட சசீதா கடந்த 12ஆம் திகதி நினைவு திரும்பாமலேயே மரணமடைந்தார்.

அஸ்வினியின் உடல் சின்னஞ்சிறு பெட்டியில் எடுத்து வரப்பட்டபோது அந்தக் குடியிருப்பே ஓவெனக் கதறியது. எல்லோருமே அதனை தமது வீட்டு இழப்பாகவே கருதினார்கள். ஏனெனில் அஸ்வினி அங்குள்ள எல்லா வீடுகளிலும் செல்லக்குட்டி. சின்ன தேவதை. அஸ்வினியின் இழப்பினால் பெரிதும் இடிந்து போயிருந்தவர் அம்மம்மா சரோஜாதான். அழுதழுது கண்ணீர் வற்றி, பேசுவதற்குக் கூட திராணியற்றிருந்தார்.

தகப்பனார் ஜெகதீஸ்வரனை கேட்கவே வேண்டாம். “எந்தத் தகப்பனுக்கும் இந்தக் கொடுமை வேண்டாம்” என குலுங்கிக் குலுங்கி அழுதார். ஆறுதல் சொல்லுவதற்கு வார்த்தைகள் இன்றி வெளியே வந்தோம்.

எந்த வம்பு தும்பிற்கும் போகாது தாமும் தம்பாடுமாக, பாசமும் நேசமுமாயிருந்த ஓர் தமிழ்க் குடும்பத்தை கொழும்பில் வைத்து பயங்கரவாதம் பழிவாங்கி விட்டது. அதனை விடக் கொடுமை அந்தப் பயங்கரவாதத்திற்கு


அஸ்வினியின் வீட்டுச் சூழல்

வக்காலத்து வாங்கும் மனோகரமானவர்கள் மற்றும் மகேஸ்வரர்கள் அந்தப் பக்கம் எட்டிப்பார்க்கக்கூட இல்லை. ஓர் கண்டனம் வேண்டாம்; ஆறுதல் அனுதாபம் கூடச் சொல்ல வரவில்லை.

**ஜெ.கே**

கூத்தமைப்புக்காரர்கள் தான் சூடு சுரணை இழந்து அவ்வாறு நடப்பவர்கள் என்பது தெரிந்த விடயம். ஆனால் கொழும்பு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறுபவர்களும் பயங்கரவாதத்திற்கு ஒத்தூதிக்கொண்டிருக்கிறார்கள்.

அஸ்வினியின் இறுதி நிகழ்விற்கு விடைகொடுத்து நாம் வெளியே வரும்போது, சித்தார்த்த குடியிருப்பு மக்கள் ஒரே குரலில் சொன்ன விடயம் ஒன்றுதான். “அடுத்த தேர்தலுக்கு வாக்குக் கேட்டு அவர்கள் இங்கு வரட்டும், பார்த்துக் கொள்ளுகின்றோம்!”

யார் என்ன சொல்லட்டும். அஸ்வினியை ஆண்டவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அதுதான் அந்தத் தேவதையை தன்னுடனேயே வைத்துக்கொண்டு விட்டானோ?


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**பணம்** போடும் படாதிபதியைப் பராரியாக ஆக்கிவிட்டுத் தன்னைப் பிரபலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்கிற பாவ எண்ணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் முத்துராமன்.

எனக்குத் தெரிந்து, அவரை இயக்குநராக அமர்த்திய எந்தப் படாதிபதியும், வியாபார விஷயத்தில் விரல்களைச் சுட்டுக் கொண்டதில்லை.

சினிமா உலகில்,



முகமூடியில்லாத ஒரு முழு மனிதன் என்று முத்துராமனைச் சொன்னால் அது மிகையல்ல.

ஆயினும், நண்பர் முத்துராமன் இரவும் பகலுமாகச் சிந்திய வியர்வைக்கும், அவர் பேணிக் காத்துவரும் நேர்மைக்கும் இன்னும் அவர் நிறையப் பலன்களைப் பெற்றிருக்க வேண்டுமென்பது என் கருத்து. மிகப் பெரிய நட்சத்திர இயக்குநர்களின் வரிசையிலே தனக்கென்று ஓர் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருப்பினும், 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்றும் மூதுரைக்கேற்ப அமைதி காத்து, வேகத்தைத் தொழிலிலும் விவேகத்தைத் தூய நட்பிலும் கடைப்பிடிப்பவர்.

'ஒரு கொடியில் இரு மலர்கள்' என்றொரு படம். என் அருமை நண்பரும், பிரபல எழுத்தாளருமான பிலஹரிதான் அந்தப் படத்தின் தயாரிப்பாளர். முத்துராமன் தான் அதன் இயக்குநர். பிலஹரியின் கதைக்கு, திரைக்கதையும், உரையாடல்களும் நான்தான் எழுதினேன். குறைந்த பட்ஜெட்டில் நிறைந்த புகழையும், பொருளையும் பிலஹரிக்கு ஈட்டித்தந்த படம் அது.

செழுமையான என் உரையாடல்களைச் சிதைக்காமல் சிறப்பாகப் படமாக்கியவர் முத்துராமன்.

இந்தப் படத்தின் உரையாடல்களால் ஈர்க்கப்பட்டுத்தான் என் நண்பரும் பிரபல எடிட்டருமான திரு.விட்டல், தன் படத்திற்கு நான் உரையாடல்கள் எழுத வேண்டுமென்று என்னைத் தேடி வந்தார். திரு.கே.ஆர்.ஜி. அவர்களையும் இந்தப் படத்தில் உரையாடல்கள் கவர்ந்ததால்தான், என்னைக் கொண்டு, 'அதிர்ஷ்டம் அழைக்கிறது' என்னும் படத்தைத் தயாரிக்க விரும்பினார். ஆக, என் உரையாடல்களுக்கு வெகுஜன வரவேற்பைப் பெற்றுத் தந்த வகையில் நான் நண்பர் முத்துராமனுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

உரையாடல் என்பது இன்றைய தமிழ்ப் படங்களுக்கு ஊறுகாய்போல் ஆகிவிட்டது. இது ஆரோக்கியமான வளர்ச்சி ஆகாது. என்னதான் காட்சிகளைச் 'சிம்பாலிக்' காகச் சொன்னாலும், வசனத்தின் மூலம் வெளிப்படுத்துவதுதான் பாமரனையும் படத்தில் ஒன்ற வைக்கும். வசனத்தின் நீளம் குறைக்கப்படாமல், ஆழம் குறைவாக இருத்தல், அர்த்தமற்ற சொற்றொடராகத்தான் அமையுமே அல்லாது - காட்சியின் கனபரிமாணத்தைக் காட்ட உதவாது.

'ஒரே ஒரு கிராமத்திலே' என்று ஒரு படத்தை என் இனிய நண்பரும், HINDU பத்திரிகை அதிபருமான திரு. ரங்கராஜன் தயாரித்தார். நண்பர் ரங்கராஜனைத் தவிர, இந்தப் படத்தைத் தயாரிக்கும் துணிவு, பிறிதொரு படாதிபதிக்கு இருக்குமா என்பது சந்தேகமே.

இட ஒதுக்கீடு பற்றிய நியாய, அநியாயங்களைத் தர்க்கரீதியாக யார் மனதும் புண்படாமல், மெத்த கவனத்தோடு நான் 'ஒரே ஒரு கிராமத்திலே' படத்தில் சொல்லியிருந்தேன். திரு.ஜோதி பாண்டியன் என்னும் இளைஞர் மிகச் சிறப்பாக இந்தப் படத்தை இயக்கியிருந்தார்.

உயிரோட்டமான என் உரையாடல்களை, அவற்றிற்குரிய ஏற்ற இறக்கங்களோடு நடிக - நடிகையரைப் பேச வைத்த பெருமை திரு. ஜோதிபாண்டியனையே சாரும்.


(தொடரும்.......)



# இத்தாலிப் பெண்

**இ**வ்வருடம் மிலான் திரைப்பட விழாவில் சிறந்த நடிகையாகத் தெரிவு செய்யப்பட்டவர் சொனாலி குர்கர்னி எனும் ஹிந்தி நடிகையாவார். Fire At My Heart திரைப்படத்தில் நடித்தமைக்காகவே இவருக்கு இவ்விருது கிடைத்துள்ளது. இத்தாலி நாட்டுத் திரைப்படமான இத் திரைப்படத்தில் இவர் இத்தாலிப் பெண் வேடத்தில் நடத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.





# உண்மை இடை!

**தான்** ஒரு உதைபந்தாட்ட அடிமை என்கிறார் பிரபலப் பாடகி சஹிரா...

அண்மையில் நடந்து முடிந்த உலக உதைபந்தாட்ட இறுதி நாளன்று இவரது பாடல் நிகழ்ச்சியொன்று வைக்லெப் ஜீன்ஸ் என்ற நடனத்துடன் மைதானத்தில் இடம் பெற்றுள்ளது.

"எனது இடை பொய் சொல்லாது என்று இந்தப் பாடல் ஆரம்பிக்கின்றது. சோனி பீ.எம்.ஜி.நிறுவனம் இந்தப் பாடலுக்கான உரிமையைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உதைபந்தாட்டப் போட்டியை இரசிக்க வந்திருந்த பெருந்திரளான மக்கள் இவரது ஆடலுடன் பாடலைக் கேட்டு துள்ளிக் குதித்ததாக சஹிராவின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இவரது இடை பொய்சொல்லாது தான்!

# காக்க... காக்க...

**உ**லகிலேயே மிகவும் தனவந்தப் பாடகியாகக் கருதப்படுகின்ற மெடோனை கடந்த மாதம் 21, 22ஆம் திகதிகளில் அவருக்குப் பிடித்த நகரமான பாரிஸுக்கு வருகை தந்திருந்தார்.

சர்வதேச இசைத்துறையில் இவர் ஆற்றிவருகின்ற பங்களிப்பை கௌரவிக்கும் முகமாக பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி இவருக்கு வழங்கிய Leyend & Honour கௌரவத்தைப் பெறும் நோக்கிலேயே இவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.


பாரிஸ் வந்திருந்த மெடோனாவை இலக்கு வைத்து அவர் தங்கியிருந்த ஹோட்டலின் முன்பாக கடந்த ஜூன் மாதம் 21, 22 ஆம் திகதிகளில் 48 மணி நேரமாக ஊடகவியலாளர்கள் பலர் காத்திருந்து இறுதியில் ஏமாற்றம் அடைந்து சென்றுள்ளனர்.

இந்த நிலையில் இம் மாதம் இவர் பாரிஸ் நகரில் இசை நிகழ்ச்சி ஒன்றையும் நடத்த உள்ளார். ஊடகங்கள் ஒத்துழைக்குமா?



## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....

CIA உளவு நிறுவனம் வாஷிங்டனில் உள்ள தம்முடைய தூதரக அதிகாரியைத் தங்களின் கையாட்களாக ஆக்கிக் கொள்ள முயற்சித்த சம்பவங்கள் நிறைய உண்டு. அந்த முயற்சிகளில் அவர்கள் பெருமளவுக்கு வெற்றி பெற்றதாகச் சொல்லமுடியாது. ஓரிருவர் அவர்கள் வலையில் விழுந்திருந்தாலும் மற்றவர்கள் நாட்டுக்கு விசுவாசமாக இருந்து அவர்களின் முயற்சிக்குத் துணை போக மறுத்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




### ஒரு பரிசீலனை

'எவரும் உளவாளியாக மாறவேண்டும் என்கிற நோக்கத்தோடு அரசாங்க உத்தியோகத்திற்கு வருவதில்லை. அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்த பிறகு தங்களுக்குக் காட்டப்படும் ஆசைகளில் மயங்கி உளவாளியாக செயல்பட ஒப்புக்கொள்ளுகிறார்கள்' என்கிறார் உளவுத் துறையின் தலைமைப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்ற ஓர் அதிகாரி.

கோப்புகளில் அவர் எழுதி வைத்த இந்தக் குறிப்பு இன்னமும் டெல்லி சர்க்கார் அலுவலகத்தில் பத்திரமாகவே இருக்கிறது. அரசாங்க அலுவலகங்களில் அதுவும் மத்திய அரசின் முக்கியத்துறைகளில் நியமிக்கப்படும் எந்த அதிகாரிகளும் ரகசியங்களைக் காப்பாற்றக்கூடிய தகுதி படைத்தவர் தானா என்று பரிசோதிக்கப்பட்டு, அவர் சுத்தமானவர் எனத் தெரிவித்த பிறகே நியமிக்கப்படுகிறார். நியமிக்கப்படும் போது ஒருவர் அப்பழுக்கற்றவராக இருந்தாலும் பல ஆண்டு ஊழியத்திற்குப் பிறகும் தொடர்ந்து அவர் அப்படியே இருப்பது முடியும் தானா என்கிற கேள்வி எழுகிறது.

நம்முடைய உளவுத்துறையினர் 1970ஆம் ஆண்டிலேயே அதற்கான நெறிமுறைகளையும் வகுத்து கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை அதிகாரிகளைச் சோதனைகளுக்கு உள்ளாக்குவது அவசியம் என்றும், ரகசிய தஸ்தாவேஜு களோடு தொடர்பு கொண்டவர்களின் நடவடிக்கையை தொடர்ந்து கண்காணிப்பது அவசியம் என்றும் அவர்கள் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள்.


இந்த யோசனையை அரசு முறையாகக் கடைபிடித்து நடைமுறைக்குக் கொண்டு வந்திருந்தால் கூமர் நாராயணன் போன்றவர்கள் தங்களுடைய கையாட்களின் மூலம் முக்கியமான அமைச்சகங்களிலிருந்து ஏன், பிரதம மந்திரியின் அமைச்சரகத்திலிருந்து கூட இவ்வளவு தஸ்தாவேஜு களைச் சுலபமாக களவாடி சென்றிருக்க முடியாது.

உளவுத்துறையினரும் சந்தேகப்பட்டவர்களை கண்காணித்தார்களே தவிர, பொறுப்பான பதவிகளிலுள்ள ஏனையோர் மீது தங்கள் கவனத்தைச் செலுத்தவேயில்லை. யோக்கியர்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் என்றென்றும் யோக்கியர்களாகவே இருப்பார்கள் என்று அவர்களை விட்டுவிட்டார்கள்.

கூமர் நாராயணன் பிடிபட்டு அது தொடர்பான உண்மைகள் வெளியானபோது நம்முடைய கண்காணிப்பு அமைப்பு முறை எவ்வளவு பலஹீனமானது என்பது வெளிப்பட்டது. இல்லாவிட்டால் டெல்லியிலுள்ள முக்கியமான எல்லா அமைச்சகங்களிலும் புகுந்து அந்நிய உளவாளிகளின் கையாட்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்க முடியாது. கூமர் நாராயணின் சதிவேலையைக் கண்டுபிடித்து அவர் பரவலாக பின்னியிருந்த உளவு வலையை அம்பலப்படுத்திய பெருமை நம்முடைய உளவுத் துறையைச் சாரும்

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)



# பண விளம்பரம்

**உ**லகில் இதுவரையில் அதிக பணம் செலவழிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட விளம்பரம் இதுவாகும்.

இந்த விளம்பரத்தில் காட்சி தருபவர் பிரபல நடிகை நிக்கோல் விட்மன்!

செனல் நிறுவனத்தின் சார்பில் 80 விநாடிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த விளம்பரத்துக்கான செலவு 18 மில்லியன் ஸ்டேலிங் பவுன்களாகும்.

324 கோடி ரூபாய்! படத்தைப் பார்க்கும்போது பணத்தின் செலவு விளங்குதா?

# கந்தளாயில் அழுகுரல்கள்!

**ஹுஸைன் பின் ஹமீட்**

**கந்தளாய்க்குள்** நுழைந்ததும் மனிதப் பேரவலம் ஒன்று நிகழ்ந்திருப்பதைக் காணமுடிகிறது. சுமார் 40 ஆயிரம் முஸ்லிம் மக்கள் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் எல்.ரி.ரீ.ஈ. இயக்கம் மேற்கொண்ட தாக்குதல்களினால் மூதூரை விட்டு வெளியேற நேர்ந்திருக்கின்றது.

வெளியேறிய 40 ஆயிரம் மக்களில் 20 ஆயிரம் பேருக்குக் கந்தளாய் நகரம் அடைக்கலம் அளித்திருக்கின்றது.

ஹபரணையிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் வழியில் திருகோணமலைக்கும் - ஹபரணைக்கும் இடையில் அமைந்திருக்கிறது கந்தளாய் நகரம்.

ஒரு பக்கம் இயற்கை அமைப்போடும் வனப்போடும் கூடிய கந்தளாய்க் குளம். மறுபுறம்


வீதி ஓரத்தில் இடம் பெயர்ந்த மக்கள்.

செந்நெல் விளையும் வயல் வெளிகள். அகதிகளின் வருகையை அடுத்து கந்தளாய் நகரம் கண்ணீர்க் குளமாக மாறியிருக்கின்றது.

இப்போது இந்த நகரத்திற்குள் காலடி எடுத்து வைத்ததும் ஒரு வகைத் துயரம் நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. தாமும் தமது நாளாந்த ஜீவனோபாயமும் என்று வாழ்ந்து வந்த மூதூர் மக்களின் வாழ்க்கை, இப்பொழுது தெருவோரங்களுக்கு வந்துள்ளது. வாய்க்கால் ஓரங்களில், வயல் வரம்புகளில், குப்பை மேடுகளில் மற்றும் தெரு மருங்குகளிலும் வந்துள்ளது. கை, கால் நீட்டி நித்திரை செய்ய இடமின்றி மக்கள் முடங்கிக் கிடக்கிறார்கள்.

நல்லவேளை இது மழைக்காலமாக இல்லை. ஆனால், இரவில் பலமான சில்லென்ற குளிர் காற்று கந்தளாய் குளத்திலிருந்து வீசுகிறது. போர்த்திப் படுக்கப் போதுமான துணிமணிகள் இல்லை. கீழே நிலத்தில் விரிக்கப் பாய்கள் இல்லை. மேலே கூடார வசதிகள் போதுமானதாக இல்லை.

துப்புரவு செய்யப்படாத கற்கள், புல், குப்பைகள் நிறைந்த தரையில் மக்கள் ஒதுங்கி ஒரு இடம் தேடி இருக்கிறார்கள். தெருவோரங்களிலும், வயல் வரம்புகளிலும் வரிசையாக அடுக்கப்பட்ட சடலங்களைப் போன்று மக்கள் தூங்குவதைக் காண முடிகிறது.

மூதூரில் நான்கு நாட்களாக உணவும், நீருமின்றி தஞ்சக் களையடைந்து, சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்தை ஓடியும் நடந்தும் வந்த களைப்பு இன்னும் தீரவில்லை. இதனைவிட அவர்கள் முழுமையாகவே மனச் சோர்வடைந்து விட்டார்கள்.

எவருக்கும் அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை. மாற்றுடை இல்லை. கைகளில் பணம் இல்லை. தேநீர் தயாரித்துக் குடிக்க ஒரு கேத்தல் கூட கைவசம் இல்லை. அத்தனை பொருட்களையும் தமது வீட்டில் விட்டுவிட்டு தனியாட்களாகவே வந்திருக்கிறார்கள். தங்களுக்கு வாய்ப்பு வந்த மாதிரி ஓடித் தப்பி வந்ததில் பொருள், பண்டங்களை விட தமது உறவினர்களைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை.

பிஞ்சுக் குழந்தையைத் தொலைத்துவிட்ட தாய், மனைவியைத் தொலைத்து விட்ட கணவன், கணவனைத் தேடிக்கொண்டிருக்கும் மனைவி, பெற்றோரைப் பறிகொடுத்த பிள்ளைகள், பிள்ளைகளைத் தொலைத்துவிட்ட பெற்றோர் - இன்னமும் ஒவ்வொரு முகாமிலும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

நடை தளர்ந்து, உடல் மெலிந்து, நாவறண்டு, கண்ணீரும் கம்பலையுமாக இவர்கள் அலையும் காட்சி விபரிக்க முடியாதது. கிட்டத்தட்ட சித்தப்பிரமை பிடித்தது மாதிரி நடைபிணமாகத் திரிகிறார்கள்.

பகலில் வெய்யில் கொதிக்கிறது. ஒதுங்க இடமில்லை. இது கடும் கோடை காலமாகையால் மரங்களின் இலைகளெல்லாம் உதிர்ந்து விட்டன. குந்துவதற்கு நிழலில்லை. கொடுக்கப்பட்டிருக்கும் கூடாரங்களுக்குள் காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை உள்ளுக்குள் இருக்க முடியாது. அனல் வெப்பமும், அனல் காற்றும் வீசுகிறது. காற்றோட்டமில்லை. மூச்செடுப்பதற்குக்கூட அவஸ்தையாக இருக்கிறது.

பச்சிளம் குழந்தைகள், நோயாளிகள், வயோதிபர்கள், கர்ப்பிணிகள் அவஸ்தையுறுகிறார்கள்.

40 ஆயிரம் பேருக்கு உடனடியாகவே வசதிகளைச் செய்து கொடுப்பதென்பது முடியாத காரியம். குடிநீர் வசதி, மலசலகூட வசதிகள் போதுமானதாக இல்லை.

பகல் சாப்பாட்டுக்காக உச்சி கொதிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது சிறுவர், சிறுமிகள், பெண்கள், நோயாளிகள், வயோதிபர்கள், குமர்ப் பிள்ளைகள் கியூவில் நிற்கும் காட்சி கண்களில் நீர் மல்கச் செய்கிறது. மாலை 5.00 மணியாகியும் இன்னமும் பேராற்றுவெளி அகதி முகாமில் பகல் சாப்பாடு வழங்கப்படவில்லை. காலையில் வெறும் பாணும், பகல் ஒரு சில பிஸ்கட்டுகளும் தான் தந்திருக்கின்றார்கள்.

ஆயிஷா பாடசாலை அகதி முகாமில் இரண்டு மணித்தியாலங்களாகத் தகிக்கும் வெய்யிலில் கியூவில் நின்ற சிறுவன், பிற்பகல் இரண்டரை மணியாகியும் ஒரு பிடிச் சாப்பாடு கிடைக்காததால் மயங்கி


ஒருவேளை உணவுக்காக முட்டி மோதும் மக்கள்

விழுகின்றான். பெண்களுக்கான கியூவில் நின்று கொண்டிருந்த தாய் ஓடிவந்து அந்தப் பிஞ்சுச் சிறுவனைத் தூக்கிக் கொண்டு அழுதழுது சாப்பாடு இன்றிச் செல்கிறாள். நேற்றிரவும் சாப்பிடவில்லை. சாப்பாடு கிடைக்காது என்பதால் நேரத்துடனே நித்திரைக்குச் சென்று விட்டோம். இன்று காலையும் எமக்கு எதுவும் உணவு தரப்படவில்லை. இப்பொழுது பிற்பகல் மூன்றரை மணியாகிறது. இன்னமும் பகல் சாப்பாடு கிடைக்கவில்லை. கிடைக்குமா என்ற நம்பிக்கையும் இல்லை. கடையில் ஏதும் வாங்கிச் சாப்பிடக் காசும் இல்லை என்கிறார் ஏ.எல். படிக்கும் ஜுமானா என்ற மாணவி.

அவர் தங்கியிருக்கும் சிறிய கூடாரத்திற்குள் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 15 பேர் தங்கியிருக்கின்றார்கள். சாதாரணமாக 5 பேருக்குத்தான் இந்தக் கூடாரம் கால் நீட்டித் தூங்கப் போதுமானது.

பெண்களுக்கென தனியாகக் குளிக்க, உடைமாற்ற, மலசலம் கழிக்க தனியான வசதிகள் செய்து தரப்படவில்லை. இதனால் இடம்பெயர்ந்த பெண்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

ராசிக் அப்துல் றகீப் எனும் 22 வயது வாலிபர், தனது தாய் ஜெமீலா உம்மா (55 வயது) என்பவரைக் கடந்த ஒரு வாரகாலமாக முகாம் முகாமாகத் தேடி அலைவதாகத் துயரத்தோடு கூறுகிறார். தாய் எப்படியாவது கிடைத்துவிட வேண்டும் என அவர் இறைவனைப் பார்த்து ஏங்குகிறார்.

நஹீமா எனும் 33 வயது இளம் பெண் கொதிக்கும் வெய்யிலில் சோர்ந்து ஒரு மரத்தடியில் கற்களின் மேலே குந்திக்கொண்டிருக்கிறார். கண்கள் சிவந்திருக்கின்றன. கணவன் ஆதம்பிள்ளை நாகூர் பிச்சை (35 வயது) எல்.ரீ.ரீ.ஈ.யினரால் பிடிக்கப்பட்டு கண்கள், கைகள் கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என்ற செய்தியைத் தான் கேள்விப்படுவதாகக் கூறுகிறார். இப்படித் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரைக் காணவில்லை. இவர்களையும் எல்.ரீ.ரீ.ஈ.யினர் படுகொலை செய்திருக்கலாம் எனத் தாங்கள் நம்புவதாகவும் சொல்கிறார் அவர்.

ஷெல் விழுந்து வெடித்துச் சிதறியதில், தனது மனைவியைத் தொலைத்து விட்டதாகவும், அவர் இப்பொழுது மூதூரில் அகதி முகாமொன்றில் இருப்பதாகக் கேள்விப்படுவதாகவும் கூறுகிறார் ஜமால்தீன் அப்பாஸ் எனும் 30 வயதுக் கூலித் தொழிலாளி.

தனது தாய் எங்கே என்று தெரியாது என அழுது கொண்டிருக்கிறாள் 4 வயது சிறுமி ஒருத்தி. இரக்கப்பட்ட ஒருவர் இந்தச் சிறுமியை கடந்த 5 நாட்களாகப் பராமரித்துக் கொண்டிருக்கிறார்.

எல்.ரீ.ரீ.ஈ.யினர் தங்களைத் தடுத்து வைத்து, தாயையும், தந்தையையும் வேறாக்கிச் சோதனை செய்து கொண்டிருந்தபோது அவ்விடத்தில் ஷெல் விழுந்தது. எல்லோரும் சிதறி ஓடிவிட்டார்கள். தாயும், தகப்பனும் என்ன ஆனார்கள் என்பது பற்றித் தெரியாது. நாங்கள் அனாதைகளாக ஊரார்களின் துணையோடு இங்கு வந்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள் 4,5 வயதுடைய மற்றுமிரு சிறுவர்கள். வரும் வழியிலே கல்லும், முள்ளும் தங்களது கால்களைக் காயப்படுத்தியதாகக் கூறிய அவர்கள், வயல்களினூடாகப் பயந்து ஓடிவரும் பொழுது சேற்றிலும், சகதியிலும் தாங்கள் புதைந்து விட்டதாகவும் சொல்கிறார்கள். தண்ணீர்த் தாகம், குண்டு, ஷெல், கண்ணிவெடியால் கொல்லப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் தாங்கள் வந்ததாக அவர்கள் கூறுகின்றனர். கடும் பசி, களைப்புடன் நீண்டதூரம் கல்லிலும், முள்ளிலும் பற்றைக் காடுகளுக்குள்ளாலும் தாங்கள் நடந்ததால் காயம் ஏற்பட்டு விட்டது என்றும் அவர்கள் சொல்கின்றனர்.

5 நாள் கைக்குழந்தையோடு இடம்பெயர்ந்து வந்த பர்சானா, தங்களோடு வந்த இன்னொரு கர்ப்பிணிப் பெண் வரும் வழியிலே கிளிவெட்டியில் வைத்து பிரசவ வலியால் அவதியுற்று குழந்தையைப் பெற்றதாகவும், ஆனால் அந்தக் குழந்தை அவ்விடத்திலேயே இறந்து விட்டதாகவும் கூறுகின்றார். பிற்பகல் மூன்றரை மணியாகியும் தனக்கு இன்னமும் பகல் சாப்பாடு கிடைக்கவில்லை எனக் கூறும் பர்சானா எனும் 5நாள் கைக்குழந்தையின் தாய், காலையில் விநியோகித்த பாணை வெறும் தண்ணீரில் தொட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

எல்.ரீ.ரீ.ஈ.யினரின் ஷெல் வீச்சினால் கைகளிலும், நாடியிலும், முகத்திலும் காயம்பட்ட ஜுனைதீன் தூபா எனப்படும் 15 வயதுச் சிறுமி, வாய் பேச முடியாதவாறு இருக்கின்றார்.

ஜெய்னுதீன் றியாஸ் (20 வயது) எனும் அனாதைப் பையன், எல்.ரீ.ரீ.ஈ.யினரின் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த நிலையில் இப்போது திருகோணமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருவதாகக் கூறுகிறார் அவரைப் பராமரிக்கும் சிறிய தாய் பிச்சையும்மா. றியாஸின் தகப்பனும் 87ஆம் ஆண்டு எல்.ரீ.ரீ.ஈ.யினர் மேற்கொண்ட குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்.

5 வருடங்களுக்கு முன்னர் தனது கணவரையும் எல்.ரீ.ரீ.ஈ.யினரே கொன்று விட்டதாகக் கூறுகிறார் 50 வயதான விதவைப் பெண் பாத்தும்மா. இப்பொழுது இருந்த இடத்தையும் விட்டுத் துரத்தி விட்டார்கள். பற்றைக் காட்டுக்குள் கிடக்கிறோம். என்ன செய்வதென்றே தெரியவில்லை என்று பெருமூச்சு விடுகிறார்.

ஷெல் தாக்குதலின் காரணமாக தங்களது வீடு எரிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்கிறார் எம்.எம்.அலீம். தனது இரு கடைகளும் எரிந்து விட்டதாகக் கூறுகிறார் ஏ.எஸ்.றிஸ்வின்.

ஏற்கனவே பல மாதங்களாகத் தங்களது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மீன்பிடிக்க வரக்கூடாது என்று எல்.ரீ.ரீ.ஈ.யினர் விதித்த தடையால் தொழில் பாதிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது இருப்பதற்கு இடம்கூட இல்லாமல் எல்லாவற்றையும் இழந்து தண்டவாள ஓரத்தில் குந்திக் கொண்டிருக்கிறோம் என்கிறார் ஏ.ஆர். பரீட் (25) எனும் இளைஞர்.


காட்டுத் தொழில் (மரம், விறகு, மணல், மண்) செய்யத் தமது பகுதிக்கு வரக்கூடாது என எல்.ரீ.ரீ.ஈ. தடைவிதித்து விட்டதால் தொழில் பாதிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது இருந்த இடத்தையும் பறிகொடுத்துவிட்டோம் என்கிறார் ஏ.எச். றிஜாத் எனும் வாலிபர்.

இடப்பெயர்வு காரணமாகப் பாடசாலை மாணவர்களின் கல்விக்குப் பலத்த அடி வீழ்ந்துள்ளது. புலமைப் பரிசில் பரீட்சை, தவணைப் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஒரு துண்டுப் பேப்பர் கூட எடுத்துவர முடியவில்லை. அவர்களது பாடப் புத்தகங்கள் இல்லை. பள்ளிச் சீருடைகள் இல்லை. மனமொப்பிப் படிக்கக்கூடிய சூழ்நிலை முகாமில் இல்லை. உறவினர்களைக் காணவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு அவர்கள் கல்வியைத் தொடர்வது என்று கேள்வி எழுப்புகிறார் ஆசிரியரான எஸ்.எச்.தமீம்.

தொடர்ந்து எல்.ரீ.ரீ.ஈ.யினர் எமக்கு இழப்புக்களையே ஏற்படுத்தி வருகின்றார்கள். நாம் 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து எல்.ரீ.ரீ.ஈ.யினரால் விரட்டியடிக்கப்பட்டோம். அதன்பிறகு மூதூருக்கு வந்தோம். சுனாமி தாக்கியது. இப்பொழுது மீண்டும் இடப்பெயர்வு. இனி நான் ஒருபோதும் மூதூருக்குப் போய் இழப்புக்களைச் சந்திக்கத் தயாராய் இல்லை. நாட்டின் சிங்கள மக்கள் வாழும் பகுதிக்குச் சென்று நிம்மதியாகப் பிழைப்பு நடத்தப் போகின்றேன் என்கிறார் பல முறை அகதியான பி.டி. றஹுமதுல்லாஹ் வயது (52)

எக்காரணம் கொண்டும் தனது குடும்பம் இனி மூதூருக்குப் போகாது என்கிறார் இரும்பு வியாபாரி ஏ.எல். தாபீர் (41 வயது). இதனைக் கூறிக் கொண்டிருக்கும்போதே மூதூரிலிருந்து இடம்பெயர்ந்த 17 குடும்பங்கள் இனிமேல் திரும்பி மூதூருக்குப் போவதில்லை, என்ற முடிவோடு கெக்கிராவை நோக்கிப் புறப்படுவதற்காக ரிப்பர் வாகனத்தில் ஏறி அமர்ந்திருக்கிறார்கள். ஏற்கனவே 15 குடும்பங்கள் அங்கு சென்றுவிட்டதாக அறியமுடிந்தது.

அதிர்ச்சிக்குள்ளான பல குடும்பங்கள் இனி மூதூரில் வாழப் போவதில்லை என்ற முடிவோடு அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, நிந்தவூர், சம்மாந்துறை, அநுராதபுரம், கொழும்பு, மாத்தளை, கண்டி, குருநாகல் போன்ற


உண[illegible]வேளையின் போது மணித்தியாலக்கணக்காக எரிக்[illegible] வெயிலில் வரிசையாக காத்திருக்கும் மக்கள்

பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து விட்டார்கள்.

எது எவ்வாறிருப்பினும் சொந்த மண்ணை - வாழ்ந்த இடத்தை - விட்டகல முடியாது என்ற மன உறுதியோடு இன்னமும் மூதூரில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் உள்ளார்கள். வாழ்வா? சாவா? என்ற ஜீவமரணப் போராட்டத்தில் வெற்றி பெற்ற இந்த மக்களின் பற்றுதான் மூதூர், தோப்பூர் மற்றும் திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் இருப்பு உரிமையைத் தீர்மானிக்கும்.

இதுவரை மூதூர் தாக்குதலில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் சரியான எண்ணிக்கை உத்தியோக பூர்வமாகத் தெரியவரவில்லை. ஆனால், அது அரசு கூறுவது போல் முப்பது நாற்பது பேரல்ல. இதனை விடப் பல மடங்கு அதிகமாயிருக்கும். அதேவேளை பயங்கரவாதிகளால் விசாரணை என்ற பெயரில் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட அல்லது காணாமற்போன முஸ்லிம்களின் சரியான கணக்கெடுப்பும் இதுவரை இல்லை. காலப்போக்கில்தான் இந்த விபரங்கள் துல்லியமாகத் தெரியவரும்.




எடுத்த காரியம் யாவினும் வெற்றி,
எங்கு நோக்கினும் வெற்றிமற் றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி,
வேண்டி னேனுக் கருளினள் காளி!

- சுப்பிரமணிய பாரதியார்



# இரக்கம்!



வேணு கால் போன ஊருக்கு எல்லாம் போவான். வேலை கேட்பான். யாரும் கொடுக்க மாட்டார்கள். அப்படியே கொடுத்தாலும் பணம் கொடுக்கமாட்டார்கள். கடைசியில் பிச்சை எடுப்பான். யாராவது போட்டால் சாப்பிடுவான். இல்லாவிட்டால் பட்டினி கிடப்பான். அவனுக்கு அவமானம், பட்டினி எல்லாமே பழகிப் போய்விட்டன.

ஒரு நாள் வேணு ஒரு கிராமத்திற்கு இரவு நேரத்தில் வந்தான். ஒரு பாழும் மண்டபத்தில் படுத்தான். அது நல்ல குளிர் காலம். யாரோ கொடுத்த ஒரு ட்ரவுசர்தான் அவனுக்குச் சொந்தமாக இருந்த ஒரே ஆடை. யாரோ கொடுத்த ஒரு கிழிந்த கம்பளிப் போர்வைதான் இந்தக் குளிர் காலத்தில் அவனுக்கு மிகவும் உதவியாக இருந்தது.

அந்தக் கம்பளிப் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்தான். உடனே உறங்கி விட்டான். சிறிது நேரத்திற்குப் பிறகு யாரோ தன் போர்வையை எடுப்பதை உணர்ந்தான். திடுக்கிட்டு கண் விழித்துப் பார்த்தான். யாரோ ஒருவன் தன்னுடைய போர்வையைத் திருடிக்கொண்டு ஓடுவதைக் கண்டான்.

'என்னை விட இவன் பெரிய பிச்சைக்காரனாக இருப்பான் போல் இருக்கிறது' என்று எண்ணிச் சிரித்தான். குளிரால் உடல் நடுங்கியது. பிறகு அவனுக்கு உறக்கமே வரவில்லை. பொழுது விடிந்ததும் ஊருக்குள் சென்றான். ஊரில் நிறையப் பணக்காரர்கள் இருந்தார்கள். வேணு பலரிடம் வேலை கேட்டான். இனிப்பாகப் பேசக்கூடிய கண்ணுசாமி, தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சும் வேலை கொடுத்தார். இரண்டு வேளை சாப்பாடு போட்டார். சம்பளம் கேட்டான். சாப்பாடுதான் சம்பளம் என்றார் கண்ணுசாமி. "சரி ஐயா! மேலே போர்த்திக் கொள்ள ஒரு துணி கொடுங்கள் ஐயா!" என்றான் வேணு.

செத்தால் தான் துணி கொடுப்போம். அது புண்ணியம் என்று விளக்கம் அளித்தார் கண்ணுசாமி.

## பாப்பா முரசு சிறுகதை

அன்று இரவும் அந்த மண்டபத்தில்தான் வேணு படுத்தான். பனிக் காற்று அவன் வெற்று உடம்பை ஊசி போலத் துளைத்தது. தூக்கம் வரவில்லை. சிறிது நேரத்தில், "ஐயோ, கிணற்றில் தவறி விழுந்து விட்ட என் மகனை யாராவது காப்பாற்றுங்கள்," என்ற கூச்சலைக் கேட்டு அந்தக் கிணற்றடிக்கு ஓடினான் வேணு. தாய் கதறினாள். நிலைமையைப் புரிந்துகொண்டு அந்த ஆழமான கிணற்றுக்குள் இறங்கி, குழந்தையை உயிரோடு மீட்டுக்கொண்டு வந்தான் வேணு. அந்த நல்ல தாய் வாய் நிறையப் புகழ்ந்தாள். அவளைப் பார்த்தால் பணக்காரி போலத் தோன்றியது. ஆனால், அவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்தாள்.

"அம்மா! எனக்குப் பணம் வேண்டாம். குளிருக்கு ஒரு போர்வை கொடுங்கள்" என்றான் வேணு.

அவள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவள் போலப் போய்விட்டாள்.

ஊராட்சித் தலைவரின் வீட்டில் அவன் ஒரு நாள் வேலை பார்த்தான். சோறு போட்டார்கள். சம்பளம் இல்லை. போர்த்திக்கொள்ள ஒரு துணி கேட்டான். செத்தால்தான் துணி போடுவோம். உயிரோடு இருக்கும் உனக்கு என்ன கேடு? என்று அதட்டி அவனை விரட்டி விட்டார் தலைவர்.

ஏழெட்டு நாட்கள் அவன் அந்த ஊரிலேயே இருந்தான். எல்லோருமே அவனை நன்றாக வேலை வாங்கினார்கள். கூலி இல்லாத அவனது உழைப்பு அத்தனைப் பேர்களுக்கும் தேவைப்பட்டது. ஆனால், உடம்பில் துணி இல்லாமல் குளிரில் விறைக்கும் அவனுக்கு ஒரு கந்தல் துணியைக் கொடுக்கக் கூட யாருமே தயாராக இல்லை.

அந்த ஊர் புரோகிதர் நல்லவர். ஆனால் ஏழை. அவர் அவனுக்கு ஒரு போர்வை வாங்கிக் கொடுக்கத் துடித்தார். ஆனால், அதற்கு அவரிடம் வசதி இல்லை. அதனால் அவர் வேணுவைத் தனியாக அழைத்து ஒரு ரகசியத்தைக் கூறினார். மறுநாள் அவன் ஒரு மரத்தடியில் செத்துக் கிடந்தான். ஊர் பெரிய மனிதர்கள் எல்லாம் அங்கே கூடிவிட்டார்கள். புரோகிதர் வந்தார். அநாதையாக செத்தவனுக்கு துணி போடுவது பெரிய புண்ணியம். இவனுக்கு யார் துணி போடப் போகிறீர்கள்? என்று கேட்டார்.

ஊர்ப் பெரிய மனிதர்கள் அத்தனை பேரும் அவன் உடலில் புதுத் துணிகளைக் கொண்டு வந்து போட்டனர். வேணு சிரித்துக் கொண்டே எழுந்து உட்கார்ந்தான். "ஊர்ப் பெரியவர்களே! உயிரோடு இருப்பவனுக்கு ஒரு கிழிசல் துணி கொடுக்கக் கூட முன் வராத நீங்களோ, புண்ணியத்துக்காக செத்தவனுக்குப் புதுத் துணி போடுகிறீர்கள். உங்களிடம் இத்தனை துணிகளை வாங்குவதற்காகத்தான் நான் செத்தவன் போல நடித்தேன். இதற்கு ஐடியா கொடுத்த புரோகிதருக்கு நன்றி. போய் வருகிறேன்" என்று கூறி விட்டு, அந்த ஊரைவிட்டு நடையைக் கட்டினான் வேணு. இப்படி இதயமற்ற அரக்கர்களாக நாம் இருப்பது தவறு.

ஏழைக்கு இரங்குகிறவன் இறைவனுக்கு கடன் கொடுக்கிறான்.

# ஆத்திசூடி

## பருவத்தே பயிர் செய்.

நீ செய்யும் கருமங்களைச் செய்ய வேண்டிய காலத்திலேயே செய்.

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# அம்மா

அல்லும் பகலும்
நம்மையே சுற்றும்
அன்புச் சூரியன்
அம்மா!
அன்று பிறந்த
குழந்தை கையிலும்
அகப்படும் வானம்
அம்மா!
கல்முள் நமது
காலில் படாது
காக்கும் பூமி
அம்மா!
கண்ணீர் அலையில்
கலங்க விடாத
கருணைக் கடலும்
அம்மா!
பல்லக்கெனவே பரிவாய்ச்
சுமந்து
பாலும் தருபவள்
அம்மா!
பன்னீர் மலரின்
மிருதாய்த் துலங்கும்
பாசத் துளி அம்மா!
இல்லம் அழகுக்
கோயில் அதனுள்
ஏற்றிய தீபம் அம்மா!
எண்ணும் பொழுது
கண்முன் தெரியும்
எளிமைத் தெய்வம்
அம்மா?




# அதிசய உலகம்

## மரக் கரடி


**கரடி** இனத்திலேயே மிகவும் சிறிய கரடி சூரியக் கரடி தான். இதன் மார்பில் சூரிய உதயம் அல்லது அஸ்தமனம் போன்ற வெள்ளை அல்லது மஞ்சள் நிறம் பிறைவடிவத்தில் காணப்படுவதால் இதற்கு இப்பெயர் வந்தது.

மலேசிய தீபகற்பம், கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ், மியான்மர் ஆகிய நாடுகளிலும் போர்னியோ, சுமத்திரா தீவுகளிலும் இது அதிகம் காணப்படுகிறது. மலாய் மொழியில் இந்த சூரியக் கரடிகளுக்கு 'பாசின்டோ நான்டெங்கில்' என்று பெயர். இதற்கு உயரமான இடத்தில் உட்கார விரும்பவர் என்று அர்த்தம். இதற்குக் காரணம் இந்தக் கரடி பெரும்பாலான நேரத்தை மரத்திலேயே கழிப்பதுதான். இரையைத் தேடும்போதுதான் இதை நிலத்தில் காண முடியும்.



குளிர்காலங்களில் இந்தக் கரடி தூங்கிப் பொழுதைக் கழிப்பதில்லை. ஏனென்றால் இதற்கு எல்லாக் காலங்களிலும் உணவு கிடைத்துக் கொண்டிருப்பதால் குளிர்காலத்தில் இது தூக்க நிலைக்குச் செல்வதில்லை. மற்றக் கரடிகளை விட இதற்கு நாக்கு நீளமாக இருக்கும். இது பூச்சிகளைப் பிடித்துத் தின்னுவதற்கும் தேனை உறிஞ்சிக் குடிப்பதற்கும் ஏதுவாக இருக்கிறது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 22.08.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 657**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 655

**பரிசுக்குரியவர்:**
ரமணன், கிங்ஸ்ரன் சர்வதேசக் கல்லூரி,
முகத்துவாரம், கொழும்பு - 15

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். ஜே, எம். அஸார்தீன், தரம் - 7பி, ஸதாத் மகா வித்தியாலயம், கொடபிடிய, அகுரஸ்ஸ. | யோகராசா சிவாஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| ஏ. ரொஸ்னியா ஜெனட், தரம் - 8, சென் கபிரியல் பெண்கள் கல்லூரி, ஹட்டன். | மர்ஸியா நாபிர், இல. 11/02A, பாகிர் மாகார் ஒழுங்கை, மருதானை, பேருவளை. |
| ம. அபிலாஸ், தரம் - 2H, இந்துக் கல்லூரி, வாழைச்சேனை. | ஜெ. மயூரன், தரம் - 3, தூய தோமாவின் கல்லூரி, பண்டாரவளை. |
| டி. ஆர். ஜெனிங்ஸ் டிவின்ஷ்ரன், கிங்ஸ்ரன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15. | கே. பிரசாந்தி, 89,பாபா பதி இல்லம், ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. |
| த. தனுஜன், இல - 18/1, அலோய் மாவத்தை, கொள்ளுப்பிட்டிய, கொழும்பு - 3 | எம். ஜனார்த்தன், இல.31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. |

# சில விடுகதைகள்


1. பொட்டுப்பையன் போகிறான் அவன்போன தடம் தெரியலை - அவன் யார்?
2. பைக்குள் அவன் இருந்தால் வேறு யாரையும் இருக்கவிடமாட்டான் அவன் யார்?
3. புரியாத மொழி பேசும் புவனமெல்லாம் பார்த்துவரும் பணம் கொடுத்தால் பறந்து வரும் - அது என்ன?
4. மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையும் - அது என்ன?
5. வயிறு புடைக்கத் தின்றால்தான் நிமிர்ந்து நிற்பான் - அவன் யார்?
6. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறில்லை - அது என்ன?
7. குளத்தங்கரையில் ஒற்றைக்காலில் தவம் புரியும் வெள்ளைச்சாமியார் இறைக்காக அல்ல! இரைக்காக - அவர் யார்?
8. வெள்ளைக் குதிரையும் கறுப்புக் குதிரையும் மாறிமாறி ஓடும் ஆனால் பிடிக்கமுடியாது - அது என்ன?
9. வேகாத வெயிலில் வெள்ளையப்பன் விளைகிறான் - அவன் யார்?
10. விண்ணில் சிரிப்பாள் சமயத்தில் கண்ணைப் பறிப்பாள் - அவள் யார்?

**விடைகள்**
1. எறும்பு
2. ஓட்டை
3. தந்தி
4. சாம்பிராணி
5. தலையணை
6. அகப்பை
7. கொக்கு
8. பகல் - இரவு
9. உப்பு
10. மின்னல்.




## ஒளி வீசும் ஒட்டகம்

இஸ்ரேலின் தென்புறத்திலுள்ள நெகெங் பாலைவனப் பகுதியிலேற்படும் சாலை விபத்துக்குக் காரணமே ஒட்டகங்கள்தான். ஒட்டகங்களின் தோலில் ஒளி வீசும் வர்ணத்தை வரிகளாகத் தீட்டி விடுவதன் மூலம் இரவு நேரங்களில் ஒட்டகங்களை இனங்கண்டு விபத்துகளைச் சாரதிகள் தவிர்த்துக் கொள்ள உதவுகிறார்கள் பொலிஸார்.



## வாத்துப் பொரியல்




வாத்துகளின் கூட்டம் கண்ணைக் கவருகிறதல்லவா? வடக்கு ஜெர்மனியின் பிளென்ஸ்போர்க் நகருக்கு அண்மையிலுள்ள மார்க்கரெப் பண்ணையில் எடுக்கப்பட்ட படம் இது. நாலாயிரம் வாத்துகளை ஒரேயடியாகக் கொன்று பொரித்துத் தின்பார்கள் இந்த ஜெர்மனியர்கள். எல்லாம் நவம்பர் 11ஆம் திகதி கொண்டாடப்படும் புனித மார்ட்டின் தினத்துக்காகத்தான். வாத்துப் பொரியல்தானாம் அந்தப் புனித தினத்தில் வழங்கப்படும் பாரம்பரிய விருந்து.

## மண்ணுக்குள் மனிதன்




நியூயோர்க்கிலுள்ள கொஸ்னித் தீவில் 2003ஆம் ஆண்டு நடைபெற்ற, மணலைக் கொண்டு சிற்பங்கள் செய்யும் 13ஆவது ஆண்டு விழாவில் மணலாலான சிற்பமொன்றுக்குள் தனது உடல் முழுவதையும் மறைத்துக்கொண்டு துவாரமொன்றுக்கு கூடாகத் தலையை மட்டும் நீட்டுகிறார் 10 வயதான சல்பகானோ. அவரும் அவரது பெற்றோர்களும் இச் சிற்பத்தை வடிவமைத்திருந்தனர்.




## மூக்கின் முயற்சி

தோடம்பழத்தை மூக்கால் நீண்ட தூரத்துக்குத் தள்ளிச் சென்றுகூட உலக சாதனை புரியலாம். அஸ்ரிரா பர்மன் என்பவர் 2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12ஆம் திகதி, 24 நிமிடங்கள் 36 செக்கன்களில் ஒரு மைல் தூரத்துக்கு மூக்கால் தோடம்பழத்தை தள்ளிச் சென்றிருக்கிறார். அடேயெங்கப்பா! பெரு முயற்சிதான்.

## சூரிய சக்தி கார்

அமெரிக்காவில் நடைபெற்ற சூரிய சக்தியில் இயங்கும் காரோட்டப் போட்டியில் 2300 மைல்களைக் கடந்து மினெசோட்ட பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சாரதியான பிரையன் ஈக்கோவ் என்பவர் மகத்தான சாதனையைப் படைத்தார். இப்போட்டியானது பல நாடுகளின் எல்லைகளைக் கடந்து நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



**திருத்தம் :-** கடந்த வாரம் இப்பகுதியில் 'கள்ளத் தோணி' என்ற தலைப்பில், அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் இருந்து கியூபா நாட்டுக்கு என தவறுதலாகப் பிரசுரமாகியிருந்தது. கியூபா நாட்டிலிருந்து அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்துக்கு என்பதே சரியானது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.



பிரசன்னா - உதய தாரா
கண்ணும் கண்ணும்

# 40 கோடி வசூல்!

வடிவேலு கதாநாயகனாக நடித்துள்ள 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' படம் சக்கைப்போடு போடுகிறது. திரையிட்ட தியேட்டர்களில் கூட்டம் அலைமோதுகிறது. இந்தப் படம் 40 கோடி ரூபாய் வரை வசூலித்துக் கொடுக்கும் என்று பிரபல டைரக்டர் மனோஜ்குமார் ஆரூடம் கூறியுள்ளார்.

இப்படிப்பட்ட நல்ல படம் மிருக நல வாரியத்தால் சில நாட்கள் முடங்கிக் கிடந்தது வருத்தம் அளிக்கிறது என்ற அவர், இப்படத்தை ரிலீஸ் செய்ய வைத்த முதல்வர் கருணாநிதி திரையுலகின் நன்றிக்குரியவர் என்றார்.

## புத்தர் கோவிலில் 'ஜாம்பவான்' பாடல்

தாய்லாந்து நாட்டில் 140 அடி உயரத்தில் கம்பீரமாய்த் தோன்றும் புத்தர் சிலை, உலக அதிசயங்களில் ஒன்றாகும். இந்த புத்தர் சிலையைச் சுற்றி ஆயிரக்கணக்காக புத்த பிக்குகளின் சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன. பார்க்க, கண்கொள்ளாக் காட்சியாகத் திகழும் இந்த அதிசய இடத்தில் 'ஜாம்பவான்' படத்தின் பாடல் காட்சி படமானது.

இதுவரை எந்தப் படங்களுக்கும் ஷூட்டிங் அனுமதி வழங்கப்படாத இந்த இடத்தில் அரசின் விசேஷ அனுமதி பெற்று படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது. இந்த புத்தர் கோவிலின் இன்னொரு சிறப்பு, நாம் நினைக்கும் எந்தக் காரியமும் நடக்கும் அபூர்வ சக்தி கொண்டது என்று நம்புகிறார்கள்.

கவிஞர் முத்துவிஜய் எழுதிய பாடல் காட்சியை மூன்று கேமராக்கள் மூலமாகப் படம் பிடித்துள்ளார்கள். அனல் பறக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பிரசாந்த் - நிலா சிறப்பாக நடனமாடியுள்ளார்கள்.



## குறும்பு நடிகையின் காதல் வளருமிடம்!

சென்னை, அண்ணாநகர் 14 - ஷாப்ஸ் அருகில் உள்ள ஒரு .'பிட்னஸ் சென்டருக்கு தினமும் உடற்பயிற்சி செய்ய வரும் குறும்பு நடிகை, அந்த உடற்பயிற்சிக்கூடத்தின் உள்ளே போய் 'எக்சர் சைஸ்' செய்கிறாரோ, இல்லையோ, தினமும் அந்த ஜிம்மின் வாசலில் உள்ள கார் பார்க்கிங்கில் நின்று கொண்டு குறைந்தது சுமார் ஒரு மணி நேரமாவது தன் பாய்.'பிரண்டிற்கு செல்.'போனில் ஒரே சிரிப்பும் சந்தோஷமுமாக காதல் கடலை வறுப்பதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார் குறும்பு! இந்த 'ஜிம்'மைக் 'குறும்பு'க்கு நெருக் கமான 'தில்' நடிகர்தான் சில மாதங்களுக்கு முன் திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

## நடிகர்களுக்கு இன்சூரன்ஸ்

மாரிமுத்து கதை, வசனம் எழுதி இயக்கிய 'கண்ணும் கண்ணும்' படத்தின் படப்பிடிப்பு முழுக்க குற்றாலத்தில் நடந்தது. அதை நேரில் பார்த்த தயாரிப்பாளர்கள் எம்.ஆர்.மோகன்ராதா, பி.எல்.ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு உதறல்.

ஏனெனில், படப்பிடிப்பு மலைப்பகுதியில் ஆபத்தான இடங்களில் நடந்தது. இதனால் பட நாயகன் பிரசன்னா, நாயகி உதயதாரா, டைரக்டர் மாரி முத்து உள்ளிட்ட நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவரையும் ஐந்து லட்சம் ரூபாய்க்கு இன்சூரன்சு செய்தனர் தயாரிப்பாளர்கள்.



நமீதா

## 'ந' நடிகை கொடுத்த 'சவுண்டு எஃபக்ட்'

அந்த மூன்றெழுத்து மும்பை வரவான 'ந' நடிகை சென்னை, நுங்கம் பாக்கத்தில் வாடகைக்கு வீடு எடுத்து கபூர் காதலருடன் தங்கி, தமிழ்ப் படங்களில் நடித்து வருகிறார். ஆனாலும், அவ்வப்போது ஒரு 'சேன்ஜி'ற்கான...அதாங்க வித்தியாசத்திற்கும், விறுவிறுப்பிற்காகவும் சென்னை, வடபழனியில் உள்ள 'பசுமை பூங்கா' நட்சத்திர ஹோட்டலில் ரூம் போட்டு வாழ்க்கையையும் வாலிபத்தையும் என்ஜாய் பண்ணும் வழக்கமுடையது இந்த ஜோடி.

இப்படி சமீபத்தில் இருவரும் ரூம் போட்டு .'.புல் என்ஜாய்மெண்ட்டில் இருந்த போது உற்சாகத்தாலும், உள்ளே தள்ளிய உற்சாக பானத்தின் உந்துதலாலும், எக்கச்சக்க 'சவுண்டு எ.'.பக்ட்' கொடுத்திருக்கிறார் 'ந' நடிகை. அம்மணியின் ஆனந்த அலறலைக் கேட்டு அக்கம் பக்கத்து அறைக்காரர்கள் அலறியடித்துக் கொண்டுபோய் அந்த ஹோட்டலின் நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளனர். அதன்பின் 'ந' நடிகையின் அறைக் கதவைத் தட்டி, அரை நிர்வாணமாக நின்ற அந்த ஜோடியிடம் சொல்லி டோட்டலாக 'சவுண்டு எ.'.பக்ட்' டைக் குறைத்திருக்கிறது ஹோட்டல் நிர்வாகம். இது எப்படியிருக்கு?

## டைரக்டருக்கு கார் பரிசு!

'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' சக்கைப்போடு போடுவதால் அதன் தயாரிப்பாளர் ஷங்கர் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருக்கிறார். படத்தின் இயக்குநர் சிம்புத்தேவனை வீட்டுக்கு அழைத்து ஆரத்தழுவி மகிழ்ந்தார். அதோடு அவருக்கு மாருதி கார் ஒன்றையும் பரிசாக அளித்துள்ளாராம். ஏற்கனவே 'காதல்' படத்தை ஹிட் ஆக்கிய பாலாஜி சக்திவேலுக்கும் இது போல் கார் பரிசாக அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவனுக்காகப் போராடும் மாதவன்!

வி.ஜே.பிலிம்ஸ் மற்றும் குரு பிலிம்ஸ் சார்பில் தயாராகும் புதிய படம் 'ஆரியா'. இந்தப் படத்தில் கதாநாயகனாக மாதவனும், கதாநாயகியாக பாவனாவும் நடிக்கிறார்கள்.

மருத்துவக் கல்லூரி மாணவன் பிரவீன்குமார் சந்தர்ப்ப சூழ்நிலையால் கைதியாகி சிறையில் அடைக்கப்படுகிறார். அவரை மீட்க மாதவன் போராடுகிறார்.

இதுவே படத்தின் கதை. வில்லன் வேடமேற்றுள்ள பிரகாஷ்ராஜ், பாவனாவை ஒருதலையாகக் காதலிக்கிறார்.

இந்தப் படத்துக்காக ஐதராபாத்தில் ஜெயில் செட் அமைத்து படப்பிடிப்பு நடத்தப்பட்டது.

தென் சென்னை தாதாவாக ஸ்னேக்பாபு என்ற பெயரில் வடிவேலு இதில் நடிக்கிறார்.

இரண்டு பாடல் காட்சி அவுஸ்திரேலியா, லண்டனில் படமாக்கப்படுகிறது. தீபாவளிக்கு இந்தப் படம் ரிலீஸ் ஆகிறது.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் : பாலசேகரன், ஒளிப்பதிவு: கே.வி.குகன், இசை: மணிஷர்மா, பாடல்கள்: பா.விஜய், நடனம் : ராஜுசுந்தரம், எடிட்டிங் : ஜெய்சங்கர்.

## வைணவராகக் கமல்

கமலஹாசன் பத்து வேடங்களில் நடிக்கும் 'தசாவதாரம்' படத்தின் படப்பிடிப்பு விரைவில் திருச்சி அருகேயுள்ள தாராசுரத்தில் தொடங்குகிறது. இங்குள்ள பல நூற்றாண்டுகள் பழைமையான கோவிலில் படப்பிடிப்பை நடத்துகின்றனர். அப்போது கமல் வைணவர் வேடமேற்று நடிக்கிறார். நூறு வுருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த வைணவராக அவர் வருகிறாராம்.



ஷாம் - ரக்ஷிதா
மனதோடு மழைக்காலம்

## 'சரக்கு' அடிப்பதை நிறுத்திய நடிகை!

'ஜோர்' நாயகியை ஞாபகம் இருக்கிறதா...? அம்மணி தற்பொழுது கூட 'ஜித்தன்' நடிகருடன் ஒரு படத்தில் டூயட் பாடி, அப்பட ரிலீஸுக்குக் காத்திருப்பவர்...இடையில் தற்கொலைக்கு எல்லாம் முயன்றாரே அவரேதான்!

அந்த 'உஜாலா' அழகி, பார்க்கத்தான் அழகி. ஆனால் ஒரு நாளைக்கு ஆறு பீர் அல்லது அதற்குப் பதில் ஒரு .'.புல் 'புளு ரீப.'.ண்ட்' ஜின் அடிக்கும் வழக்கமுடையவராம். அதுவும் எப்படி? இரவு 12 மணிக்கு பாட்டிலை ஓப்பன் பண்ணினார் என்றால், ஒரு மணி சுமாருக்கு அரை பிளேட் சிக்கன் பிரியாணி வேண்டுமாம் அம்மணிக்கு! ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட்டு தண்ணி அடிக்கும் வழக்கமுடைய 'உஜாலா' நாயகி அது மாதிரி ஹோட்டலில் பாட்டில் வாங்கினால் ஒன்றுக்கு நான்கு விலை என்பதால் தன் அடிப்பொடிகளை விட்டு டாஸ்மாக்கில் சரக்கு வாங்கி வரச்சொல்லி, அடித்து விட்டு படுத்து உறங்கி, காலையில் லேட்டாக ஸ்பாட்டிற்கு வந்து நிற்கும் வழக்கமுடையவர். அப்படிப்பட்ட சரக்கு மோகி(னி)யான அம்மணி, சமீபத்தில் சொந்த ஊர் மும்பையில் தீவிர வயிற்று வலியால் துடித்திருக்கிறார். உடனடியாக டாக்டரிடம் ட்ரீட்மெண்ட்டிற்கு தூக்கிச் சென்றிருக்கின்றனர். இனி, சரக்கு அடிக்கும் பழக்கத்தை அடியோடு விட்டுவிட வேண்டும். இல்லையேல் 'உஜாலா' நடிகையின் கதி அதோகதிதான்! என்று டாக்டர்கள் எச்சரித்துள்ளதைத் தொடர்ந்து 'உஜாலா'ம்மணி சரக்கு அடிக்கும் பழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டாராம் பாவம்!





ஷாரூக் - சரிதாத் தாஸ் ஆட்டம்

## மோனிகாவின் மகிழ்ச்சி!

**வ**டிவேலு ஜோடியாக 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' படத்தில் நடித்த மோனிகா சந்தோஷத்தின் உச்சத்தில் இருக்கிறார்.

அம்மணியின் மனங்கொள்ளா இந்த மகிழ்ச்சிக்குக் காரணம், இம்சையின் இமாலய வெற்றிதான். இப்பொழுது ரகுவண்ணன், அபிநய், ரிஷி மூவரும் கதாநாயகர்களாக நடிக்கும் 'தொடக்கம்' எனும் படத்தில் கதாநாயகி ஆகியிருக்கிறார். சென்னையில் இதன் படப்பிடிப்பில் இருக்கும் மோனிகா, அதே நேரம் தெலுங்கிலும் ஒரு படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

இந்தத் தெலுங்கு மற்றும் தமிழ்ப் படத்தின் படப்பிடிப்பு ஆந்திரா மற்றும் சென்னையில் நடைபெற்றபோது, ஏகப்பட்ட இரசிகர்கள் சூழ்ந்துகொண்டு, 'இம்சை அரசனில்' பழைய பாணியில் மோனிகா ஆடிப் பாடுவதைப் போன்று ஆடிப்பாடி போஸ் கொடுக்கச் சொல்லி, அன்புத் தொல்லை கொடுத்தார்களாம். அதனால் மேலும், மேலும் மகிழ்ச்சியில் ஒரு சுற்று பருத்துப் போய் விட்டாராம் அம்மணி மோனி!



பிரசன்னா - உதய தாரா
கன்னும் கன்னும்

## சண்டைக்குத் தயார்!

**சி**னிமா உலகம் இரு கூறாகி நிற்கிறது. முதலாளிகள் ஆள்வோர் பக்கம் சாய்ந்துள்ளனர். நடிப்புக்காரர்கள் அம்மாவுடன் கைகோர்த்துள்ளனர். இருதரப்புக்கும் எப்போது வேண்டுமானாலும் முட்டல் வரலாம் என்று கோடம்பாக்கம் பதற்றப்படுகிறது.

## 35 நாளில் உருவாகும் குழந்தைகள் படம்

**சி**த்திரம் பேசுதடி' ஹிட் படத்தை இயக்கிய மிஸ்கின் அடுத்து ரவிகிருஷ்ணா நாயகனாக நடிக்க, குழந்தைகளுக்கான படமொன்றை இயக்குகிறார். இப்படத்தை ஏ.எம்.ரத்னம் தயாரிக்கிறார். பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார். இளையராஜா இசையமைக்கிறார். இந்தப் படத்துக்கு கதாநாயகி கிடையாதாம். 35 நாட்களில் மொத்தப் படத்தையும் எடுத்து முடித்து ரிலீஸ் செய்யப்போகிறாராம்.

# சினி பிட்ஸ்

♥ **சோ**னியா அகர்வால் இந்த வருட இறுதிக்குள் இயக்குநர் செல்வராகவனை கல்யாணம் கட்டிக்கொண்டு செட்டில் ஆகத் திட்டமிட்டிருப்பதால் தன்னைத் தேடிவரும் புதுப்பட வாய்ப்புகளையெல்லாம் மறுத்து வருகிறாராம். செல்வராகவனின் திட்டம் என்னவோ?

♥ '**ஆ**ழ்வார்' படத்தில் அஜீத்துக்கு ஜோடி அசின் என்றாலும் கீர்த்தி சாவ்லாவும் முக்கிய பாத்திரமொன்றில் நடிக்கிறாராம். அஜீத்துக்கு தோழியாக மட்டும் நடிக்கும் அம்மணிக்கு இதில் மெடிக்கல் காலேஜ் ஸ்டுடண்ட் கேரக்டராக்கும்.

♥ '**இது** காதல் வரும் பருவம்' படத்தில் கிரண் மாடல் அழகியாக நடிக்கிறார்.

♥ '**மி**ஸ்டர் பாரத்' படத்தில் ரஜினி, சத்தியராஜ் பாடி 'என்னம்மா கண்ணு' பாடலை திருவிளையாடல் படத்தில் தனுசும், பிரகாஷ் ராஜும் மீண்டும் பாடுகிறார்கள்.

♥ **த**னுஷ் புதிதாகப் படக் கம்பெனி ஆரம்பித்து சினிமா தயாரிப்பில் இறங்க ஆலோசித்து வருகிறாராம்.



ரேணுகா மேனன்

## டைரக்டரை கட்டிப்பிடித்த சரத்பாபு

'**ம**னதை திருடி விட்டாய்' படத்தை இயக்கியவர் நாராயணமூர்த்தி. இவர் தனது பெயரை நரேன் தெய்வநாயகம் என மாற்றி 'ஒரு பொண்ணு ஒரு பையன்' படத்தை டைரக்ட் செய்து வருகிறார். டப்பிங் முடிந்து படம் ரீ ரிக்கார்டிங்குக்குத் தயாராக இருக்கிறது.

இந்தப் படத்தில் டப்பிங் பேசி முடித்த சரத்பாபு, டைரக்டர் நரேன் தெய்வநாயகத்தை கட்டிப் பிடித்து வாழ்த்தினாராம். மகேந்திரன் சாரின் 'உதிரிப்பூக்கள்', 'முள்ளும் மலரும்' மாதிரி படம் யதார்த்தமாக இருப்பதாகப் புகழ்ந்து தள்ளியுள்ளார். சந்தீப், ரூபா ஆகியோர் நாயகன், நாயகியாக நடித்துள்ளனர்.




## 'ஐயா' நடிகையின் 'வாமிட்', அட்மிட், ஸ்டாப் இட்!

**அ**ந்த 'ஐயா' நாயகி 'வம்பு' தம்பு நாயகருடன் நெருக்கமாக இருந்ததில் கலக்கமாகிப்போயிருக்கிறார். தற்பொழுது, அதாகப்பட்டது- 'வம்பு' தம்புவும் 'ஐயா' அம்மணியும் கிறக்கமாகவும் நெருக்கமாகவும் சுற்றித் திரிந்ததில் அம்மணி ஆஸ்பிடலில் 'அட்மிட்' ஆகவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

சென்னையில் உள்ள ஆஸ்பிடல்களில் 'அட்மிட்' ஆனால், 'வாமிட்' மேட்டர் 'லீக் அவுட்' ஆகிவிடும் என்பதால் ஹைதரா பாத்தில் உள்ள ஒரு பிரபல பிரை வேட் ஆஸ்பிடலில் 'அட்மிட்' ஆகி 'வாமிட்' மேட்டரை 'ஸ்டாப் இட்' செய்திருக்கின்றனர். 'வம்பு' தம்புவும் இந்த வைத் தியத்தின் போது அம்மணிக்கு அருகில் இருந்து தைரியம் சொல்லி சாத்துக்குடி ஜூஸ் பிழிந்து கொடுத்து, உடம்பைத் தேறச் செய்திருக்கிறார் என்பது கூடுதல் தகவல்!

## சி னி வி சி ட்



ஸ்ரீகாந் - பாவனா
கிழக்கு கடற்கரை சாலை



# தேன் கிண்ணம்

## சுவாசத் துருத்திகள்

வான் மழை காணா
வரண்ட பூமியிலே
பயிர் முகை வாடும்;
சோரும் நிலை கண்டு
ஏழை மனங்கள்
ஏங்கும், விசும்பும்!

வான் பார்த்துப் பார்த்து
வற்றிய கண்ணீர் ஓடையில்
மாரி மழையின் கழுத்தறுப்பு -
புழுதியை வார்த்துப்
புண்ணியந் தேடும்!

சில வேளை -
வான மேடை கூத்தரங்காகும்...
களை கட்டி!
விண்ணதிர, மண்ணதிர
வாய்ப்பறையாய்...
ஓங்கார முழக்கங்கள்!
பளிச்சிட்டுப்
பார்வையைப் பறிக்கும்
பேரிடி! பெரு மின்னல்!
பக்க வாத்தியமாய்
ஒத்தூதும் சுழல் காற்று!
கிண்ணி தட்டும் மரமட்டை!

கூத்தின் முடிவு...
மாரியுமில்லை!
மண்ணாங் கட்டியுமில்லை!
வானம் -
மோன நிலையில்
மோட்சம் தேடும்!
சுவாசத் துருத்திகளோ...
அனற் காற்றை உமிழும்!

*–ஏறாவூர் அனலக்தர்.*

## பாதி ராத்திரியில்...!

நான் காத்திருக்க
நீ கடந்து செல்வாய்
தூக்குப்போடுவதா?
தீக்குளிப்பதா?
மனசுக்குள் - மரணம்
பற்றிய பட்டிமன்றம்.

யாருக்கும்
கேட்டுவிடாதபடி
தலையணையில்
முகம் புதைத்து
விம்மி விம்மி அழுவது
கொஞ்சம் ஆறுதல்.

செயற்கையாய்
புன்னகைத்து
கண்கள்
கலங்கிடும் போதெல்லாம்
தூசு விழுந்துவிட்டதாய்
கூசாமல் பொய் பேசி...
பகல்
பொழுது கழியும்.

என்றாலும்
பாதி ராத்திரியில்
உறக்கமின்றி
உன் முகம்
தோன்றும்போதுதான்
செக்கனுக்கொருமுறை
செத்துப்
பிழைக்கிறேன்.

*-சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியாபுரம்.*

## காதல் க(பு)னிதமாகிறது

மண்ணரிப்பு
தடைபட்ட பின்னும்
அலைகள்
ஓயாமலேயிருக்கின்றன.

நிலவின் நிறமும்
உடையும்
மாறுபட்ட பின்னும்
தாயகத்தில்
குடியேறப்போவது போன்ற
ஆசையில்
மிதப்பது போலவே
என்னுடலும்...உள்ளமும்
என் காதலுடன்.

வேதனை என்னிலிருந்து
பொங்கியெழுந்ததால்
கிணறு
மிகப் பெரிய கடலானது.

காண முடியாத போது
கண்களிரண்டும்
உள்ளங்காலில்
குடியேறுகின்றன - உன்
பாதங்களைத் தேடி.

*–அ.கா.மு.றிஸ்வின், மூதூர் – 01.*

## நரகாஸ்வரம்

தோட்டாக்கள்
துளைத்த
என்னிதயத்தை
கூர்கணைகள்
கொண்டு
குதறியிருக்கக்
கூடாது நீ!

உன்னிதழ் விரிந்து
வந்து வீழ்ந்த
அந்தவொரு
வார்த்தை
சவரக்கத்தியாய்
மாறி
'சதக்' 'சதக்'
கென
கோடிமுறை
எனைக்
குத்தியதை
நீ யறிய
வாய்ப்பில்லைதான்!

பார்...
பாய்ந்தோடுவதற்குக்
கூட
வலிமையற்று
உறைந்து
கிடக்குமென்
உதிரங்களைப்
பார்!

உன்
ஆக்கினைகள்
தருகின்ற
அசுரத்
தாக்குதலில்
இடுப்பொடிந்து,
அக்கறுந்து
எதற்குமே
வாய்க்காத
போக்கத்தவனாய்
நான்!

இருந்தும் -
ஈட்டிகள் சகிதமே
இன்றுமென் வாசல்
கடக்கிறாய்!

போர் முரசறையும்
- உன்
பார்வைகளின்
பேரிரைச்சலில்
வீரிட்டுக்கொண்டு
வீச்சிடுமுயிர்
நடுநடுங்கிய
வண்ணம்
ஓடியொடுங்குமந்த
கதவிடுக்கில்!

விழிகளை
வீசியெறியும் நீயோ
வெறுமையாய்
கிடக்குமென்
விராந்தை கண்டும்
இறுமாப்புடன்தான்
நகர்கிறாய்!

*–மாக்ஸ் பிரபாஹர், அப்புத்தளை.*

## காதலிக்கிறேன்!

குருடனைச் செவிடனைக்
காதலிக்கிறேன்
முடவனை மூங்கையனைக்
காதலிக்கிறேன்
சொந்த பந்தத்தைக்
காதலிக்கிறேன்
சுற்றியுள்ள அண்டை அயலாரைக்
காதலிக்கிறேன்
ஆசானை ஆன்றோனைக்
காதலிக்கிறேன்
ஆச்சியை அப்புவைக்
காதலிக்கிறேன்
தம்பியைத் தங்கையைக்
காதலிக்கிறேன்
தமையனைத் தமக்கையைக்
காதலிக்கிறேன்.
எந்தையைத் தாயைக்
காதலிக்கிறேன்
ஈசனை இறைவியைக்
காதலிக்கிறேன்
எல்லாவற்றுக்கும் மேலாக
சமதருமைத் தாயகத்தைக்
காதலிக்கிறேன்.

*–கன்னிமுத்து வெல்லபதியான்.*

## பிரிவின் சோதனை

புத்தம் புதிதாய்
எனதுள்ளத்தில் பூத்த
புது ரோஜாவை
புன்னகைக்கும் முன்னே
ஏன் இறைவா
புலம்பெயர்த்தினாய்?

இருண்ட என் மனதில்
பௌர்ணமியாய் வந்துதித்த
பால் நிலவை
கார் மேகமெனும்
புலம்பெயர்வால்
ஏன் இறைவா மூடிவிட்டாய்?

வறண்ட நிலத்தில்
விதைத்த வித்தாயிருந்த
எனதுள்ளத்தை
வசந்தகாலமாய் வந்து
வளம்பெற வைக்க
வந்தவளை
இலையுதிர் காலமெனும்
புலம்பெயர்வால்
ஏன் இறைவா
வறட்சியாக்கினாய்?

இறைவா!
யான் பாவம் செய்திருப்பின்
பிரிவைக்கொண்டு
சோதிக்காமல்
பரிவைக் காட்டு இறைவா!

*–ரி.எல்.எம்.அனீஸ், ஏறாவூர் – 01.*

## பழைய (புதிய) கதை

என் அம்மா
அடிக்கடி ஏசுவதும்
கட்டில் மெத்தையில் - நான்
குப்புறப் படுப்பதுவும்
பழைய கதை.

இரவுகள்
விடிய மறுப்பதுவும்
விழிகளை இருக்கி மூடி
என்னை - நான்
சமாதானம் செய்வதுவும்
தொலைந்த கதை.

வருட முடிவொன்றில்
சுனாமி வந்ததுவும்
என் மாடி வீடு
மடிந்து போனதுவும்
முடிந்துபோன கதை.

தகரக் கொட்டிலுக்குள்
உசிரு துடிப்பதுவும்
வியர்வையின்
ஆக்கிரமிப்பினால்...
வெளியில் படுப்பதுவும்
இன்றைய கதை.

*–செயின் தம்பி ஸியாம், கல்முனை – 06.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. தம்முடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞர்களான மதுமை சிவசுப்பிரமணியன் மற்றும் த. பழமலய் ஆகியவர்கள் எழுதிய இரண்டு கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதைகளில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

### என் தேசத்தில் நான் - சிறிய இடைவேளைக்குப் பின்னர்

செம்புழுதி
தீண்டத் தீண்ட
விளையாடி திரிந்த
என் பிஞ்சுப் பாதங்கள்
செங்குருதி
தீண்டிவிடும் என்பதற்காய்
திரியாமல்
இருக்கின்றன...
புகையிலைத் தோட்டத்தினூடு
பனிமூட்ட காலையின்
பள்ளி சென்ற
பொழுதின் உயிர்ப்புகள்...
சோதனைச் சாவடியினூடு
போர்மூட்ட சாலையில்
ஏனோ கிடைக்கவில்லை...
பனம் பழங்கள்
பொறுக்கிய
தோப்புக்கள் எல்லாம்
வெறுமையாய்...
திரும்பிப் பார்க்கின்றேன்
அவை சோதனைச் சாவடிகளை
அலங்கரித்திருந்தன...
சந்தேக துன்புறுத்தல்களினால்
அடையாளங்களை
மூடிக் கொள்கிறேன்...
அடையாள அட்டை மட்டும்
விடாப்பிடியாய்
பிறந்த இடம் இணுவில்
எனக் காட்டுகிறது...
தினம் விரும்பும்
என் துறைமுக சாலைகள்
இன்று
முட்கம்பி வேலிகளுக்குள்...
மனது மட்டும்
அதை ஊடறுத்துப்
பார்த்து
காயம் பட்டுக் கொள்கின்றது...
என் வீதிகளில்
வரும்
த..யீ..ர்...என்ற
தயிர்க்காரி
வருவதேயில்லை...
வரவே முடியாதோ
என்று நினைக்க மட்டும்
எனக்கு
சக்தியேயில்லை...
பஸ் பயணங்களில்
என்னை மறந்திருக்கும்
நான்
இப்போதெல்லாம்
கந்த சஷ்டி கவசத்துடன்
கிளைமோர் ஒன்றும்
வெடிக்காமல் இருக்க...
காக்க காக்க
கனகவேல் காக்க...
பாதம் வருடும்
அலைகள்
அளைய பிரியமாய்
இருக்கின்றேன்...
மனித வேட்டைகளால்
மனிதர்கள்
போவதில்லை என்ற
உண்மை
உறைக்காமல்...
இராணுவச் சிப்பாயின்
நீ யார்? - என்ற
கேள்விக்கு
'இலங்கையன்'
எனச் சொல்லத்தான்
ஆசைப்படுகின்றேன்...
அவன் என்னை
'இலங்கைத் தமிழனாய்'
பார்க்கின்ற போதும்...

பிறந்த நற் பொன் நாடு
நற்றவ வானிலும்
நனி சிறந்தது - என
யார் சொன்னார்கள்?
திருத்தி எழுதிக் கொள்ளுங்கள்...
நாங்கள் சொந்த நாட்டில்
தான்
நரகத்தில் உழல்கின்றோம்...
வலிக்கும் போதெல்லாம் இன்னும்
தொடரும்...

*-மதுமை சிவசுப்பிரமணியன்.*

### தாயும் கன்றும்

சிமிட்டித் தெருவில்
வந்து கொண்டிருந்த கன்றுக்குட்டி
வீட்டின் முன் நின்றது.
கழுத்தை நீட்டி, நாக்கை நீட்டி
அம்மே என்று அழைத்தது.

எதிரே
அன்னந்தொங்கலோடு வந்த ஒரு பசு
செல்லமாக முட்டியது;
எங்க போயிட்டா ஒங்க அம்மா?
இப்பிடிக் கூவுற!

இரண்டும்
எதிர் எதிர்த் திசையில் போய்விட்டன
என் எண்ணங்கள்
ஒரு திசையில் சென்றன.

இந்த மாதிரியான பின் மாலைகளில்
வீதிக்கு வந்து என்னைத் தேடியவள்
பிடித்த கையை விடாமல் இழுத்து
வந்தவள்.
அப்பா வீடு திரும்பியதும்
புகார் சொல்வாள்.

இருக்கிற மனநிலைக்கு ஏற்ப
இரண்டு வைப்பார்.
அழுதுகொண்டே
சிம்னி விளக்கின் முன் குனிந்து
எழுதுகையில்
சாமிக்கு எடுக்காத தலைமயிர்
பொசுங்கும்.

இந்தக் கன்றுக்குட்டி வளர்ந்து
உழவுக்கு வண்டிக்கு
உதவ வேண்டும் என்று
எதிர்பார்த்தவர்கள்.
கட்டி அடித்துவிட்டு
அப்பா போய்ச் சேர்ந்துவிட்டார்.
காற்றுக்காக வீட்டின் முன் அம்மா
கால்நீட்டி உட்கார்ந்துகிடப்பாள்.


கன்றுக்குட்டி திரும்பி வந்து
மீண்டும் நின்றது; அம்மே!
அன்னந்தொங்கல் பசுவும் அப்படியே
வந்தது.
அவ அங்க நின்னுகிட்டுத் தேடறா
நீ இங்க நின்னுகிட்டுக் கூவுற?
மீண்டும் செல்லமாக முட்டியது;
அய்யோ அம்மாவ!
அய்யோ புள்ளய!

*–த.பழமலய்.*

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : அ. மோகன்
வயது : 30
முகவரி : தபால் பெட்டி இல. 40209 டோகா – கட்டார்
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர் : வெ. ஆனந்தரூபன்
வயது : 25
முகவரி : பிரதான வீதி, கோவில் குடியிருப்பு, பனிச்சங்கேணி வாகரை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி கேட்டல்.



பெயர் : பி. மேரி சலூஜா
வயது : -
முகவரி : இல.46/47, சென் அன்ரனிஸ் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: வழமையானவை.




பெயர் : எஸ். வசந்
வயது : 21
முகவரி : பிளட் 10, சைக்னெட் ஹவுஸ், 83–89, பெல்சைஸ் ரோட், லண்டன் NW6, 4AR, லண்டன்
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், இயற்கை அழகை ரசித்தல், ஓவியம் வரைதல்.




# நகைகள் வாங்க போறீங்களா...!

**நகைகள்** வாங்கும்போதும், வாங்கிய பின்னும் பின்பற்றப்பட வேண்டிய சில நடைமுறைகள் இதோ :

* நகை வாங்கச் செல்லும் முன், எந்த நகை வாங்கப் போகிறோம் என்பதை உறுதி செய்த பின் கடைப் படி ஏறுங்கள்.



* உங்கள் பட்ஜெட் என்ன என்பதில் தெளிவாய் இருக்க வேண்டும்.

* ஹால் மார்க் முத்திரை போட்ட நகைகளையே வாங்க வேண்டும்.

* பழைய நகைகளில் கல் வைத்த நகையைப் போட்டு விட்டு புதிதாக வாங்க வேண்டும் என்று நினைத்தால், கற்களை எடுத்த பின் எடை போட்டு, அதற்கேற்ற விலையில் புதிய நகைகளை வாங்குங்கள்.

* செய்கூலி எவ்வளவு சதவீதம், சேதாரம் எவ்வளவு சதவீதம் போடப்படுகிறது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

* சரியான ரசீது கொடுக்கப்படுகிறதா என்பதை ஒன்றுக்கு இரண்டு முறை கணக்குப் பார்த்துக் கொள்ளுங்கள்.

* அணிவதற்காக நகை வாங்கப் போகிறீர்களா? அல்லது முதலீடு செய்யும் முயற்சியா? முதலீடு என்றால், தங்கக் காசாக வாங்கி வைத்துக் கொள்வது தான் சிறந்தது.

* நகை வாங்கக் கிளம்பும் முன், தங்கத்தின், வெள்ளியின் அன்றைய தின மதிப்பீடு என்ன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

* தரமான கடைகளில் நகை வாங்குங்கள். தெருவுக்குத் தெரு முளைத்திருக்கும் கடைகளில் வாங்கினால் தரம் குறையும். பிறகு வருந்த வேண்டாம்.

* கே.டி.எம்., நகைகள் என்பன தனியாகத் தயாரிக்கப்படுபவை. நீங்கள் வாங்கும் நகை எந்த வகையைச் சார்ந்தது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ரசீதில் இது குறித்த தகவல் எழுதப்பட வேண்டும்.

* நகைகளை வாங்கியவுடன், அதைப் புகைப்படம் எடுத்து வைத்துவிடுங்கள்.

* நகைகளை இன்சூரன்ஸ் செய்வது மிக மிக முக்கியம். இதெல்லாம் சற்று சிரமமான வேலைகள்தான். ஆனாலும் விடாதீர்கள். செய்து வைத்து விடுங்கள். ஆபத்துக்கு உதவும்.

* வாங்கிய நகைகளைச் சரியாகப் பராமரிக்க வேண்டும். நகைகளை அணிவதற்கு முன்னதாகவே, பவுண்டேஷனோ, பவுடரோ போட்டுக் கொள்ளுங்கள். நகைகளை அணிந்த பின் இவற்றைப் பூசிக் கொண்டால், நகைகள் பொலிவிழந்து விடும்.

* நகைகளைக் கழற்றி பத்திரப்படுத்தும்போது வெல்வெட் துணியில் போட்டு வைப்பது நல்லது. வெறும் டப்பாக்களில் போட்டு வைத்தால் கீறல்கள் விழுந்து பொலிவு கெடும்.

* ஒவ்வொரு நகையையும் தனித்தனி டப்பாக்களில் போட்டு



வைத்தால் புத்தம் புதிதாக ஜொலிக்கும்.

* நிரந்தரமாக அணிந்து கொள்ளும் நகைகளை வாரந்தோறும் சுத்தம் செய்ய வேண்டும். மைல்டு ஷாம்புவில், மென்மையான பிரஷ்ஷைத் தோய்த்து பத்திரமாக நகைகளைத் தேய்த்துக் கழுவினால் நகைகள் பளிச் சென்றிருக்கும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–

## பூசணிக்காய் கேக்

***தேவையான பொருட்கள் :-***

சீனிப் பவுடர் - 500 கிராம்
வெண்ணெய் - 400 கிராம்
நெய் - 100 கிராம்
தேங்காய் - 1
வெனிலா எசன்ஸ் - 2 தேக்கரண்டி
கஸ்டர்ட் பவுடர் - 2 தேக்கரண்டி
பூசணி - 500 கிராம்


***செய்முறை :-***

பூசணிக்காயை தோல் நீக்கி அரைத்துக் கொள்ள வேண்டும். வெண்ணெயை க்ரீம் போல அடித்துக் கொண்டு, அதில் சீனியைச் சேர்த்துக் கலக்கி அடிக்கவும். தேங்காயைப் பால் பிழிந்து அதில் வாசனைப் பவுடர், எசன்ஸ், கஸ்டர்ட் பவுடர், கோல்டன் சிரப் முதலியவற்றைக் கலந்து, வெண் ணெய்க் கலவையுடன் சேர்த்து அடித் துக் கொள்ளவேண்டும். பின் பூசணி யைச் சேர்த்து நன்றாகப் பிசைந்து கொள்ளவும். கலவை கெட்டியா கிவிட்டால் மைதா மாவைச் சேர்த்துக் கொள் ளலாம். கலவையைத் தயாரித் துக் கொண்டு தகர ட்ரேயில் வெண் ணெய் தடவி, ஊற்றி அடுப்பில் ஏற்ற வேண்டும். 1/2 மணி நேரத்தில் வெந்து விடும். சுவையான பூசணிக்கேக் தயார்.

# கூந்தலுக்குக் காய்கறி வைத்தியம்

♥ உங்களுக்கென்று தனியாக சீப்பு வைத்துக் கொள்ளவும். வாரத்தில் மூன்று தடவை அதைக் கழுவ வேண்டும். உலோகத்தால் ஆன சீப்புகளைத் தவிர்க்கவும்.

♥ தேங்காயைத் தண்ணீர் சேர்க்காமல் அரைத்துப் பால்



பிழியவும். இதை இரும்புக் சட்டியில் காய்ச்சினால் எண்ணெய் தனியாக வரும். அந்த எண்ணெயைத் தலையில் தடவி ஊறியபின் சீயக்காய் அல்லது கடலை மாவு தேய்ந்து அலசவும்.

♥ நல்ல மரச் சீப்பினால் தலையை அழுந்த வாரினால் மயிர்க் கால்களில் இரத்த ஓட்டம் அதிகமாவதோடு முடி வளர்வதும் தூண்டப்படுகிறது.

♥ நீங்கள் உபயோகிக்கும் ஷாம்பூவுடன் சில துளி கிளிசரின் சேர்த்துக் கொண்டால் முடி அறுந்து போகாது.

♥ இரண்டு ஸ்பூன் வினிகருடன் கடலை மாவைக் குழைத்துக் கால் மணி நேரம் ஊற வைக்கவும். இதை நன்றாக மயிர்க்கால்களில் படும்படித் தடவி அரை மணி நேரம் ஊறிய பிறகு அலசி விடவும். பொடுகு போயே போச்!

♥ அழுகின தேங்காயைத் தூக்கி எறியாமல், சிறிது சுடுநீருடன் அரைத்துத் தலையில் தடவி ஊறவைக்கவும். பிறகு நன்றாக 'மஸாஜ்' செய்யவும், மயிர்க்கால்கள் வலுப்பெற வழி இது!

♥ விட்டமின் பி காம்ப்ளெக்ஸ் குறைபாட்டினால் விரைவில் தலைமுடி வெளுக்க ஆரம்பிக்கும். ஊட்டமிக்க உணவு இந்தக் குறைபாட்டை நீக்கும்.

♥ நெல்லிக்காயையும், ஊறவைத்த வெந்தயத்தையும் நன்றாக அரைத்து அந்த விழுதைத் தலையில் தடவி ஊறவைப்பது குளிர்ச்சியைத் தரும் கண் எரிச்சலைப் போக்கும்.

♥ கூந்தல் வறண்டு இருந்தால், ஒரு கிண்ணத்தில் மருதாணிப் பொடி, தேங்காய்ப் பால், தேங்காய் எண்ணெயும் சேர்த்துக் குழைத்துத் தலையில் மஸாஜ் செய்யவும். அரை மணி நேரம் கழித்துத் தலைக்குக் குளிக்கலாம்.

♥ தலைமுடிக்குப் போஷாக்குத் தரும் ஷாம்பூ பவுடரை வீட்டிலேயே தயாரிக்கலாம். ஒலு பங்கு சீயக்காய், வெந்தயம் கால் பங்கு, பச்சைப் பயறு அரைப்பங்கு, புங்கங்காய் கைப்பிடி எடுத்து மிஷினில் அரைத்து வைத்துக் கொள்ளவும், இது எந்தவிதத் தீங்கும் ஏற்படுத்தாது. முடியும் வளரும்.



♥ அங்கங்கே தலையில் சிறு பொட்டல் இருந்தால் சிறிய வெங்காயமும், மிளகுப் பொடியும் சேர்த்துத் தடவி ஊற வைத்தால் மீண்டும் முடி வளரும்.

♥ முடி பளபளக்க காய்கறி வைத்தியம் இதோ : வெங்காயத்தையும் முட்டைக் கோஸையும் பொடிப் பொடியாக நறுக்கி (ஒரு கப்) அதை இரவு முழுவதும் ஒரு செப்புப் பாத்திரத்தில் போட்டு வைக்கவும். காலையில் சிறிது யூடிகோலன் சேர்த்தால் வெங்காய வாசனை போய்விடும். இந்தச் சாற்றுடன் தேங்காய் எண்ணெய் கலந்து மயிர்க்கால்களில் படும்படி நன்றாக மஸாஜ் செய்யவும். சீயக்காய் பொடி போட்டுக் குளித்தால் முடி பளபளப்பாக மென்மையாக இருக்கும்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

35

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
கையொப்பம் : ..............................

**உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை**

**ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.**

**மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).**

**ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.**

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -35**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:**
**22.08.2006**

**பரிசுப் போட்டி இல - 33**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**பி. சுதேஸ், 99/4 திக்கிரியாவ வீதி,**
**களுதாவளை, மாத்தளை.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




"**முன்னூறு** பவுண் ஸ்டேர்லிங், இருநூறு டாலர், ஐந்து கரட் வைரங்கள் இரண்டு."

"பார்த்து விடலாம். இரு" என்றவர், அந்தக் குழாயைத் திறந்து பார்த்தார். அவரை மற்றவர்கள் சூழ்ந்து கொண்டதால் எங்களுக்கு எதுவும் தெரியவில்லை. "சொன்னபடிதான் இருக்கிறது" எங்கள் காதில் விழுந்தது.


"கால்விடியா ரோமியோ."

கொடுப்பவன் அல்லன். நானென்ன ஜெயில் அதிகாரியா அப்படிச் செய்ய?"

"வார்டர்! இந்தக் கைதியின் கையில் விலங்குகளை மாட்டு. இப்படிப்பட்ட மரியாதை கெட்ட வேலைகளுக்குத் தகுந்த பரிசு உண்டு தம்பி!"

அப்போதுதான் அந்தக் கொடிய தண்டனை கிடைத்தது அவனுக்கு.

இரண்டு தலைமை அதிகாரிகளும், கப்பல் காப்டனும், மேஜரும்



"நீ இத்தாலியனா?"

"ஆமாம் சார்."

"குழாய் வைத்துக் கொண்டிருந்ததற்காக உனக்குத் தண்டனை கொடுக்கப் போவதில்லை. ஆனால் கத்தி வைத்துக் கொண்டதற்குத் தண்டனை உண்டு."

"மன்னிக்கணும் சார். அந்தக் கத்தி என்னுடையதில்லை." காவல்காரன், "டேய் கழுதை! சரடு விடாதே. உன் பூட்ஸுக்குள்தான் இதைக் கண்டெடுத்தேன்" என்றான்.

"மறுபடியும் சொல்கிறேன், இது என்னதில்லை."

"அதாவது நான் பொய் சொல்கிறேன் என்கிறாய்?"

"இல்லை. நீங்கள் ஏதோ தப்பாய்ச் சொல்கிறீர்கள். அவ்வளவுதான்."

"பின்னே யாருடைய கத்தி இது?" என்று மேஜர் கேட்டார். "இது உன்னுடையதில்லை என்றால் வேறு யாரோ ஒருவருடையதாகத்தானே இருக்க வேண்டும்?"

"என்னுடையதில்லை சார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்."

"தண்டனை அறையில் உன்னைப் போட வேண்டியிருக்கும். பாய்லர்களுக்கு நேர் மேலேயுள்ள அறை அது. உன்னை வறுத்தெடுத்துவிடும் அந்த அறை. அங்கே போக வேண்டாமென்றால் இந்தக் கத்தி யாருடையது என்பதைச் சொல்லிவிடு."

"எனக்குத் தெரியாது."

"என்னை முட்டாளாக்கப் பார்க்கிறாயா? உன் பூட்ஸிலே ஒரு கத்தியைக் கண்டெடுத்திருக்கிறார்கள். அது யாருடையதென்று உனக்குத் தெரியாது? அப்படித்தானே? என்னை மடையனென்றா நினைக்கிறாய்? ஒன்று, இது உன்னுடையது, அல்லது இது யாருடையதென்று உனக்குத் தெரியும், சொல்லு வாயைத் திறந்து."

"இது என்னுடையதில்லை. யாருடையதென்று நான் சொல்வதற்கில்லை. நான் காட்டிக்

தங்களுக்குள் தனியே பேசிக் கொண்டார்கள். காப்டன் தன் உதவியாளரொருவருக்கு ஏதோ கட்டளையிட்டார். அவர் மேல் தளத்துக்குச் சென்றார். சில நிமிடங்களில் ஒரு மாலுமி வந்தான். ராட்சசன் போல உடம்பு. ஒரு கையில் மர பக்கெட் ஒன்று வைத்திருந்தான். அது நிறையக் கடல் நீர். உப்புத் தண்ணீர். இன்னொரு கையில் ஒரு கயிறு - மணிக்கட்டு பருமனுக்கு இருந்தது.

கைதியை ஏணியோடு சாத்தி முழங்கால்களைக் கட்டினார்கள். அந்த ராட்சச மாலுமி கயிற்றை உப்புத் தண்ணீரில் தோய்த்துக் கொண்டான். தன் பலம் கொண்ட மட்டும் வீசி அடிக்கத் தொடங்கினான் கைதியின் முதுகிலும் விலாவிலும்.

இரத்தம் பீரிட்டடித்தது. ஆனால்

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

அந்தக் கைதியிடமிருந்து கடுகத்தனை சத்தமும் எழவில்லை.

அந்த மயான அமைதியைக் கிழித்துக்கொண்டு எங்கள் கூண்டிலிருந்து கூச்சல்

எழுந்தது - "டேய் சோமாறிங்களா!"

அவ்வளவுதான். நாங்கள் அத்தனை பேரும் கர்ஜிப்பதற்கு அது ஆரம்பம் ஏற்படுத்தித் தந்துவிட்டது. "கொலைகாரப் பாவிகள்! மிருகங்கள்! அப்பன் பெயர் தெரியாத கழுதைகள்!" என்று ஒவ்வொருவரும் கூச்சலிட்டார்கள்.

நாங்கள் வாயை மூடாவிட்டால் சுடுவோம் என்று அதிகாரிகள் மிரட்ட மிரட்ட, எங்கள் கூச்சல் அதிகமாகத்தான் ஆயிற்று.

காப்டன் ஒரு சத்தம் போட்டார், "அடியுங்கள் நீராவியை அவர்கள் மீது!"

மறுவிநாடி மாலுமிகள் பலவகைச் சக்கரங்களைத் திருப்பினார்கள். பீய்ச்சியடித்தது கொதிக்கும் நீராவி!

ஐயோ! என்ன அசுரத் தாக்குதல்! கண்ணிமைக்குமுன் நாங்கள் அத்தனை பேரும் குப்புற விழுந்தோம். தரையில் நீராவிப் பீய்ச்சல் எங்கள் மார்பு உயரத்துக்குப் பீய்ச்சியது. ஒரே அல்லோலகல்லோலம். நீராவி அடித்ததால் சதை அழன்று போனவர்களுக்கு, வாய் விட்டுக் கத்தக்கூடத் துணிச்சலில்லை. இவ்வளவு அமளியும் நடந்தது ஒரே ஒரு நிமிடத்துக்குள்தான். ஆனால் ஒவ்வொருவரும் நடுநடுங்கிப் போய் விட்டார்கள்.

"டேய் எருமை மாட்டுப் பசங்களா! அடம் பிடித்தீர்களே, இப்போது புரிந்ததா? துளி சலசலப்புக் காட்டினாலும் சரி, நீராவியைத் திருப்பி விட்டுவிடுவேன். தெரிந்து கொள்ளுங்கள்; எழுந்து நில்லுங்கள் இப்போது!" என்றார் காப்டன்.

மூன்று பேருக்குத்தான் ரொம்பப் பயங்கரமான தீப்புண் ஏற்பட்டிருந்தது. மருத்துவமனைக்கு அவர்களை எடுத்துச் சென்றார்கள். உப்புக் கயிற்றால் சாட்டையடி வாங்கிக் கொண்ட நபர் எங்களிடத்துக்குத் திரும்பி வந்தான். (ஆறு வருடங்களுக்குப் பிறகு, என்னுடன் கூடத் தப்பியோட முயன்றபோது அவன் இறந்து போனான்)

அந்தப் பதினெட்டு நாள் பிரயாணத்தின்போது எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது என்பதையும், கடல் கடந்த சிறையின் தன்மை என்னவென்பதையும் தெரிந்து கொள்ள முயன்றோம். ஜூலட் தனக்குத் தெரிந்ததையெல்லாம் எங்களுக்குச் சொல்லியிருந்தான். அப்படியும்கூட அங்கே போய்ப் பார்த்தபோது நாங்கள் எதிர்பார்த்திருந்தபடி இருக்கவில்லை.

செயிண்ட் லாரண்ட் என்பது ஒரு கிராமம் என்பதும், கடலிலிருந்து 75 மைல் தூரத்தில் மரோனி என்ற ஆற்றங்கரையில் இருக்கிறது என்பதும் எங்களுக்குத் தெரியும். "அந்தக் கிராமத்தில்தான் இருக்கிறது சிறை. அக்கரைச் சிறைகள் மொத்தத்துக்கும் அதுதான் நடுநாயகம். நம்மை ரகவாரியாய்ப் பிரித்து ஒழுங்குபடுத்துவது அங்கேதான். தடுப்புக் காவல் கைதிகளை நேரே ஸெயிண்ட் ஜீன் என்கிற சிறைக்கு அனுப்பிவிடுவார்கள். அது தொண்ணூறு மைல் தள்ளி இருக்கிறது. மற்றக் கைதிகளை மூன்று ரகமாய்ப் பிரிப்பார்கள். முதலில், 'ரொம்ப அபாயமானவர்கள்' என்று குறித்து வைத்திருக்கிற பேர்வழிகள். அவர்களை, வந்திறங்கியதுமே தண்டனைச் சிறைகளில் உள்ள தனிக் கொட்டடிக்கு இழுத்துப் போய் அடைத்துவிடுவார்கள். ஸலூட் தீவுகள் என்கிற இடத்துக்குக் கொண்டு போகிற வரையில் அங்கேதான் அவர்கள் இருக்கவேண்டும். ஸெயிண்ட் லாரண்ட்டிலிருந்து முன்னூறு மைலுக்கு மேல் இருக்கிறது அந்தத் தீவுகள். மொத்தம் மூன்று தீவுகளைக் கொண்டது அந்த இடம். ராயல் என்பதுதான் மிகப் பெரியது. செயிண்ட் ஜோசப் என்ற தீவில், கைதிகளைத் தன்னந்தனியாய் அடைப்பதற்கான சிறைகள் இருக்கின்றன. டெவில் தீவு மிகச் சின்னது. இங்கே ரொம்ப ரொம்பக் குறைவான கைதிகள்தான் அனுப்பப்படுவார்கள். அதுவும் அரசியல் கைதிகள்தான்.

"அடுத்து, இரண்டாவது ரகக் கைதிகள். 'அபாயமானவர்கள்.' இவர்களை ஸெயிண்ட் லாரண்ட் தீவில் வைப்பார்கள். இவர்கள் தோட்டத்திலும், வயலிலும் வேலை செய்ய வேண்டும். ரொம்பக் கஷ்டமான முகாம்களில் ஆட்கள் தேவைப்படும் போது இவர்களை அனுப்பி வைப்பார்கள்.

"கடைசியில் சாதாரணக் கைதிகள். ஆபீஸ்களிலும், சமையலறைகளிலும் இவர்களுக்கு வேலை தருவார்கள். அல்லது தெருக்களையோ, முகாம்களையோ கூட்டவேண்டும். தச்சுப் பட்டறை, பெயிண்ட்டிங் சாலை, கருமான் பட்டறை, மின்சாரக் கூடம், பாய்முடைகிற இடம், தையல் தொழிற்சாலை, லாண்டரி இப்படிப் பல இடங்களில் வேலை செய்ய அனுப்புவார்கள்.

"ஆக, போய் இறங்கினவுடனே நம் தலைவிதி தெரிந்துவிடும். உன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, தனியே சிறைக்கு அனுப்பினால் ஆயுளுக்கும் அடைத்துப் போட்டாயிற்று என்று அர்த்தம்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# அமெரிக்காவின் அடுத்த இலக்கு
# ஈரான்

**மத்திய** கிழக்கில் ஈரான் தேசமானது தனது சொந்த முயற்சியினாலும் வெளிப்படுத்தாத உதவிகள் மூலமும் ஓர் அணு ஆயுத பலமுள்ள நாடாக உருவாக்கிக்கொண்டு வருகின்றது. இந்த விடயமே தற்போது அமெரிக்காவின் வயிற்றில் புளியைக் கரைக்கத் தொடங்கியுள்ளது.




ஈரான் அணுவாயுத வல்லமையினை அமைத்துக் கொள்ளும் பாதையில் மிகப்பிரமாண்டமான ஒரு தடையினை ஏற்படுத்துவதற்கான ஓர் சதித்திட்டத்தினை அமெரிக்காவும் அதன் சகபாடிகளான மேற்குலகமும் ஆரம்பித்துள்ளன. ஈரானின் அணு ஆயுத அபிலாஷைகளை நிர்மூலமாக்குவது, அது இயலாத பட்சத்தில் ஓர் பாரிய தடங்கலை ஏற்படுத்துவதன் மூலம் அணு தொழில்நுட்பம் குறித்தான நடவடிக்கைகளில் ஓர் தேக்கநிலையை ஏற்படுத்துவது இதுவே மேற்குலகின் குறிக்கோளாகும்.

இதற்காக அமெரிக்கா தனது உளவு நிறுவனமான C.I.Aயை உசிப்பிவிட்டு உளவு பார்க்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இதில் முக்கியமாக ஈரான் இராணுவப் புலனாய்வை இனங்காணுவதால் ஈரானின் அணு உலைகள், யுரேனியம் செறிவூட்டல் நிலையங்கள் தொடர்பான விபரங்களைச் சேகரித்தல் மற்றும் ஈரானின் இராணுவத் தளங்கள், விநியோகப் பாதைகளைக் கண்டறிதல் என்பனவே C.I.A.யின் முதற்கட்ட நடவடிக்கைகளாகும்.


இதன் முதற்கட்டமாக C.I.A.யினால் ஈரானின் இஸ்பஹான் எனும் இடத்தில் உள்ள அணுசக்தி மைய நிலையம் மற்றும் நதான்ஸி பிரதேசத்தில் உள்ள யுரேனியம் செறிவாக்கல் நிலையம் என்பன அதனால் இனம் காணப்பட்டுள்ளன. மேலும் இணங்காணப்படாத, ஆனால் அறிவிக்கப்படாத ஏனைய அணு உலைகளை நாசமாக்கி விட்டால் ஈரானைத் தலை நிமிர முடியாமல் செய்துவிடலாம் என்பது தான் அமெரிக்காவின் திட்டம்.

இத்திட்டத்திற்காக ஒன்றில் மத்திய தரைக்கடலில் இருந்து தமது கடற்படை மூலம் அணுவாயுத இலக்குகளை அழித்தல் அல்லது நேரடியாக விமானத் தாக்குதலை மேற்கொள்ளல் அல்லது ஆழ ஊடுருவி தாக்கும் படையினரை அனுப்பி நிர்மூலமாக்குவது என பல திட்டங்களை அமெரிக்கா பரிசீலிக்கின்றது.


ஈரான் பிரதமர்

மேற்கண்ட திட்டங்களை விடவும் மத்திய கிழக்கில் தனது செல்லப்பிள்ளையான இஸ்ரேலைப் பயன்படுத்தி, இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடாத்தியது போன்று அணு சக்தி மையங்களை அழிக்கும் நடவடிக்கைகளையும் அமெரிக்கா பரிசீலித்து வருகின்றது. ஈரான் தேசம் அணு ஆயுத வல்லமை உள்ள நாடாக மாறி விடக்கூடாது என்பதற்காக அமெரிக்காவும் இஸ்ரேலும் ஒருபுறம் தலைக்கீழாக நின்று சதித்திட்டம் தீட்டும் அதேவேளை, சர்வதேச ரீதியில் ராஜதந்திர நகர்வுகளையும் மேற்கொள்கின்றன. இதன் ஓர் அங்கமாக எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் ஈரானுக்கு எதிரான சக்திகளை அணிதிரட்டும் முயற்சிகளிலும் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. மற்றொருபுறம் ஓர் இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்ளும்போது புவியியல் களநிலை மிக முக்கியமான விடயமாகும். உதாரணமாக ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா விமானத்தாக்குதல் நடாத்தியபோது அதனை சூழ உள்ள நாடுகள் அமெரிக்காவிற்கு சாதகமாக இருந்திருக்கவில்லை. எனவேதான் நேரடியாக விமானக்குண்டு வீச்சினை அதுவும் பங்கர் பஸ்டர் எனும் நாசகார குண்டுகளை வீசியது. மேற்படி குண்டுகள் மிகப்பலமான பங்கர்கள், காவலரண்களையும் துவம்சம் செய்யக்கூடியன. அதாவது குட்டி அணுகுண்டு என்றே கூறலாம். ஆனபடியினால்தான் பிரமாண்டமான டோராபோரா மலைத்தொடர் நொருங்கியதை நேரடியாகவே தொலைக்காட்சிகள் ஊடாக நாம் பார்த்தோம்.

ஆனால் ஈரான் மீதான தாக்குதலுக்கு அவ்வாறான ஓர் அவசியம் அமெரிக்காவிற்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் ஏற்கனவே ஈரானைச் சூழ உள்ள அரபு




உலகம் அமெரிக்காவிற்கு செங்கம்பளம் விரித்து அதன் உத்தரவிற்காக சிரம்தாழ்த்தி காத்திருக்கின்றன. சவூதி உட்பட ஐக்கிய அரபு எரிபொருள் நாடுகள் எவ்வகையிலும் அமெரிக்காவைக் கடுகளவிலும் பகைத்துக்கொள்ள ஆயத்தமில்லை. அமெரிக்கா எள் என்றால் எண்ணெயாக நிற்க அவை முண்டியடிக்கின்றன. எல்லாம் குவைத் மீதான ஈராக்கிய ஆக்கிரமிப்பிலிருந்து தொடங்கிய நிலைமை.

அந்தப் பூச்சாண்டியையும் தனது பொருளாதார, இராணுவ மேலாதிக்கத்தினை சுட்டிக்காட்டியே அமெரிக்கா அரபு உலகத்தை பணிய வைத்து விட்டது. இன்றும் அமெரிக்காவின் பல இராணுவ தாங்கிகள் அரபு உலகத்தில் உண்டு. அண்மையில் லெபனான் மீது இஸ்ரேல் மிலேச்சத்தன்மான தாக்குதலை மேற்கொண்டபோது உலகெங்கிலும் இருந்து அதற்கு எதிர்ப்புக் கிளம்பியது. ஏன் அமெரிக்காவில் கூட சமாதானப் பிரியர்கள் ஊர்வலம் நடாத்தினார்கள். ஆனால் தனது சொந்த இரத்த சகோதர நாடு தாக்கப்பட்டபோது அரபு உலகம் கைகட்டி, வாய்ப்பொத்தி மௌனமாக நிற்கின்றது.

எனவே இந்த சூழ்நிலையினை பயன்படுத்தி அதாவது ஏனைய அரபு நாடுகளின் ஊடாக ஈரானுக்குள் ஓர் ஊடுருவி தாக்கும் நடவடிக்கையினை அமெரிக்கா நடாத்தலாம் என்றே தற்போது கருதப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகளின் மூலம் ஏற்கனவே ஈராக், ஆப்கானிஸ்தானைத் தனது கொடும்பிடியில் வைத்துள்ள அமெரிக்கா, ஈரானின் இறைமைக்கு வேட்டுவைக்க முற்படுகின்றது என்பதே யதார்த்தமாகும். அரபுலகில் தொடரும் இஸ்ரேலிய மேற்கத்திய அடாவடித்தனங்கள் எங்கு போய்முடியும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**ஜெ. கே**

சிரிப்பு 19


# “வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்”



அந்தப் பெண்ணுடன், சரஸமாடுகிறார். கன்னத்தில் அறைந்து விட்டுச் சென்று விடுகிறாள் அவள்.

உள்ளே அறையில் இஸ்திரி போடுவதில் சாப்ளினுக்குப் பல சிக்கல்கள். இஸ்திரிப் பெட்டி மிகவும் சூடாக இருக்கிறது. அதைத் தொடமுடியாமல் புதிதாகத் தைக்கப்படும் ஒரு சூட்டின் மீது வைத்து விடுகிறார். விளைவு, அதில் பல இடங்களில் பல பொத்தல்கள்.

தையற்காரன் இதையெல்லாம் பார்த்தபொழுது துடிக்கிறார். சாப்ளினை விரட்டி விடுகிறார். ஒரு சூட்டை எடுத்து பார்க்கும் பொழுது அதற்குள்ளே ஒரு கடிதம். அதை எழுதி, அனுப்ப மறந்தவர் 'கௌவுண்ட் போக்கோ' (Count Boko). ஒரு பணக்கார பெண் அளிக்கும் பிரத்தியேக விருந்திற்குத் தன்னால் வர இயலவில்லை என்பதை அறிவிக்கும் கடிதம் அது. 'கௌவுண்ட் போக்கோ' பெரும் பணக்காரர், நிலப்பிரபு. தையற்காரர் அந்த விருந்திற்குத் தானே



'கௌவுண்டாக' செல்ல முடிவெடுக்கிறார்.

அதே மாளிகைக்குத் தனக்குப் பழக்கமான ஒரு வேலைக்காரியை பார்க்கச் செல்கிறார் சாப்ளின். தான் விரட்டியடித்த உதவியாளரை பார்த்ததும் போலி 'கௌவுண்ட்' திடுக்கிடுகிறார். தன்னை காட்டிக் கொடுக்காமலிருக்க சாப்ளினை தன் அந்தரங்க உதவியாளராக அறிமுகப்படுத்துவதாகச் சொல்கிறார். பணக்காரியை முதலில் சந்திக்கிறார் சாப்ளின். டைலரை தன் உதவியாளர் என்று அறிமுகப்படுத்துகிறார். அவளுடன் நடனமாட இருவருக்குமிடையே பலத்த போட்டி. நடனக் காட்சியில் ஒருவரையொருவர் எட்டி உதைப்பது, வழுக்கி விழுவது, விருந்தின்பொழுது தட்டிலிருக்கும் உணவு சாப்ளின் உதவியால் மாயமாவது, இப்படிப் பல காட்சிகள் படத்தின் வெற்றிக்கு உதவி புரிந்தன. பின்னாளில் பல மொழிப் படங்களில் இந்த போலி மகா பிரபு யுக்தி விரைவாகவே உபயோகப்படுத்தப்பட்டது.

சாப்ளின் 'எஸ்கலேட்டரை' உபயோகப்படுத்தியது போலவே நகைச்சுவையை உண்டாக்க, உபயோகித்தது 'சுழலும் கதவு' (Revolving Door”). இந்தக் கதவை வைத்து அவர் பல படங்களில் சிரிப்பு ஒலிகளை எழுப்பினார். ஒரு கட்டிடத்திற்கு உள்ளே செல்லும் பொழுது அந்தக் கதவோடு சுழன்று கொண்டே இருப்பார். ஒரு வழியாக உள்ளே சென்றவுடன், நேராக நடக்கமாட்டார். சுழன்று கொண்டே செல்வார். படியேறும் பொழுதும் சுழலுவார். இது எல்லோராலும் செய்ய முடியாது. சாப்ளினுக்குக் குள்ளமான உருவம்... கட்டுமஸ்தான உடலமைப்பு .. நடனமாடும் திறமை... எதைச் செய்தாலும் அது சின்ன விஷயமாக இருந்தாலும் அதைச் செவ்வனே செய்ய வேண்டுமென்ற ஆற்றல்... இவைகளெல்லாம் சாப்ளினின் வெற்றிக்குத் துணை புரிந்தன.



அடுத்து வந்த 'பான் ஷாப்' (Pawn shop) மேலும் ஒரு வெற்றிப் படமாக அமைந்தது. இதில் இவர் ஒரு அடகுக் கடை உதவியாளர் மட்டுமே. முதலாளி இல்லாத நேரத்தில் தன்னுடைய அலாரம் கடிகாரத்தை அடகு வைத்துப் பணம் வாங்க வருகிறான் ஒருவன். பணம் கொடுக்கலாமா வேண்டாமா என்று தெரிந்து கொள்ள ஒரு டாக்டரைப் போலவே அந்த கடிகாரத்தைப் பரிசோதனை செய்யத் தொடங்குகிறார் சாப்ளின். அந்தக் காலத்தில் டாக்டர்கள் விரலினால் வயிற்றைத் தட்டிப் பரிசோதனை செய்வது ஒரு வழக்கம். இதற்கு 'பெர்க்ஷன்' (Percussion) என்று பெயர். (இந்த முறை நம்நாட்டில் அடியோடு மறைந்து விட்டதென்பது வேறு கதை). அந்த வகையில் அந்தக் கடிகாரத்தைத் தட்டிப் பார்க்கிறார். திருப்தி இல்லை! எவனோ அங்கு அடகு வைத்திருந்த ஒரு டாக்டரின் “ஸ்டெடஸ்கோப்பை" எடுத்து பரிசோதிக்கிறார் கடிகாரத்தை! திருப்தி ஏற்படவில்லை. வெண்ணெய் சீஸ் டப்பாவைத் திறப்பது போல உளி, சுத்தியுடன் கடிகாரத்தை திறக்கிறார். உள்ளே இருக்கும் பாகங்களை ஒவ்வொன்றாக கழற்றிப் பரிசோதிக்கிறார். ஒரு கடிகார வேலை செய்வதற்கு முக்கியமான 'மெயின் ஸ்பிரிங்' (Main Spring) வெளியே வருகிறது. அதை நீட்டி அளவெடுக்கிறார்.! இதையெல்லாம் பார்த்துக் கொண்டு திகைத்து நின்கிறான் கடிகாரத்தின் சொந்தக்காரன். அவனுக்கு பணத்தின் தேவை அப்படி. இப்படி பல வகையான பரிசோதனைக்குப் பிறகு அந்தக் கடிகாரத்திற்கு பணம் கொடுப்பது சரியல்ல என்ற எண்ணம் சாப்ளினுக்கு! அந்தச் சொந்தக்காரனின் ஹேட்டை சுழற்றி, தான் கடிகாரத்திலிருந்து கழற்றி வைத்திருந்த எல்லாவற்றையும், ஒரு கைத்துடைப்பத்தால் ஹேட்டில் தள்ளி விடுகிறார். மரியாதையோடும், அவனுக்கு உதவ முடியவில்லையே என்ற வருத்தத்தோடும் அந்த ஹேட்டை அவனிடம் கொடுக்கிறார்.

இந்த அலாரம் கடிகாரக் காட்சி இன்றைய அளவிலும் பேசப்படுகிறது உலகெங்கும்!

சில சாதாரணமாக படங்களுக்குப் பிறகு சாப்ளின் மீண்டும் ஒரு கலைக் காவியத்தை உருவாக்கினார். அதுதான் “ஈஸி ஸ்டிரீட்” (Easy Street) இந்தப் படத்தில் சாப்ளின் கதையை அமைக்கும் பொழுதே நகைச்சுவை மட்டும் அல்லாமல் மனித சமுதாயத்தின் பல பிரச்சினைகளை அலசினார். உலகத்தில் ஏழையாக ஏன் ஒருவன் பிறக்கிறான்? அதற்குக் காரணம் யார்? கடவுளா? சமுதாயமா? அல்லது சமுதாயத்தை உருவாக்கிய சுயநலம் பிடித்த மனிதனா? சட்டம், ஒழுக்கம், பொலிஸ் என்ற அமைப்புகளெல்லாம் இருக்கும் சமுதாயத்தில் அராஜகம் ஏன் ஓங்குகிறது? ஏவுகணையைப் பார்த்து மக்கள் ஏன் பயப்படுகிறார்கள்? இப்படிப் பலவகையான பிரச்சினைகள், விஷயங்கள். இந்தப் படம் ஏறத்தாழ 87 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டது என்றாலும் அதில் சாப்ளின் எழுப்பிய பிரச்சினைகள் இன்றும் மனித சமுதாயத்தை வாட்டிக் கொண்டே இருக்கின்றன. முக்கியமாக நம் நாட்டில்! இந்தப் படத்திலிருந்து தான் சாப்ளின் ஒரு சமுதாயவாதி என்ற அவதாரத்தை எடுத்தார். சமுதாயத்தின் அடிமட்டத்தில் நிற்க நிழலின்றிப் பிறந்து,



பட்டினி பசியால் அவதிப்பட்டு, பல இன்னல்களைக் கடந்து தன் திறமையினாலும், ஆற்றலினாலும், கரை காண முடியாத கடின உழைப்பினாலும் அவர் முன்னுக்கு வந்தார்.

(தொடரும்)

---

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள் 23

## இராணி மஹம் அனகா

**தற்போதைய** பழைய டில்லியைத் தலைநகரமாகக் கொண்டு 1556ஆம் ஆண்டு வட இந்திய தேசத்தின் ஆட்சிப் பொறுப்பினை அக்பர் மன்னர் ஏற்றார். டில்லி தேசம் என அழைக்கப்பட்ட வட இந்திய பிராந்தியத்தினைக் கைப்பற்றுவதற்காக ஓர் பெரும் படையெடுப்பினையும், சமரையும் மொகலாயர்கள் நடாத்த வேண்டியிருந்தது. இதற்குத் தலைமையேற்ற தளபதியின் பெயர் பைராம்கான். அக்பர் டில்லியில் ஆட்சியில் அமர்வதற்கு மூல காரணமே பைரம்கான்தான். அவனது போரியல் அறிவும், படைகளை வழிநடத்தும் திறனும், போரிடும் ஆற்றல் காரணமாகவே இந்த வெற்றியினை அடைந்து டில்லி ஆட்சியினைக் கைப்பற்றக்கூடியதாக இருந்தது.

அக்பர் ஆட்சிபீடமேறியபோது, அதாவது டில்லி ஆட்சியினைக் கைப்பற்றிய போது அவரின் தாயாரான ஹமீதா காபூல் அரண்மனையில் வசித்து வந்தார். இதன் காரணமாகத் தனது தாயாரைக் காபூலை விட்டுப்புறப்பட்டு (காபூல் எனப்படுவது தற்போதைய ஆப்கானிஸ்தான் தலைநகர்தான்) டில்லிக்கு வருமாறு அக்பர் மன்னர் வேண்டுகோள் விடுத்தார். இவ்வேண்டுகோள்தான் பின்னாளில் பெரும் குளறுபடிகளுக்கு வழிவகுக்கும் என அப்போது எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

தனது மகனின் வேண்டுகோளை ஏற்ற ராஜமாதா ஹமீதா, காபூலில் இருந்து டில்லிக்குப் புறப்பட்டபோது அவருடன் அக்பர் மன்னரின் அரண்மனை வளர்ப்புத் தாயாராகிய மஹம் அனாகாவும் கூடவே புறப்பட்டாள். மஹம் அனகா புறப்படுவதுடன் மட்டும் விடயம் நின்று விடவில்லை, அவள் தனது மகனான ஆதம் கானையும் அழைத்துக் கொண்டே புறப்பட்டாள்.




மஹம் அனகா அரண்மனையில் அக்பரின் வளர்ப்புத் தாயாக இருந்த போதும் கூட அரண்மனை மற்றும் அரச விடயங்களில் அதிக அளவில் தலையிடும் ஒருத்தியாகவே விளங்கினாள். ஏற்கனவே காபூலில் இவ்விடயம் பலரை எரிச்சலூட்டி இருந்தது. ஆயினும் அக்பரை சிறு வயது முதல் பராமரித்து வந்தவள் என்ற காரணத்தினால் அவளது செல்வாக்கு பற்றி எவரும் வாய்திறப்பதில்லை.

மஹம் அனகா ஒருபுறம் இப்படி என்றால் அவளது மகனான ஆதம்கான் ஒருபடி மேலேயே இருந்தான். சகல விதமான கெட்ட பழக்கங்களும் துர்நடத்தைகளும் அவனது பிறவிக் குணமாகக் காணப்பட்டது. அக்காலத்தில் காபூல் வாசிகள் அவனை மனித உருவில் ஓநாய் என்றே சொல்வார்கள். அந்த அளவிற்கு அடாவடித்தனம் செய்யும் ஒருவனாக ஆதம்கான் விளங்கினான்.

இவ்வாறான ஒரு காலகட்டத்தில் எதிர்பாராத ஒரு துரதிஷ்டமான ஒரு சம்பவம் இடம் பெற்றது. அக்பர் ஆட்சி அமைப்பதற்காக தலைமையேற்று போரிட்டு வெற்றி கண்ட பைராம்கான் ஷியா எனும் இனப்பிரிவினைச் சேர்ந்தவன். ஆனால் கைப்பற்றப்பட்ட பகுதியில் அதிகமான ஆதிக்கம் உடையவர்களாக இருந்தோர் சன்னி பிரிவினர். அவர்கள் பைராம் கான் மீது மிகவும் வன்மம் கொண்டிருந்தனர். சந்தர்ப்பத்தினை எதிர்பார்த்து காத்திருந்த சன்னி பிரிவினர், அவன் குஜராத் பிரதேசத்திற்குச் சென்றிருந்த போது அவனைக் கொலை செய்தனர். 1561ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் முபாரக் கான் எனும் இளைஞனே பைரான்கானைக் கத்தியால் குத்தி கொலை செய்ததாகத் தெரியவருகின்றது.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில் டில்லியில் படைகளின் தளபதியாக இருந்த பைராம்கான் தன்னந் தனியாக எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் குஜராத் செல்லுகின்றான் என்ற விடயத்தினை உளவுத்தகவலாக வழங்கியதே மஹம் அனகாதான். அதிகார மோகம், பதவி ஆசை, பகட்டு வாழ்க்கையினை விரும்பிய அனகா தனது மகன் ஆதம்கானை அந்தப் பதவியில் அமர்த்துவதற்காகவே இந்த துரோகத்தனத்தினை மேற்கொண்டாள்.

நாட்கள் சென்றன. பைராம்கானின் தளபதி பதவி வெற்றிடமாகவே இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தினை நன்கு பயன்படுத்திக்கொண்ட மஹம் அனகா, தனது மகன் ஆதம்கானை தளபதியாக நியமிக்கும்படி அக்பரிடம் வேண்டுகோள் விடுத்தாள். சிறுவயது முதலே தன்னைத் தூக்கி வளர்த்தவள் என்பதனால் வேறு எதைப்பற்றியும் யோசிக்காமல், அக்பர் மன்னன் டில்லியின் பிரதான தளபதியாக ஆதம்கானை நியமித்தார். அதன் பின்னர்தான் மஹம் அனகாவின் அட்டாகாசம் அதிகரித்தது.

பதவி மற்றும் பொருளாசைப் பிடித்த பேயாக மஹம் அனகா ஒருபுறம, மனித வடிவில் ஓநாயாக அவளது மகன் ஆதம்கான் மறுபுறம். இவை எவை பற்றிய தகவலும் தெரியவராமல் அக்பர் மன்னர் தனது ஆட்சியை நடாத்தி வந்தார்.



இந்த சமயத்தில் எதிர்பாராத ஒரு திருப்பம் ஏற்பட்டது. அப்போது அக்பர் மன்னரின் ஆட்சிக்குட்பட்டிருந்த கிழக்கிந்திய தேசத்தை (தற்போதைய வங்க தேசம்) பாஸ் பகதூர் மன்னர் ஆண்டு வந்தார்.

ஆரம்பத்தில் அக்பரின் கட்டளைகளுக்கு ஒழுங்காக செவிமடுத்து கிழக்கிந்தியாவினை ஆட்சி செய்த பாஸ் பகதூர், ஒரு கட்டத்தில் தன்னைத்தானே சுல்தானாக அறிவித்து அதாவது தனி அரசாக பிரகடனப்படுத்தி ஆட்சி புரியத் தொடங்கினார்.

இதனால் வெருண்டெழுந்த அக்பர் மன்னர் பாஸ் பக்தூர் மீது போர் பிரகடனம் செய்து, வங்க தேசத்திற்குத் தனது படைகளை அனுப்புமாறு உத்தரவிட்டார். அத்துடன் ஆதம்கானைத் தலைமை ஏற்குமாறு கோரினார்.

இப்படிப்பட்ட ஒரு பொன்னான சந்தர்ப்பத்திற்காக காத்திருந்த மஹம் அனகா உச்சிகுளிர்ந்து போனாள். இதையே சாட்டாக வைத்து வங்க தேசத்தினைக் கைப்பற்றினால் தனது மகன் ஆதம்கானை அந்த தேசத்தின் சுல்தானாக முடிசூடி, தான் ராஜபோக வாழ்க்கை நடாத்தலாம் என்பதே அவளின் உள்ளார்ந்த நோக்கமாக இருந்தது. அதை நிறைவேற்றுவதற்காக அக்பர் அனுப்பிய படைக்கு தலைமை ஏற்ற தனது மகனான ஆதம்கானை, நெஞ்சில் வஞ்சத்துடனும் பெரும் பூரிப்புடனும் அனுப்பி வைத்தாள் மஹம் அனகா.

*(தொடர்ச்சி அடுத்த இதழில்)*

*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுக்களில் இலங்கை அரசு ஈடாட்டம்

1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி பாராளுமன்றத்துக்குள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினாலும், அவரது வாய் வீரம் போகவில்லை. இத்தகைய நடவடிக்கைகளால் தன்னை அச்சுறுத்த முடியாதென்று அவர் கூறினார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்துவேனென்றும் அவர் சொன்னார். மறுநாள் பத்தொன்பதாம் திகதி, வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகமொன்றினை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கூட்டமொன்று கொழும்பில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியான இரண்டாவது கலந்துரையாடல் கூட்டம் செப்டெம்பர் மாத முற்பகுதியில் புதுடில்லியில் நடைபெற்றது. இலங்கைத் தரப்புக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் செயலாளர் மனிக்திவல தலைமை தாங்கினார். பிரதமரின் காரியாலயம், பாராளுமன்ற விவகார அமைச்சு, நிதியமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்திய உள்துறை அமைச்சின் அரசியல் யாப்பு விவகார நிபுணர் நாராயணசாமி, இலங்கை விவகாரங்களுக்கான இணைச் செயலாளர் குலதீப் சஹ்தேவ், இந்திய உள்துறை மற்றும் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் கலந்து கொண்டனர். புலிகள் தரப்பில் அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர்.




இக் கலந்துரையாடல்களின்போது நடைமுறைச் சாத்தியமான சில விடயங்கள் குறித்து இணக்கம் காணப்பட்டன. 1987ஆம் ஆண்டின் இறுதிக்குள் இடைக்கால நிர்வாகம் மற்றும் சிங்களத்துக்குச் சமமாக தமிழ் மொழிக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து ஆகியவை வழங்குவது தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு இலங்கைத் தரப்பு இணக்கம் தெரிவித்தது. அதாவது 1987ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் அல்லது ஆகக் குறைந்தது 1988ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னர், இத் திருத்தங்களை மேற்கொள்வதென இலங்கைத் தரப்பினர் உறுதியளித்திருந்தனர்.


திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து நான்காவது நாள் பிரபாகரன் மடையில் சந்தித்த போது

ஆனால் நிதி, சட்டம் மற்றும் ஒழுங்கு விவகாரங்கள், காணி முகாமைத்துவம் ஆகியன தொடர்பான அதிகாரங்களை வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்துக்கு வழங்க இலங்கைத் தரப்புத் தயங்கியது.

இந்திய அரசியல் யாப்பிலுள்ளவாறு, இந்திய மத்திய அரசுக்கு உரிய அதிகாரங்கள் தொடர்பான பட்டியல், மாநில அரசாங்கங்களுக்கு உள்ள அதிகாரங்கள் தொடர்பான பட்டியல் மற்றும் மத்திய - மாநில அரசாங்கங்களுக்கு சமமாக உள்ள அதிகாரங்கள் தொடர்பான பட்டியல் ஆகியவற்றை ஒத்த வகையில் அதிகாரப் பகிர்வை வழங்கலாமென்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. இவை குறித்து இலங்கைத் தரப்பினர் பொதுவாக இணக்கம் தெரிவித்தாலும், இடைக்கால நிர்வாகத்திற்கு வழங்கப்படும் அதிகாரங்களைக் குறைப்பதிலேயே இலங்கைத் தரப்பினர்

(அரசியல் தொடர்)

அக்கறை செலுத்தினர். சிங்கள மொழிக்கு சமத்துவமாக தமிழ் மொழிக்கும் உத்தியோகபூர்வ அந்தஸ்து வழங்குவது தொடர்பான அரசியல் யாப்பு சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதென்பது சிக்கலான விடயமென்றும் அதற்கு நீண்ட காலமெடுக்குமென்றும் இலங்கைத் தரப்பு அபிப்பிராயம் தெரிவித்தது. அத்தோடு இலங்கையின் நிர்வாகம் மற்றும் பாதுகாப்புப் படைகளில் தமிழ் வாலிபர்களை இணைத்துக் கொள்வதிலும் இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை. அகதிகளாக தமிழ் நாட்டிலும், இலங்கைக்குள்ளும் இடம் பெயர்ந்திருக்கும் தமிழ் மக்களை மீளக் குடியமர்த்தி அவர்களுக்கு வசிப்பிட, வாழ்வாதார வசதிகளை விரைவாக ஏற்படுத்திக் கொடுப்பது குறித்தும் இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை. குறிப்பாக திருகோணமலையிலிருந்தும் வவுனியாவிலிருந்தும் அகதிகளாக விரட்டப்பட்ட தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதில் கொஞ்சமேனும் அக்கறை காட்டப்படவில்லை. இதனால் தமிழ் குழுக்கள் மத்தியில் அதிருப்தி காணப்பட்டது.

ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் இலங்கை அரசுக்கெதிரான செயற்பாடுகள் பரவலாகவும் தீவிரமாகவும் காணப்பட்டன. பாராளுமன்றக் கட்டிடத்திற்குள்ளேயே நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதல்கள் ஜெயவர்த்தனாவை மேலும் அதிரவைத்தன. இதனால் தனது அதிகாரம் எந்நேரமும் பறிபோகலாமென்று அவர் பயந்தார். எனவே கணிசமான இந்தியத் துருப்புகளுடன் இந்தியக் கடற்படைக் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்தில் நிறுத்துமாறு அவர் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்தார். இதற்கிணங்க ஹிம்ஹிரி, தராஹிரி, சக்தி, ரன்விர் ஆகிய நான்கு கப்பல்கள் இந்தியத் துருப்புகளுடன் கொழும்புத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்தியக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றமை சிங்கள மக்கள் மத்தியில் மேலும் எதிர்ப்புணர்வுகளை ஏற்படுத்தியிருந்தன என்றே கூற வேண்டும். இருந்தாலும் ஆகஸ்ட், செப்டெம்பர் மாதம் வரை இக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திலேயே தங்கிநின்றன.

புலி இயக்கத் தலைவர் பிரபாகரன், இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் இந்தியத் தரப்பினருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது, தனக்கும் தனது இயக்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களுக்கும் தற்பாதுகாப்புக் காரணங்களுக்காக ஆயுதங்களை வைத்திருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென்று கோரியிருந்தார். இதற்கு இலங்கை அரசாங்கமும் சம்மதம் அளித்திருந்ததால், பிரபாகரன், மாத்தையா, திலீப் யோகி உட்பட பல முக்கியஸ்தர்கள் பிஸ்ரல்களுடனேயே நடமாடினர். அக்கால

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

கட்டத்திலெல்லாம் யாழ்ப்பாணத்திலிருந்த இந்திய அமைதிப்படைத் தலைமையகத்தோடு புலிகள் இயக்கம் நாளாந்தம் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தது. இந்திய அமைதிப்படை அதிகாரிகளின் விடுதிக்கு பிரபாகரன் அடிக்கடி விஜயம் செய்து வந்தார். இருந்தாலும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் புலிகள் இயக்கம் அளித்து வந்த மட்டுப்படுத்தப்பட்ட ஒத்துழைப்பிலிருந்து விலகுவதென்று செப்டெம்பர் மாத மத்தியில் தீர்மானித்தது. இதன் விளைவாகவே இலங்கை அரசுக்கும் இந்தியக் கொள்கைகளுக்கும் எதிராகப் புலிகள் ஆர்ப்பாட்ட இயக்கங்களை ஒழுங்கு செய்தனர்.

இதற்கிடையில் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரான திலீபன் என்ற 23வயது வாலிபரை சாகும்வரையிலான உண்ணாவிரதமொன்றில் புலிகள் இயக்கம் இறக்கியது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ்க் கைதிகளை விடுதலை செய், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்து, ஊர்க்காவல் படைகளினதும் சிங்களவர்களினது ஆதிக்கத்திலுள்ள துணை இராணுவப் படைகளினதும் ஆயுதங்களைக் களை, தமிழ் பிரதேசங்களிலுள்ள இராணுவ முகாம்களையும் பொலிஸ் நிலையங்களையும் மூடு - ஆகியவையே இந்த ஐந்து கோரிக்கைகளுமாகும். நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக, கோயிலின் சுற்றுப்புற வளாகத்திலேயே மேடை அமைத்து, திலீபன் உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தப்பட்டார். ஒரு வாரத்தின் பின்னர் திலீபனின் உடல் நிலை மோசமடையத் தொடங்கியது. பிரபாகரன் இடைக்கிடை உண்ணாவிரத மேடைக்கு வருகை தந்து திலீபனைப் பார்த்துப் போனார். செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி திலீபனின் நிலைமை மிகவும் மோசமடைந்ததால், உண்ணாவிரதத்தைக் கைவிடச் செய்யும் முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டது. இந்தியாவின் பணிப்புரைக்கமைய கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித் யாழ்ப்பாணம் சென்று பிரபாகரனுடன் கலந்துரையாடி உண்ணாவிரதத்தைக் கைவிடச் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டார். நீராகாரம் கூட அருந்தாமல் திலீபன் உண்ணாவிரதமிருந்ததால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தார். தண்ணீர் கேட்டு திலீபன் முனகியதை திலீபனின் தந்தையாரான அமிர்தலிங்கம் கலங்கிய கண்களுடன் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். திலீபனுக்கு தண்ணீர் வழங்க சிலர் முனைந்த போதும், பாதுகாவலுக்கு நின்ற புலி இயக்க உறுப்பினர்களால் அவர்கள் விரட்டப்பட்டனர். மிரட்டப்பட்டனர். பிரபாகரனின் ஆசீர்வாதத்தோடுதான் திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். "நீ முன்னால் போ, நான் பின்னால் வருகிறேன்" என்று பிரபாகரன் திலீபனுக்கு உற்சாகமூட்டியே உண்ணாவிரதத்தில் ஈடுபடத்தினாரென்று அப்போது யாழ்ப்பாணப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

(தொடர்ந்து வடியும்....)




டீக்கடையில் பிரபாகரனை வழமைபோல் காணாத குட்டப்பன் சந்தேகப்பட்டு விசாரிக்கத் தொடங்குகிறான். தேங்காய் கோடவுனுக்குப் போன அவனை யாரோ தூக்கி எறிகிறார்கள். பின்பு அவன் அங்கிருந்து கிளம்புகிறான். கோவிந்தன் குமாரை பழிவாங்க துடிக்கிறான்.

குமார் பிரபாகரன் வீடு தேடிப் போய் விசாரிக்கிறார். அவன் இருக்கவில்லை. அவனுக்கு ஏதோ நடந்துவிட்டது என்று தவிக்கிறார். கோவிந்தன் குமாரைத் தேடி வருகிறான். ஸ்ரீதேவியும் அங்கு வருகிறாள்

**"அவருக்கு** ஏதாவது ஆகியிருக்கும்னு நினைக்கிறீங்களா?"

"அப்படித் தான் தோணுது!" தெரு வாசற்படியைப் பார்த்தபடியே பேசினார்.

"ஒருவேளை தனது கவலையும் பயமும் வீண் என்பது போல் எந்த நேரமும் அவன் வந்து நிற்கலாம்" -என்று நினைத்தார்.

"அந்த மந்திரவாதி இப்போதும் சந்து நாயரின் வீட்டில்தான் இருக்கிறார்" அவர் கூறினார்.

"அப்படியானா விஷயம் எதுவும் விபரீதமாகத்தான் இருக்கணும்.!"

"நாகமாணிக்கத்தை எடுக்க அவர்கள் முயற்சி செய்யலாம்னு தோணுது!"

"இப்ப இருக்கிற சூழ்நிலையில அதுக்கு அவங்களுக்கு வாய்ப்பே கிடையாது!"

"ஒண்ணு செய்யலாம். எதுக்கும் நான் சந்து நாயரோட வீடு வரைக்கும் போயிட்டுவர்றேன். என்னதான் நடந்திருக்குதுன்னு தெரிஞ்சுக்க முடியாதான்னு பார்க்குறேன். - பேசியவள் எழுந்து நடந்து மறைந்தாள்.

அதேநேரம்-

தெருவாசற்படிக்கு வெளியே மறைந்திருந்த கோவிந்தன் வீட்டு முற்றத்துக்குள் காலெடுத்து வைத்தான்.

பிரபாகரனின் உடம்புக்குள் புகுந்து கொண்ட கோவிந்தன், தெருவாசற்படியருகில் நின்றபடியே உட்புறமாகக் கண்களை ஓட்டினான். குமார் மட்டுமே அங்கு இருந்தான்.

இப்போது உள்ளே நுழைந்தால் எவ்விதமான சந்தேகமும் தோன்றாது.

அவன் மெதுவாக உட்புறம் தடவிப் பார்த்துக் கொண்டான். பிரச்சினை எதுவும் ஏற்படாது என்று தோன்றியதால் முன்னேறத் தொடங்கினான்.

துளசி மாடத்தை நெருங்கியபோது குமார் அவனைப் பார்த்தார்.

**எழுதுவது**
**சிவன்**

நிலவிளக்கின் வெளிச்சம் அவனது முகத்தில் நன்றாகவே விழுந்து கொண்டிருந்தது.

"என்ன பிரபாகரா, அங்கேயே நின்னுட்டே...." குமார், அவனிடம் கேட்டார்.

பிரபாகரன் மேலும் சற்று நெருங்கி வந்தான். அவனிடம் ஒருவிதமான பதற்றம் தெரிந்தது. 'தான் கோவிந்தன் தான் என்பதை ஒருவேளை குமார் கண்டு பிடித்து விடுவானோ?' என்று அவன் பயந்தான். இருப்பினும் தயங்காமல் நடந்தான்.

"ஏன் வந்த காலிலயே நிக்குறே? உட்கார். ஆமாம், நீ எங்க போயிருந்தே. உன்னைத் தேடாத இடம் கிடையாது." -குமார் விசாரித்தார்.

"அவசியமா நான் ஒரு சில இடங்களுக்குப் போக வேண்டி இருந்தது!" -திக்கித்திணறிப் பதிலளித்தான்.

"உனக்கு என்னதான் ஆச்சு? உன் குரல் என்னமோ மாதிரி இருக்கு?"

"அதுவா.. வந்து ஜலதோஷம் பிடிச்சிருக்கு! நேத்து கொஞ்சம் அதிகமா குடிச்சுட்டேன்."

"ஓ அதுதானா விஷயம்? நீ அந்தக் குட்டப்பன் கூடவே சுத்திட்டிருக்கிறதா நானும் கேள்விப்பட்டேன்."

"சரி, மேற்கொண்டு என்ன செய்யப் போறதா உத்தேசம்?"

"அதைப் பார்த்துக்கலாம். நீ சாப்பிட்டியா?"



"கொஞ்சமா சாப்பிட்டேன். அதுபோதும்."

"சரி வா வீட்டுக்குப் போகலாம். அம்மா ஏதாவது செஞ்சு வச்சிருப்பாங்க" பிரபாகரனைப் பற்றிய எல்லா விபரங்களையும் அறிந்து வைத்திருந்த கோவிந்தன் கூறினான்.

"இந்த நேரத்துலயா"

"அதுக்கென்ன... வா, போகலாம்."

குமாருக்கு அதில் எந்தவிதமான விபரீதமும் தட்டுப்படவில்லை. ஒரு வகையில் பிரபாரகனின் அம்மா, அவருக்கும் அம்மாவாகவே மாறிவிட்டிருந்தார். எனவே அவனுடன் புறப்படுவதென்று தீர்மானித்தார்.

ஆனால், கோவிந்தனது வருகைக்கான காரணம் வேறொன்று.

எப்படியாவது குமாரை வீட்டிலிருந்து வெளியேறச் செய்து, தோட்டத்தின் ஓரமாக உள்ள ஆழமான கிணற்றில் பிடித்துத் தள்ளிவிடுவது அவன் திட்டம். சுற்றுச்சுவர்கூட சரியில்லாத அந்தக் கிணற்றுக்குள் விழுந்தால் பிறகு உயிருடன் மீள்வது என்பது நடக்காத காரியம்.

வருடக்கணக்கில் உலர்ந்த சருகுகளும் புல்லும் விழுந்து, காட்டுக்கொடிகளால் வலைபோல் சூழப்பட்டிருந்த அந்த கிணற்றுக்குள் பகல் நேரத்தில் கூட இருட்டு தான் நிரம்பி இருக்கும். சூரியவெளிச்சமே படாமலிருக்கும் அதன் ஓரங்களில் ஊர்ந்து செல்லும் உயிரினங்கள் கூட சில இருந்தன.

இப்படிப்பட்ட கிணற்றுக்குள் விழுந்துவிட்டால் பிறகு யாராவது தப்பிக்க முடியுமா என்ன? அதுமட்டுமல்ல, அந்தக் கிணற்றுக்குள் ஓர் உடல் கிடக்கும் விஷயமே யாருக்கும் தெரியாமல் போய்விடும்.

குமார் முன்னால் நடந்துகொண்டிருந்தார்.

சற்றுத் தொலைவு நடந்த பிறகும் பிரபாகரன் எதுவும் பேசவில்லை. எப்போதும் வளவளவென்று பேசிக் கொண்டிருப்பது அவனது இயல்பு.

தனக்குப் பின்னால் ஒருவன் நடந்து வருகிறான் என்பதே குமாருக்குத் தெரியவில்லை.

"என்ன பிரபாகரா, ரொம்ப நேரமா சத்தத்தையே காணோம்?"

"என்னத்தைப் பேச?"

அப்போதும் அவனது குரலில் இருந்த மாற்றத்தை குமார் கவனிக்கத் தவறவில்லை. பேசுவது அவனல்ல என்றே தோன்றியது.

"உன்னோட நிலைமையைப் பார்த்தா, உன்னோட எதிர்ப்புத் தீவிரமெல்லாம், குறைஞ்சுட்ட மாதிரி இருக்கே?."

"உண்மைதான் எப்ப நம்ம கையில் இருந்து அந்த மாணிக்கம் காணாம போச்சோ, அப்ப இருந்துதான் இப்படி."

"நல்ல வேளையா நம்ம கிட்டக் கிடைச்சுது இல்லேன்னா நாம தோத்துப் போயிருப்போம்.!"

"போனதெல்லாம் போகட்டும். அது திரும்பவும் நம்மகையிலேயிருந்து போயிடாதபடி ரொம்பவும் எச்சரிக்கையா இருக்கணும்"

"இனிமேல் நம்மகிட்டயிருந்து அதைக் காணாமல் போக விட்டுடுவனா என்ன?"

"இந்த இல்லத்துக்குள்ள அதை வச்சிருக்கிறது எனக்கென்னமோ பாதுகாப்பானதாத் தோணலை."

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# பொய் சொல்லாதிருப்பது எப்படி?

நினைத்துப் பாருங்கள்... நமது பால்ய காலத்தை!

"பொய் சொல்லக்கூடாது... திருடக்கூடாது... கஷ்டம் வந்தால் மூட்டை தூக்கிக்கூடப் பொழைக்கலாம், தப்பில்லை..." என்று எத்தனை எத்தனை நல்ல விஷயங்களை நமக்குக் கற்றுத் தந்தார்கள்.

ஆனால், இன்று..? அந்த அடிப்படை நல்லொழுக்கமே மெல்ல மெல்ல நீர்த்துப் போய்க் கொண்டிருக்கிறதோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. பாமரர்களைவிடப் படித்தவர்களும் விஷயம் தெரிந்தவர்களுமே அதிகம் பொய் சொல்ல ஆரம்பிக்கிறார்கள்.

வீட்டில் போன் மணி அடித்தால், "அப்பா வீட்டில் இல்லைனு சொல்லு" என்று குழந்தைகளுக்கு நாமே பொய் சொல்லக் கற்றுத் தருகிறோம்.

"ஏன் லேட்...? " என்று மனைவி கேட்டால், நம் கைவசம் ஏதோ ஒரு பொய் எப்போதும் தயாராக இருக்கிறது.

தெரிந்தே ஒரு பொய்யை, மெய் என்று நம்புவதில் எவ்வளவு ஆபத்து இருக்கிறது தெரியுமா?

இதோ, இந்தக் கதையைப் படியுங்கள்.

ஒரு முறை முல்லா, பக்கத்து வீட்டுக்காரரிடம் பானை ஒன்றை இரவல் வாங்கினார். சில நாட்களுக்குப் பிறகு, பக்கத்து வீட்டுக்காரர் தயங்கித் தயங்கி, "என் பானையைத் திருப்பிக் கொடுக்க முடியுமா...?" என்று முல்லாவிடம் கேட்டார்.

"அடடா.. உங்களிடம் இரவல் வாங்கிய பானையை உடனே திருப்பிக் கொடுக்காமல் மறந்து போனதிலும் ஒரு லாபம் இருக்கிறது. ஆமாம்... உங்கள் பானை ஒரு குட்டி போட்டிருக்கிறது, பாருங்கள்!" என்று சொல்லி, தான் இரவலாக வாங்கிய பானையுடன் சேர்த்து ஒரு குட்டிப் பானையையும் கொடுத்தார் முல்லா. பக்கத்து வீட்டுக்காரருக்குத் தாங்கமுடியாத சந்தோஷம்.

அடுத்த வாரமே முல்லா மறுபடியும் பக்கத்து வீட்டுக்காரரிடம் சென்று, "போன தடவைக் கொடுத்ததைவிடப் பெரிய பானை ஒன்று இருந்தால், இரவலாகக் கொடுங்களேன்!" என்று கேட்க.. அவரும் 'ஒன்றுக்கு இரண்டாகப் பானை கிடைக்கும்' என்ற சந்தோஷத்தோடு வீட்டிலிருந்த மிகப் பெரிய பானையைத் தூக்கி முல்லாவிடம் கொடுத்தார்.



ஒரு வாரம் ஆயிற்று. பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவிடம் சென்று, தான் இரவலாகத் தந்த பானையைத் திரும்பக் கொடுக்க முடியுமா என்று கேட்டார்.

"அதை ஏன் கேக்கிறீங்க...? நேத்து உங்க பானை செத்துப் போச்சு!" என்றார் முல்லா.

பக்கத்து வீட்டுக்காரருக்கு மகா எரிச்சலாகி விட்டது.! "என்னை என்ன மடையன்னு நினைச்சியா? பானை எப்படிச் செத்துப் போகும்?" என்றார் கோபமாக.

"பானை குட்டிப்போட முடியும்னு உன்னால் நம்ப முடியுது. பானை செத்துட்டுதுனு சொன்னா நம்ப முடியலையா?" என்று திருப்பிக் கேட்டார் முல்லா. பக்கத்து வீட்டுக்காரர் வந்த சுவடே தெரியாமல் நடையைக் கட்டினார்.

இப்போது புரிகிறதா? பொய் சொல்வது எவ்வளவு தப்போ, அவ்வளவு தப்பு - பொய் என்று தெரிந்தும் அதை நம்புவது!

சரி, நாம் பொய் சொல்லும்படியான அவசியம் ஏற்படாதிருக்க என்ன வழி?

இல்லை, முடியாது போன்ற வார்த்தைகளைச் சொல்லக் கற்றுக்கொண்டால், ஏறக்குறைய ஐம்பது சதவீதப் பொய்களைச் சொல்லவேண்டிய அவசியமே ஏற்படாது.

ஆபீஸில் உடன் வேலை செய்பவர் மோட்டார் சைக்கிளை இரவலாகக் கேட்கிறார். "ஸாரி.. என் மோட்டார் சைக்கிளை நான் யாருக்கும் இரவல் கொடுப்பதில்லை" என்று நேரடியாகச் சொல்லிவிட்டால் எதிராளியின் முகம் வாடிப்போகுமே என்று பயந்து, "இல்லைப்பா.. பெட்ரோல் இல்லை, பிரேக் பிடிக்கலை..." என்று வாய்க்கு வந்த பொய்யைச் சொல்கிறோம், எதிராளியின் முகம் வாடிப் போய்விடக்கூடாது என்பதற்காக. நாம் பொய்யன் என்ற பட்டத்தைச் சுமப்பது எந்த விதத்தில் சரி?

பொய் சொல்லக்கூடாது என்றால்.. மனைவி, தாய், தந்தை, குடும்பத்தினர், நண்பர்கள் இவர்களிடம் எல்லாம் பொய் சொல்லலாமா? அப்படியே பொய் சொன்னாலும், அது எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்..?

ஒரு சின்னக் கதை.. ஒரு கல்லூரியில் நான்கு நண்பர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். தாவரவியல் மாணவர்கள். ஒரே ஒரு பரீட்சையைத் தவிர, மற்ற எல்லாப் பரீட்சைகளையும் எழுதிவிட்டார்கள். மிச்சமிருந்த பரீட்சைக்கு இன்னும் ஒரு வார காலம் இருந்தது.

மேலும், அது சுலபமான பேப்பர்தான் என்பதால், இடைப்பட்ட காலத்தில் இருந்த ஒரு மலைவாச ஸ்தலத்துக்கு பிக்னிக் போனார்கள். ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என ஜாலியாக இருந்தார்கள். அவர்கள் கிளம்பவேண்டிய தருணம் வந்தது.

அப்போது ஒரு மாணவன், "கிளைமேட் அருமையாக இருக்கிறது. இன்றிரவும் இங்கேயே தங்கிவிட்டு, நாளை காலை ஆறு மணிக்கு காரில் கிளம்பினால் போதும்... பரீட்சை நேரத்துக்குக் கல்லூரிக்குப் போய்விடலாம்..." என்றான்.

"அதுவும் சரிதான்" என்று மாணவர்கள் அன்று முழுவதும் அங்கேயே கோலாகலமாகக் கழித்துவிட்டு, இரவு தாமதமாகத் தூங்கினார்கள். நெடு நேரம் கழித்து கண்விழித்தார்கள். 'சரி, புரொபசரிடம் ஏதாவது பொய் சொல்லி, மாற்றுப் பரீட்சைக்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம்' என்ற நம்பிக்கையோடு புறப்பட்டார்கள்.

புரொபசர் முன் நல்லபிள்ளைகள் மாதிரி வந்து நின்றவர்கள், "சார்... நாங்கள் அரிதான சில தாவரங்களைச் சேகரிப்பதற்காக ஒரு மலைவாச ஸ்தலத்துக்குச் சென்றிருந்தோம். அங்கிருந்து நேராகப் பரீட்சை எழுதக் கிளம்பினோம். வழியில் கார் பஞ்சராகிவிட்டது. அதனால் பரீட்சை எழுதமுடியவில்லை. நீங்கள்தான் பெரிய மனசு பண்ணி, எங்களுக்கு மாற்றுப் பரீட்சை வைக்கவேண்டும்" என்று பொய்யை, மெய்மாதிரி உருகிச் சொன்னார்கள்.

பேராசிரியரும் ஒப்புக் கொண்டார். அந்த நான்கு மாணவர்களையும் நான்கு வெவ்வேறு அறைகளில் அமரவைத்துப் பரீட்சை எழுதச் சொன்னார். மாணவர்களுக்கு செம குஷி. உற்சாகத்துடன் பரீட்சை எழுத உட்கார்ந்தார்கள்.

முதல் கேள்வி மிகவும் சுலபமாக இருந்தது. மாணவர்கள் அதற்கு விடை எழுதிவிட்டு, அந்தக் கேள்விக்கான மார்க் என்ன என்று பார்த்தார்கள். ஐந்து. சரி என்று அடுத்த பக்கத்தைத் திரும்பினார்கள். 95 மார்க் என்ற குறிப்புடன் காணப்பட்ட அடுத்த கேள்வி, அவர்களின் முகத்தில் அறைந்தது.

பஞ்சர் என்று பொய் சொன்னார்களே தவிர... இப்படி ஒரு கேள்விவரும், அதற்கு இன்ன டயர்தான் பஞ்சர் ஆனது என்று நாலு பேரும் ஒன்று போல் பதில் சொல்லவேண்டும் என்று பேசி வைத்துக் கொள்ளவில்லையே!

பொய் என்பது தீக்குச்சியைப் போல. அது அந்தக் கணத்துக்கு மட்டுமே பலன் கொடுக்கும். உண்மை என்பது சூரியனைப் போல... அது வாழ்நாள் முழுவதும் மட்டுமல்ல, வாழ்ந்து முடிந்த பிறகும்கூடப் பலன் கொடுக்கும்.

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 182

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | | 15 | 16 | | |
| | 20 | 21 | 22 | | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| 31 | 32 | | | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1.அண்மையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம்.
5.தென்னையின் ஒரு பகுதி.
7.பைத்தியம் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
11.இனம் அல்லது பகுப்பு என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)
15.ஒழுங்கு அல்லது வரிசை என்றும் கூறலாம்.
20.ஒருவகைத் தானியம். (குழம்பியுள்ளது)
25.நாள் என்றும் கூறலாம்.
29.சிறிய விலங்கினமொன்று.
31.மாதங்களில் ஒன்று.
35.பொதி என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. பெரியோர் வாக்கு என்று பொருள்படும்.
2. சிகரம் என்றும் கூறலாம்.
3. சரி செய்தல் அல்லது பூரணப்படுத்தல். (குழம்பியுள்ளது)
5. கணித அளவு முறைகளிலொன்று.
6. புற்று அல்லது சங்கு என்று கூறலாம். (தலைகீழ்)
16. குதிரை, மாடு போன்றவற்றின் குளம்பு. (தலைகீழ்)
20. காட்டு மிருகமொன்று (குழம்பியுள்ளது)
24. மருத்துவக் குணமுள்ள தாவரங்கள். (தலைகீழ்)
25. விஜய்க்கு பின்னடைவை ஏற்படுத்திய படம். (தலைகீழ்)
29. நிறை என்றும் கூறலாம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 180க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

சி. சாந்தி, 200, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு - 01, கல்முனை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

| |
|---|
| 1. சீ. தங்கவடிவேல், 91, பயினியர் வீதி, மட்டக்களப்பு. |
| 2. ஏ. ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1 மகாபுத்கமுவ, முல்லேரியாவ. |
| 3. எம். ஜே. அஜ்ஹத், 125, சங்கம, சீனக்குடா. |
| 4. க. நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில. |
| 5. ர. சந்திரா, 199/ 57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன். |
| 6. ஏ. வாசவி, இல. 620, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| 7. அனிஸா. அல் ஆஸாத், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03 |
| 8. யோ. ஜெகதீஸ்வரி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| 9. ஜே. ஜெயா, 155/07, ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13. |
| 10. கு. பிரபாகர், மூர்வீதி, மன்னார். |

## குறுக்கெழுத்துப் போட்டி 180 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கு | 2 ய | 3 ஷை | | | 6 றை |
| 7 ஞ் | 8 சி | 9 வ | | 11 றை | 12 ம |
| 13 சி | 14 மூ | 15 ஜ | | 17 கு | |
| | 20 ற் | | 22 றி | 23 வை | 24 சு |
| 25 ணை | | 27 ஜூ | 28 அ | | 30 வை |
| 31 சு | 32 ளா | 33 கு | | 35 ளீ | 36 கு |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 22.08.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-182
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

- வழங்குவது றாஹில்

## பூக்களின் வாழ்த்து

**கட்டில்** கிடந்த உன் புலன்கள்
அவிழ்வதற்கு ஆரம்பிக்கின்றன.
உன் மனது பருவம் அடையத்
தொடங்குகிறது.
உன் வயது இனிக்கிறது.
கண்கள் சுவைக்கத் தொடங்கும்,
நினைவுகள் விளையாடத்
தொடங்கும் வேளை இது.
நீ கண்களால் வணங்குகின்றாயா?
உன் பார்வையில் கற்கண்டு
வளர்கிறதா?
உன் மூச்சில் ரோஜா மொட்டுக்கள்
அவிழ்கின்றனவா?
நீ உன்னோடு
உரையாடுகின்றாயா?
உன் புன்னகை கற்பமடைகிறதா?
உன் சொற்கள் பூக்களை
ஞாபகப்படுத்துகின்றனவா?
நீ காதலை வணங்குகிறாய்.
காதல் உன் கதவுகளைக் கழற்றி
விடுகிறது.
நீ விழிகளால் கவிதை
எழுதுகின்றாய்.
உன்னை நீ ரசிக்கிறாய்.
மௌனத்தின் போது கோடி
வார்த்தைகள் உனக்குள் குவிக்கின்றாய்.
உன் கண்கள் விழுகின்ற
இடங்களில் விண்மீன்கள்
முளைக்கின்றன.
உன் இதயம் சரியும் போது
ரோஜாத் தோட்டம் வருகின்றதா
தாங்குவதற்கு?
நீ சில நேரம் துடிக்கின்றாய்.
என்றாலும் இனிக்கின்றாய்.
நீ பல வேளை துண்டு
துண்டுகளாகின்றாய். என்றாலும்
கரும்பாகக் கசிகின்றாய்.
உன் நரம்புகளை இதயம்
மீட்டுகின்றதா?
உன் பருவத்தைக் குருதி
ஏந்துகின்றதா?
நீ கண்களால் கசிகிறாய் - அது
சோகமென்றாலும் சுகம் சுவைக்கிறாய்.
நீ புன்னகையில் புரளுகின்றாய் அது
சுகமென்றாலும் நீ அமுதமாகிறாய்.
விலகும்போது நெருப்பாக எரிகிறாய்.
சேரும்போது குளிராகக்
குதூகலிக்கிறாய்.
நீ உறங்கும் போது இன்னொரு
உயிரின் சத்தம் உனக்குள் எழுகிறதா?
நீ நித்திரை மடியில் கிடக்கும் போது
இன்னொரு உருவம் உனக்குள்
அசைகின்றதா?
நீ பார்க்காது போனால் உன் விழிகள்
அனாதைகளாகின்றன.
நீ தரிசிக்கும் போது நீயே
சொர்க்கமாகின்றாய்.
காதல் உன்னை வணங்க
ஆரம்பித்திருக்கிறது.
நீ காதலுக்கு விருந்து வைக்கின்றாய்.
நீயே விருந்தாகின்றாய்.
நீ உச்சரிக்கின்ற மொழி
கவிதைகளாகின்றன.
கண்ணீரும் புன்னகையும்
தழுவுகின்றபோது நீ நீயாக இல்லையா?
வார்த்தைகளும் கவிதையும்
கைகுலுக்கும்போது உன் மொழி
உன்னிடமில்லையா?
உனக்குப் பிடித்த பெயரைக் கோடி
முறை உச்சரிக்கின்றாய்.
உன்னை வீழ்த்திய முகத்தைக் கோடி
முறை மனதால் புகைப்படம் எடுக்கின்றாய்.
விழிகளால் தழுவாதபோது உன்
தாகம் ஆழமாகிறது.
விழிகளால் தொழும்போதும் உன்
தாகம் இன்னும் ஆழமாகிறது உனக்குள்.
நீ தாகமாக மாறுகின்றாய்.
உன் கண்கள் தொட்டால் உன் பசி
நீளுகிறது.

இவ்வாரச் சிறு கதை

# இம்சை மன்னன் -இடியாமீன்!

**அலுவலக** நேரம்! எங்கும் பரபரப்பு. ஆனந்த் தனது அலுவலகத்தில் வேலைப் பளுவின் மத்தியிலும் சுறுசுறுப்பு குறையாமல் காணப்பட்டான். மேஜைமீதிருந்த கோவைகளைப் பரிசீலித்துக் கொண்டிருந்தபோது "எக்ஸ்கியூஸ் மீ சார்!" எனக் குரல் கொடுத்தபடி பியூன் சிகாமணி உள்ளே நுழைந்தான். "ஏஸ்...?" "சார்! லெற்றர்ஸ்"

அவன் கொடுத்த தபால்களை வாங்கிப் பார்த்தான். அதில் ஒன்று அவன் கவனத்தை ஈர்த்தது. அவனது பால்ய சினேகிதன் கரீம் என்பவனிடமிருந்து வந்த மடல் அது. "அடே... நம்ம இடியாமீன்!" என மனதுக்குள் சிரித்துக் கொண்டு தபாலைப் பிரித்துப் படித்தான்

"அன்பு நண்பா! நலம் நலமறிய ஆவல்! எதிர்வரும் ஞாயிறு தினமன்று எனது சிறுகதைத் தொகுதி நூல்வெளியீட்டு விழா ஒன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், நீயும் அதில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உரிமையோடு அழைக்கின்றேன்!" கூடவே அழைப்பிதழுமிருந்தது. இதழ்களில் புன்னகை தவழ ஆனந்த் "மை டியரெஸ்ட் பிரண்ட்! யூ டோன்ற் வொரி... டெப்னீற்லி ஐ வில் பீ தெயா வித் யூ!" எனக் கூறி உறுதிப்படுத்திக் கொண்டான். சுழல் நாற்காலியில் சாய்ந்தவாறே பசுமை நிறைந்த பள்ளிப்பருவத்தின் நினைவுகளைக் கொஞ்சம் இரை மீட்டிப் பார்க்கலானான்.

கரீமும் ஆனந்தும் ஆரம்பக் கல்வி முதல் உயர் தரம்வரை ஒன்றாகவே பயின்று வந்த இனிய நண்பர்கள்! பிறந்த நாட்டாலும் பேசும் மொழியாலும் ஒன்று பட்டவர் மட்டுமல்ல, வளர்ந்த ஊராலும் வாழ்க்கை முறையாலும் ஒன்று பட்டவரேதாம்! பாடசாலை நாட்களில் 'இம்சை மன்னனென்று' பெயர் வாங்கிய கரீமுக்கு 'இடியாமீன்' என்ற செல்லப் பெயருமுண்டு! அவன் சக மாணாக்கரின் அன்புக்கும், ஆதரவுக்கும் பாத்திரமானவனாக விளங்கினான். அது ஒரு வசந்த காலம்! நெஞ்சை விட்டகலாத ரம்யமான நினைவுகள்! இன்று நினைத்தாலும் இனித்திடும் - மீண்டும் வராத காலம் அது! விடலைப்பருவத்தில் கரீமும் ஆனந்தும் செய்த குறும்புகளும் ஆடிய கூத்துக்களும் அலாதியானவை. எப்போது பார்த்தாலும் தானும் சிரித்துக்கொண்டு பிறரையும் சிரிக்க வைப்பதே அவனுடைய வழக்கமாயிருந்தது.

அவனுடைய கேலி பேச்சுக்களுக்கும், சுட்டித்தனங்களுக்கும் சமயத்தில் அதிபர் முதல் ஆசிரியர்வரை இலக்காவதுண்டு! அப்போதெல்லாம் "இவனோட இம்சை தாங்க முடியலப்பா..." என அவர்கள் அங்கலாய்த்துக் கொள்வர். அதனாலோ என்னவோ அவனை 'இம்சை மன்னன்' என்றே அழைத்துவந்தனர்.

அவர்கள் பத்தாம் தரத்தில் பயின்று கொண்டிருந்த சமயம் அது... அன்று வகுப்பாசிரியர் 'டேவிட்' அவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு மாணவர்களுக்குப் பாடம் நடாத்திக் கொண்டிருந்தார். புவி ஈர்ப்பு சக்தி பற்றி அவர் விளக்கமளிக்கையில், தனது விரல் இடுக்கில் வைத்திருந்த 'சோக் பீஸை' மேசை மீது நழுவவிட்டபடி ஈர்ப்பு சக்தியினால் அது கீழே விழுந்ததை செயல்முறையில் சுட்டிக்காட்டினார். பின்னர் மாணவர்களைப் பார்த்து கேள்விகளைத் தொடுத்தார். "கரீம்! எங்கே நீ சொல் பார்க்கலாம்.. இது கீழே ஏன் விழுந்ததென்று!"

"என்ன சார்... இது கூடவா தெரியாது? நீங்கள் விட்டபடியால் விழுந்தது!" நறுக்கென அவன் கூறிய பதிலால் 'கொல் என்று வகுப்பறை எங்கும் சிரிப்பொலி எழுந்தது. ஆசிரியருக்கு ஒரு பக்கம் சிரிப்பு வந்தாலும் கரீமுடைய அலட்சியப் போக்கைக்கண்டு ஆத்திரமுற்றார்.

"டேய் பூள்! கேட்ட கேள்விக்கு ஒழுங்கா பதில் சொல்!" வகுப்பறை அமைதியானது. உன் மனசில் நீ பெரிய அறிவாளி என்ற எண்ணமோ உனக்கு? அதிகப் பிரசங்கி" கரீம் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனான்.

அன்றொருநாள் அதிபர் அஸீஸ் அவர்கள் வழமைபோல் 'ரவுண்ட்ஸ்' வந்து கொண்டிருந்தார். வகுப்பறை வாசல்களில் ஏதேனும் கழிவுப் பேப்பர்களையோ கூளங்களையோ கண்டுவிட்டால் உடனே அவற்றை எடுத்து கூளப்பெட்டியில் போட்டு விடுவார். 'சைகாலஜிக்' தெரிந்தவர் அவர்! அதனாலேதான் அவ்விதம் செய்தார். அதனை பார்த்தாவது மாணவமணிகளும் தமது வகுப்பறைகளைச் சுத்தமாக வைத்திருக்க மாட்டார்களா என்ற ஒரு நப்பாசை அவருக்கு! ஆனால் நடந்தது என்ன...! கரீமும் ஆனந்தும் அதிபரைக் கண்டதும் தாம் சேகரித்து வைத்திருக்கும் கூளங்களை



-யாழமீர் மர்சூன் -

வேண்டுமென்றே வாசலில் வீசிவிட்டு வேடிக்கைப் பார்க்கலாயினர். ஆனாலும் அதிபர் அதனைப் பொருட்படுத்தாது குனிந்து அவற்றையெடுத்து கூளப் பெட்டியில் போட்டுவிட்டுத்தான் செல்வார். இப்படி ஓரிரு முறையல்ல, பல தடவைகள் இந்தக் கூத்து நடந்தேறியது. பாவம் மனிதர் சிறிதும் தன் முயற்சியில் மனம் தளராத விக்கிரமாதித்தனைப் போல் பல முறை முயன்றும் பலனின்றிப் போனார். இறுதியில் "சீ!சீ! இந்தப் பழம் புளிக்கும்!" என்ற மனோபாவத்தில் தனது முயற்சியைக் கைவிட்டு விட்டு, எக்கேடும் கெட்டுப் போகட்டும்" என்றிருந்துவிட்டார்.

அன்று பாடசாலைவிட்டு மாணவர்களும், ஆசிரியர்களும் சென்றுவிட ஆனந்தும், கரீமும் ஏதோ சதித் திட்டமொன்றுக்குத் தயாராகினர். குருமூர்த்தி மாஸ்டர் மட்டும் வீடு செல்லாமலே 'சயன்ஸ் லேபில்' ஏதோ வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை அவதானித்துவிட்டனர். "டேய் ஆனந்து... இவருக்கு இன்னைக்கு ஒரு நல்ல வேலை செய்யலாமாடா...?"
"என்னடாப்பா! இந்த வெளையாட்டுக்கு... நான் வரல்லே! ஆளை! விடுடா சாமி" என்று ஆனந்த் பயந்து ஒதுங்கினான். "சரியான பயந்தாங்கொள்ளிடா நீ! அதான் நான் இருக்கேன்லே... வாடா பயப்படாதே!"

இருவரும் சேர்ந்து லேபின் வெளிக்கதவை மெல்ல இழுத்து மூடிவிட்டனர். "டேய்! அந்த மேசையைத் தூக்கி இங்கே வைய்டா" கரீமுடைய கட்டளையை ஆனந்த் நிறைவேற்றினான். "டேய்... பாவம்டா வாத்தியார், எப்படிடா வெளியே வருவார்!" ஆனந்த் கேட்கவே "பரவாயில்லை! இன்னைக்கு ஒரு நாள் உள்ளே கிடந்து புழுங்கட்டும். வாடா போகலாம்" என்றான். கதவை மூடிவிட்டு மேசைகளையும் கதிரைகளையும் கதவுக்கு முட்டுக் கொடுத்து வைத்துவிட்டு அவர்களிருவரும் ஓடிவிட்டனர். ஆசிரியர்களின் கதி அதோ கதிதான் பாவம்! லேபுக்குள்ளேயே கிடந்து மாளவேண்டியதாயிற்று.

அடுத்த நாள் பாடசாலையெங்கும் இதே பேச்சாகத்தானிருந்தது. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டனர். அதிபர் அஸீஸுக்கு இந்த விளையாட்டு அடியோடு பிடிக்கவில்லை! "இட் இஸ்டு மச்! தே ஆர் வெரி பேட் போய்ஸ்!" என்று கடுப்பானார். "எதற்கும் இவர்கள் மீது ஒரு - கண்ணாகவே இருங்கள்!" என்று ஆசிரியரிடத்திலும் எச்சரித்து வைத்தார். "டேய்... நான் அப்பவே சொன்னேன்டா... நீ கேட்டியா!? எதுக்குடா இந்த மாதிரியெல்லாம் பண்ணுற? கடைசியில் என்னையும் வம்புல மாட்டிவைச்சிட்டியேடா!" ஆனந்த் ஆதங்கப்பட்டான். "சரிதான் போடா... இவரு பெரிய ஆளு-நியாயம் கேட்டு வந்துட்டாராக்கும்!" என்றான் கரீம். "இன்னையோட உன் சகவாசமே வேண்டாம்டா எனக்கு. நான் வரேன்" ஆனந்த் கரீமோடு கோபித்துக் கொண்டு செல்லவும் கரீம் அவனைப்பார்த்து நடிகர் திலகத்தின் பாணியிலே "கண்ணா எங்கடா போற ...? எனக்கு உன்ன விட்டால் யாருடா இருக்கா?" என்று பஞ்ச் டயாலாக் பேசி நடிக்கவும் ஆனந்துக்கு பகீரென சிரிப்பு வந்துவிட்டது. "பேஷ்! பேஷ்! பிரமாதம்டா" என்று பாராட்டினான். அடுத்த கணமே இருவரும் கை கோர்த்துக் கொண்டனர்.

வித்யா டீச்சர் சாந்தமானவர்! பொதுவாக அவர் பாடம் எடுக்கும்போது மாணவர்களிடத்தில் ஓர் உற்சாகம் காணப்படுவதுண்டு. அன்பால் மாணாக்கரை அரவணைத்துச் செல்லும் அவரது பாங்கே தனி! அன்று அவர் சமூகக் கல்வி பாடம் எடுத்துக் கொண்டிருந்தார். இலங்கையின் பிரதான ஆறுகள் எவை என்பன பற்றி விளக்கமளிக்கையில் "முக்கிய ஆறுகள் எவை என்று சொல்லுங்கள் பார்ப்போம்!" என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்டார். உடனே கரீம் எழுந்து நின்று "மன்னிக்கணும் டீச்சர்! இலங்கையில் எந்த ஆறுகளுமே முக்குவதில்லையே - மனிதரைத் தவிர!" என்றானே பார்க்கலாம், பிறகென்ன... பாடம் முடியும்வரை அவன் வகுப்பறையைவிட்டு வெளியே நிற்க வேண்டியதாயிற்று! இவ்விதம் நகைச்சுவையும் - கிண்டலும் செய்து கொண்டிருந்தால் அவனுக்கு படிப்பு எப்படி மண்டையில் ஏறும்! அது எட்டாக்கனியாகவே இருந்தது அவனுக்கு. கதை - கவிதை- கட்டுரையென்று அவனது கவனமெல்லாம் திசை திரும்பிக் கொண்டிருந்தது. எந்த ஒரு துன்பமான சூழ்நிலையிலும் கூட அவனால் சிரிக்க முடிந்தது என்னவோ ஓர் அபூர்வமான காரியம்தான்!

"டேய்... எப்படிடா உன்னால் மட்டும் இப்படி எந்நேரமும் சிரித்துக் கொண்டிருக்க முடியுது?" என்று யாராவது கேட்டால் "ஓ... அதுவா! வெரி சிம்பிள், சிரிக்கத் தெரிந்தால் போதும் துயர் நெருங்காது நம்மை ஒரு போதும்!" என்று பாடுவான். 'இடுக்கண் வருங்கால் நகுக!' என்ற பொய்யா மொழியை முன்னுதாரணம் காட்டிப் பேசுவான். 'சிரிப்பு எத்தனையோ நோய்களுக்குச் சிறந்த நிவாரணி என்று மருத்துவர்களே சிபாரிசு செய்யுமளவுக்கு மனித குலத்துக்கே உரித்தான அரிய பண்பு அது! வாய்விட்டுச் சிரித்தாலே நோய் விட்டுப் போகும்" என்பான். வித்தியாசமான பேர் வழிதான்! ஒரு சமயம் வகுப்பறையில் தமிழாசான் நல்லதம்பிப் பிள்ளை அவர்கள் சங்கப் பாடல்களில் தலைவன் - தலைவியின் ஊடல்களைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். தோழி கூறுகிறாள், "தலைவனே! நீ இப்படி வந்து பார்ப்பது நன்றாய் இல்லை - எனது தலைவிக்கு இழுக்குத் தருவதாய் இருக்கிறது. உனக்கு அவளை மணம் புரிந்து கொள்ளவேண்டுமென்ற உண்மையான நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை - எனது தலைவி கோபமுற்றிருக்கிறாள். இனி அவளைப் பார்க்க வராதே! அவளுக்கு உன்னைப் பார்க்கவே பிடிக்கவில்லையாம்!" - இப்படி ஆசான் விளக்கிக் கொண்டிருக்கையில் குறுக்கிட்டு கரீம் கூறினான்.

"அதனால் என்ன? தலைவி அவ்வளவு பிசகு பண்ணிக்கொண்டால் தோழி எங்கே போனாள்? அவள் - போகட்டும் நீ என்ன சொல்கிறாய்? என்று தோழியைக் கேட்க வேண்டியதுதானே!" என்று அவன் உரக்கச் சொல்ல, வகுப்பறை சிரிப்பொலியால் அதிர்ந்தது ஒருகணம்! சிரிப்பு அடங்கும்வரை பொறுத்திருந்து தமிழாசான் கூறினார்- "நாளை கிடைக்கும் பலாக்காயை விட இன்று இருக்கும் களாக்காயே மேல் என்கிறாய் நீ... அப்படித்தானே! அனுபவ ரீதியான சிந்தனைபோலும்! பிரக்றிக்கல் திங்கிங்!" அதைக்கேட்டு மீண்டும் வகுப்பறை அதிர்ந்தது. இவ்வாறு அவனது விளையாட்டுக்கள் தொடர்ந்த வண்ணமிருந்தன. அதன் உச்சக்கட்ட நிகழ்வாக நடந்த சம்பவம் ஒன்றுதான் அதிபர் அஸீஸுக்கு பரிமாறிய தேநீரில் பேதி மருந்தைக் கலந்து கொடுத்துவிட்டு வேடிக்கை பார்த்தது! அதிபரும் தேநீரை ருசித்துப் பருகிவிட்டு "அடடா... அருமை! இன்றுதான் புஹாரி ஹோட்டல் தேநீர் ருசிக்கிறது" என பவ்வியமாய் சொன்னார். சிறிது நேரத்திலெல்லாம் மருந்து தன் வேலையைக் காட்ட ஆரம்பித்ததும், அதிபர் அடிக்கொருமுறை மலசலகூடத்துக்கும் அலுவலகத்திற்குமாக ஓடியோடியே களைத்து இளைத்துவிட்டார். பாவம்! உடல் சோர்வுற்று இறுதியில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவருக்கு சிகிச்சையளிக்க வேண்டிய ஒருபரிதாப நிலை ஏற்பட்டது!

இச்சம்பவம் பாடசாலையில் பெரும் பரபரப்பை உண்டாக்கியதோடு, விடயம் வெளியிலும் மெல்லக் கசியத் தொடங்கியது. கரீமுடைய விஷமத் தனமான இச்செயலைக் கண்டித்து அவனை பாடசாலையிலிருந்து இடை நீக்கம் செய்ய வேண்டுமென ஆசிரியர் குழாம் கூடி முடிவெடுத்தது. "இவனை இப்படியே விட்டு விட்டால் இவனுடைய இம்சைகளுக்கு எல்லை இல்லாமல் போய் விடும்! இது என்ன விளையாட்டு? ஆட்டைக் கடிச்சு, மாட்டைக் கடிச்சு கடைசியில் மனுஷனைக் கடிக்கப் பார்க்கிறானே பயல்!"

"அட... ஆமாங்கிறேன்! பொல்லாத சைத்தான் - இவன் கூட சேர்ந்து கொண்டால் மத்தப் பசங்களும் கெட்டு குட்டிச்சுவராயிடுவாங்க. இப்பவே இவனுக்கு ஒரு முடிவு கட்டியாகணும்!"

"ஆசிரியரை மதிக்கத் தெரியாதவன் - அகம்பாவம் பிடிச்சவன்! இவன்லாம் படிச்சுக் கிழிக்கவா போறான் பரதேசி"

இப்படி ஆளுக்கு ஆள் தமது ஆதங்கத்தையெல்லாம் கொட்டித் தீர்த்தனர். அவன் விடயத்தில் அதிபர் எடுக்கப் போகும் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். மிகுந்த இரக்க சுபாவம் கொண்டவரான அதிபர், கரீமுடைய எதிர்கால நலன் கருதி அவனை மன்னித்து அவன் திருந்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கிப் பார்த்தார். இல்லையானால் அன்றே அவனது சீட்டுக் கிழிந்திருக்கவேண்டியதுதான்!

அதிபரின் நம்பிக்கையில் அவ்வளவு விரைவாக அவன் மண்ணை வாரிப் போடுவானென்று யாரும் எதிர்பார்க்கவில்லை! அன்று பாடசாலையில் 'கலைவிழா' நிகழ்வு இனிதே நடந்து கொண்டிருந்தது. நிகழ்ச்சி நிரல்களின் பிரகாரம் ஒவ்வொன்றாக நிறைவு பெற்று இறுதியாக அதிபர் நன்றியுரை நிகழ்த்தவேண்டியிருந்தது. அப்போது கரீம் திட்டமிட்டபடி ஒலி பெருக்கியில் மறைத்து வைத்திருந்த ஆபத்தற்ற மென் மின்சார இழையின் இயக்கத்தைத் தூண்டிவிட்டு கூட்டத்தோடு நின்று நடப்பதை வேடிக்கைப் பார்த்தான். அதிபர் அஸீஸ் ஒலிபெருக்கியை நெருங்கினார். அனைவரும் அவருடைய பேச்சைக் கேட்பதற்கு ஆவலோடு காத்திருந்தனர். அவர் தனது கழுத்துப் பட்டியை ஒருமுறை சரி செய்துகொண்டு தொண்டையை செருமியபடி "எல்லாப் புகழும் இறைவனுக்கே!" என்றவாறு ஒலிபெருக்கியின் மீது கையை மெல்ல வைத்தார். மறுகணமே மென்மின்சார அழுத்தத்துக்கு இலக்காகி "ஏண்ட உம்மாண்டே..." என்று அலறியடித்துக் கொண்டு மேடையில் அப்படியும் இப்படியுமாக எம்பிக் குதித்தார் பாவம்! அதனைக் கண்டு கூட்டத்தில் சலசலப்பு உண்டானது. மாணவர்கள் சிரிப்பை அடக்கமுடியாமல் ஆரவாரப்பட்டனர். ஆசிரியர் குழாம் பதறியடித்துக் கொண்டு மேடைக்கு ஓடியது.

அங்கு நடந்ததை ஆராய்ந்தபோது ஒலிபெருக்கியின் பிடியில் மின்சாரம் பொருத்தப்பட்டிருந்த விடயம் அம்பலமானது. அதற்கான சூத்திரதாரியும் அடையாளம் காணப்பட்டார். அங்கே கூடி நின்றோரின் பார்வையெல்லாம் கரீமைத்தான் தேடின! ஆனால் அவனோ அங்கு இல்லை, எஸ்கேப்பாகி விட்டான். சபையில் ஏற்பட்ட களேபரத்தினால் பீதியடைந்த கரீம் அங்கிருந்து தப்பிக்க வெருண்டோடினான். ஓடினான் - ஓடினான்: கல்விக் கூடத்தை விட்டே ஓடினான். அதன் பிறகு அவன் மழைக்குக் கூட அந்தப் பக்கம் ஒதுங்கினானில்லை! 'யானை தன் தலைமேலே மண்ணை வாரிக்கொட்டிக் கொள்வதைப் போல், அவனாகவே அவனது கல்விக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டான் பாவி! விளையாட்டாக இருந்தாலும் சரி அது அளவுக்கு மீறினால் ஆபத்து எனும் பாடத்தை அனுபவரீதியாக அவன் கற்றுணர்ந்ததாகப் பின்னாளில் அவனே ஒருமுறை ஆனந்திடம் சொல்லி வருந்தியதுண்டு!

'ஆனந்தமயமான அந்த நினைவுகளின் இரைமீட்டலிலிருந்து மீண்ட ஆனந்துக்கு அன்றையநாள் - ஆனந்தமாகவே கழிந்தது.

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**விஞ்ஞான** உலகம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் எத்தனையோ தற்கால மேதாவிகள் உடம்பிலுள்ள மேலழுக்கைப் போக்குவதற்கு எத்தனையோ சவர்க்காரங்களையும், வேறு பல திரவப்பொருள்களையும் விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடித்திருக்கிறார்களே ஒழிய, அகத்தூய்மை பற்றி ஏதாவது ஒன்றையாவது கண்டுபிடித்திருக்கிறார்களா? என்றால் விடை பூஜ்யம்தான்.

மேலும் நாம் புறத்தூய்மையையாவது சரியாகச் செய்துள்ளோமா என்றால் அது கூடப் பூஜ்யந்தான். ஏன்? என்ற கேள்வி எழுமானால், வினாடிக்கு வினாடி எமது உடம்பில் அழுக்குப் படிந்து கொண்டே இருக்கிறது என்பதும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புத்தான். நீரால் கழுவிப் போக்கக் கூடிய புறத்தூய்மை இருப்பினும், அகத்தூய்மையானது அவன் வாய்மையாலேயே பெறத்தக்கது என்பதை

"புறத்தூய்மை நீரா னமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப் படும்." குறள் : 298

புறத்தூய்மையானது நீரினாலும் அமையலாம் அகத்தூய்மையானது ஒருவன் உண்மையை ஒழித்துப் பேசாத வாய்மையினாலேயே அமைவதாகும்.

# காந்தமா அவள் கண்கள்

தருவது **கற்பகன்**

**மஞ்சத்தை** விட்டெழுந்த மரகதவல்லி, தான் காண்பது கனவா? அல்லது நனவா? என்பது கூடப் புரியாதவளாய், "யார் நீங்கள்?" என்று கேட்டபோது, அவளுக்கு இருந்த கலவரத்தைக் கவனித்த அங்கையற்கண்ணி. நான் யார் என்பதை பின்பு கூறுகிறேன். உங்கள் தந்தை உங்களை அழைத்தார். நீங்கள் உறக்கத்திலிருந்தீர்கள் போலிருக்கிறது. அதனால், உங்கள் தந்தை அழைத்தது கேட்கவில்லை என்று நினைக்கிறேன் என்றாள்.

இதைக் கேட்டதும் மரகதவல்லிக்கு ஏற்பட்ட கோபத்துக்கு அளவே இல்லை. ஆயினும் வந்தவள் யாரென்று அறியாமல் அவள் மேல் கோபித்து என்ன பயன் என்ற



எண்ணம் மனதில் தோன்றவே, திடீர் என முகத்திலேற்பட்ட சீற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் "அப்பாவோடு வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள்" என்று கேட்டுவிட்டாள். ஆனாலும், அவள் எதிர்ப்பார்த்த பதிலைத்தான் அங்கயற்கண்ணி கூறுவாள் என்ற எதிர்பார்ப்போடு அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்தது போல் பதில் வராதது கண்டு மரகதவல்லியின் உணர்வோட்டங்கள் ஒருகணம் ஸ்தம்பித்து நின்றுவிட்டன. மரகதவல்லியின் கேள்வியில் இருந்த உட்கருத்தைப் புரிந்துகொண்ட அங்கயற்கண்ணி "யார் இருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?" என்றதும், மரகதவல்லியின் முகத்தில் ஏதோ ஒரு கலவரம் மூள்வதை அவதானித்த அங்கயற்கண்ணி "யாராக இருந்தால் உங்களுக்குப் பிடிக்கும்" என்றவள், ஜாடையாக மரகதவல்லியின் முகத்தைக் கவனித்தாள். "சற்று முன்பாக வந்த வண்டியில்..."

"ஆம் அந்த வண்டியில் அண்ணாவும் நானும்தான் வந்தோம். அதற்கென்ன இப்போ?" என்று அங்கயற்கண்ணி கேட்டதும் மரகதவல்லியின் செம்மஞ்சள் முகத்தில் மேலும் செம்மை படர்வதை அவதானித்த அங்கயற்கண்ணி "மண்டபத்தில் அமர்ந்திருப்பவரைப் பற்றி ஏன் இத்தனை ஆராய்ச்சி? சென்று பார்த்து விட்டால் போகிறது. வாருங்கள் உங்கள் தந்தையின் அழைப்புக் குரல் கேட்கிறது" என்ற அவளை அவசரப்படுத்திய போது, "ஒரு நிமிடம்" என்று கூறிவிட்டு குளியலறையை நோக்கி ஓடினாள் மரகதவல்லி.

சில நிமிட நேரத்துக்குள் தன்னை அலங்கரித்துக் கொண்டு வரவேற்பு மண்டபத்தை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த மரகதவல்லியைக் கண்டதும் அங்கயற்கண்ணி ஒரு கணம் பிரமித்துப் போனாள். மரகதவல்லி நடந்துவரும் பொழுது கனகமணித்தேர் ஒன்று அசைந்து வருகிறதா? இல்லை அலங்கார மாளிகையில் சுவர்களில் எழுதப்பட்டிருந்த ஓவியம்தான் உயிர் பெற்று வந்துவிட்டதா? என்றெல்லாம் எண்ணியது அவள் மனம். பெண்ணாகப் பிறந்த எனக்கே இப்படியொரு தடுமாற்றமென்றால் இவளைக் கண்ட ஆண்மகனின் நிலை எப்படியிருக்கும்? என்றெல்லாம் அவள் மனதுக்குள் எத்தனையோ கற்பனைகள் நிழலாடி மறைந்த வண்ணம் இருந்தன. இவள் மட்டும் எனக்கு அண்ணியாகி விட்டால், அப்பப்பா! இவளோடு பேசிக் கொண்டிருப்பதிலேயே காலம் தன்னை அறியாமல் பறந்துவிடும் என்றெல்லாம் அந்த இமைப் பொழுதில் அவள் மனக்கண்ணில் நினைவலைகள் தோன்றி மறைந்து கொண்டிருந்த வேளையில் "அப்படி என்ன சிந்தனை" - மரகதவல்லியின் கேள்வி காதில் விழுந்தபின்தான் அங்கையற்கண்ணி தன் நினைவு பெற்றாள். "போகலாமா?" என்று மரகதவல்லி கேட்டதும் அங்கயற்கண்ணியிடமிருந்து "ஊம்" என்றதைத் தவிர பதில் ஏதும் வரவில்லை.

மேற் தளத்திலிருந்து இறங்கத் தொடங்கும் போது மண்டபத்தில் விக்கிரமன் அமர்ந்திருப்பது சாளரத்தில் தொங்கவிடப்பட்டிருந்த திரைச் சீலையின் வழியாகக் கண்ணிற்பட்டதுதான் தாமதம், மரகதவல்லியின் கால்களிலுள்ள வேகம் மெதுவாகக் குறைய ஆரம்பித்து இடையில் நின்று விட்டாள். அவன் பின்னால் வந்து கொண்டிருந்த அங்கையற்கண்ணி அவளை முந்திக் கொண்டு முன்னால் வந்து, அவள் முகத்தை நோக்கியவள் "ஏன்" என்றாள். சற்று வியப்போடு அதைக் கேட்ட மரகதவல்லி "அவர்" என்று விக்கிரமனைக் காட்டி ஏதோ சொல்ல முற்பட்டபோது, "அதுதான் என் அண்ணன் என்று சொன்னேனே, புரியவில்லை" என்றாள். அந்த வார்த்தையில் சற்று சலிப்பும் கடுமையும் கலந்திருந்தது கண்டு தயக்கத்தோடு படிகளிறங்கிச் சென்றாள்.

"மகளே! மரகதம் ஏன் இத்தனை நேரம்? ஆளையே காணவில்லையே! விருந்தாளியாக வருபவர்களுக்குக் கூட உபசரிப்பதற்கு யாரும் இல்லையே! இதோ! இவர் எனது பாலிய நண்பரின் மகன். மத்திய இலங்கை மன்னரின் வாரிசு விக்கிரமன்" என்றவர் அங்கயற்கண்ணியைச் சுட்டிக்காட்டி, "இவரின் ஒரே தங்கை" என்றதும் விக்கிரமன் ஒருமுறை ஆசனத்தில் இருந்து சற்று நிமிர்ந்து அமர்ந்து கொண்டான். அந்தச் செயலானது அவன் கம்பீரத்தை மேலும் ஒருபடி உயர்த்தி நின்றது.

குனிந்ததலை நிமிராமல் நின்றிருந்த மரகதவல்லி, முதல் முறையாக விக்கிரமனை நிமிர்ந்து பார்த்து இரு கைகளையும் கூப்பி "வணக்கம்" என்றாள். அவள் பார்த்த அந்த எதிர்நோக்கு விக்கிரமனின் இதயத்தை ஊடுருவியதோ என்னவோ பதிலுக்கு அவனும் முறுவலித்தானே தவிர, ஏனும் பேசவில்லை. இவைகளையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த அவள் தங்கை, மெதுவாகத் தலையசைத்தாள்.

அவள் தலையசைத்த விதம் "அப்படியா விடயம்? அரண்மனை சென்றதும், அது பற்றிக் கேட்டுக் கொள்கிறேன்" என்பது போலிருந்தது.

*"கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது"*

*அதிகாரம் - 110.*
*குறள் - 1091.*

## சிந்தியா பதில்கள்

**✉ சிந்தியா, நான் ஒருநாளைக்கு சிந்தியாவாக இருக்க ஆசைப்படுகிறேன் முடியுமா?**
**-எஸ்.ரேணுகா, அம்பலாங்கொடை.**

இயக்குநர் சங்கர் ஓ.கே. சொன்னால் எனக்கு ஆட்சேபனை இல்லை.


**✉ அரச சமாதானச் செயலகத்தின் பிரதிச் செயலாளர் கேதீஸ் லோகநாதன் சுட்டுக்கொல்லப்பட்டது எதைக் காட்டுகிறது?**
**-வை.சிற்றம்பலம், வவுனியா.**

பயங்கரவாதத்துக்குத் தாளம் போடாத அனைவரின் பாதுகாப்பையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும். கேதீஸ் விடயத்தில் அரசு தவறியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

**✉ முஸ்லிம்கள் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள என்ன செய்யலாம்?**
**-எம்.எச்.யூசுப், கிண்ணியா.**

பாதுகாப்பு அச்சுறுத்தல் யாரிடமிருந்து என்பதையும் அந்தத்தரப்பின் பலம், பலஹீனம் என்பதையும் பொறுத்தே முடிவு செய்ய வேண்டும். இல்லையெனின் எருமைக்கு முன்னால் சத்தியாக் கிரகம் இருப்பதாகத்தான் முடியும்.

**✉ அரசாங்கப் பணிகள் ஆத்திரமூட்டும் வகையில் அலட்சியத்தோடும், தாமதத்தோடும் நடக்கிறதே இதற்கு என்ன செய்யலாம்?**
**-செ.வசந்தன், களுத்துறை.**




மத்தியிலிருந்து மாகாணங்கள் வரைக்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இது காலம் காலமாக நீடித்து வரும் ஒன்று. உடனடியாகத் திருத்துவது கடினம். மக்களின் வரிப்பணத்தில் தான் அவர்கள் சம்பளம் எடுக்கிறார்கள் என்பதை உரைக்கும்படி உணர்த்த வேண்டும்.

**✉ சிந்தியா! நாலாம் கட்ட ஈழப்போரில் ஆட்டிலெறியும், மல்டிபெரலும் புகுந்து விளையாடுகிறதே; இதைப் போர் பரிணாம வளர்ச்சி என்று கூறலாமா?**
**-தி.முகுந்தன், தெமட்டகொட.**

ஆகஸ்ட் மூன்றாம் திகதியிலிருந்து ஆகஸ்ட் பதினேழாம் திகதி வரையான இரண்டு கிழமைக்குள் நடந்த சண்டைகளில் சுமார் 120,000 பேர் இடம்பெயர்ந்து அகதியாகி இருக்கிறார்கள். படைகள், புலிகள், பொதுமக்கள் என்று 850 பேர் வரை இறந்திருக்கிறார்கள். 278 பேர் வரை காணாமல் போயிருக்கிறார்கள். இப்படி எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எதிர்காலத்தில் எத்தகைய போர் பரிணாம வளர்ச்சி நடைபெறப்போகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாமே.

**✉ இலங்கையில் நடைபெறவிருந்த முக்கோண கிரிக்கெட் போட்டிகளிலிருந்து தென் ஆபிரிக்கா அணியினர் பின்வாங்கியது எதைக் காட்டுகிறது?**
**-ஏ.எஃப். உவைஷ்.**

இலங்கை ஒரு யுத்த பூமியாக மாறிவிட்டது என்று நினைக்கும் அதேவேளை, 26 வருடம் நெல்சன் மண்டேலா போராட்டம் நடத்திய மண்ணிலிருந்து வந்தவர்களா இப்படிப் பயந்தார்கள் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

**✉ மூதூரில் சுட்டுக் கொல்லப்பட்ட 17 தொண்டு நிறுவன ஊழியர்களின் உடல்கள் ஏற்கனவே அழுகிய நிலையில் தான் மீட்டு அடக்கம் செய்யப் பட்டது. மீண்டும் தோண்டி எடுத்து விசாரணை செய்தால் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துவிட முடியுமா?**
**-ப.தட்சாயினி, லிங்கநகர்.**

விசாரணைக்குத் தேவையென்றால் அதைச் செய்யலாம். இதனூடாக எப்படிக் கொலை செய்யப்பட்டார்கள் என்பதைத்தான் கண்டு பிடிக்கலாம். யாருடைய துப்பாக்கி சுட்டது என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா என்பது தெரியவில்லை.

**✉ சிந்தியா! நடிகைகள் எவ்வளவு சம்பளம் எடுக்கிறார்கள் என்று சொன்ன உமக்கு நடிகர்களின் சம்பளத்தைச் சொல்லத் தெரியாதா?**
**-கோ.பூஜா, மட்டக்களப்பு.**

சொல்லாதது தெய்வக் குற்றமாகி விட்டதோ. சரி இதோ விபரங்கள் வாயைப் பிளக்காமல் வாசியுங்கள்.

ரஜினி - 2000, கமல் -500, விஜய் - 400, அஜித் -300, விஜயகாந்த் - 250, விக்ரம் - 200, சூர்யா - 200, சிம்பு - 150, தனுஷ் - 100, அர்ஜுன் - 100, சரத்குமார் - 70, மாதவன் - 50, பிரசாந்த் - 35, சத்தியராஜ் - 30, ஸ்ரீகாந்த் - 30, ஆர்யா - 20, பரத் - 15, மேலே குறிப்பிட்ட நடிகர்களின் சம்பளங்கள் ஆயிரங்களில் அல்ல லட்சங்களில்...

**✉ சிந்தியா! இடம் பெயர்ந்தவர்களின் வேதனை பற்றி உங்களுக்குத் தெரியுமா?**
**-கா.கோடீஸ்வரன், உவர்மலை.**

நல்லாக் கேட்டீர்கள். 1992ஆம் ஆண்டு ஊரை விட்டு இடம்பெயர்ந்து இன்றைக்கு வரைக்கும் அதை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

சந்தோசம் பூசிய முகங்களும், பசுமை போர்த்திய எங்கள் ஊரும் இப்போது மனிதர்களைத் தொலைத்து உருமாறிப் போய்விட்டது.

**✉ வன்னிக்குள் போனவர்கள் மீண்டும் வெளியால் வருவதற்கு அரசாங்கம் தடையாக இருக்குமா?**
**-ப.தேவராஜ், நல்லூர்.**

போகும்படியோ, வரவேண்டாம் என்றோ அரசு சொல்லவில்லை. வரும்படியும், போக வேண்டாம் என்றும் புலிகள் சொல்கிறார்கள். இரண்டுக்குமிடையில் மக்கள் என்னதான் செய்ய முடியும்.

**✉ மாவிலாறு அணை பலத்த இழுபறிகளுக்குப் பின் திறக்கப்பட்டாலும் அதனால் உண்மையில் பலனடைந்தவர்கள் யார்?**
**-பிரான்சிஸ், மன்னார்.**

மனிதர்களை விடுங்கள். மாவிலாறு நீர் கரைபுரண்டு ஓடி வருகையில் எருமைகளும், மாடுகளும் போட்ட குதியாட்டத்தைத் தொலைக்காட்சியில் கண்டீர்களா? மனிதர்கள் சண்டை புரிவார்கள். பாவம் வாயில்லா அந்த ஜீவன்கள் என்ன செய்யும்?

**✉ நல்லூர்க் கந்தன் கொடியேறிய கையுடன் இவ்வளவு அசம்பாவிதமா? கந்தனே கைவிட்டு விட்டானா?**
**-நேசன், கனடா.**

இல்லை. பார்த்துக்கொண்டிருக்கிறான்.

**✉ ஆயுத மோதல்களில் கப்பல்களுக்கு ஆயுதப் பாதுகாப்பு வழங்குவது தெரியும். அது என்ன 'கொடி உரிமை' வழங்குவது?**
**-என்.சுரேஷ், மன்னார்.**


மோதல்கள் இடம்பெறும் சமயம் நேரடியான கடற்படை ஆயுத பாதுகாப்பினை விட தனது நாட்டு கொடியினை குறிப்பிட்ட கப்பல்களில் பறக்க விடுவதன் மூலம் தனது கொடி உரிமையினை வெளிக்காட்டுதல் ஆகும்.

உதாரணமாக தெற்கில் இருந்து காங்கேசன் துறைக்குச் செல்லும் ஒரு கப்பலில் இந்தியா தனது கொடியினைப் பயன்படுத்த அனுமதிப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது அந்தக் கப்பல் தாக்கப்பட்டால் இந்தியாவைத் தாக்கியதாகக் கருதப்படும். அதேபோல் மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையிலான கப்பல்களுக்கு அமெரிக்கா தனது கொடியை வழங்குகிறது.

**✉ விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தும் கொழும்பில் அடிக்கடி குண்டு வெடிப்புகள் நடக்கிறதே?**
**-எம்.நேசன், தெஹிவளை.**

மக்கள், பாதுகாப்புத் தொடர்பில் போதிய விழிப்புணர்வு பெறாத வரையில் பயங்கரவாதம் நுழைய முடியாத இடம் எதுவுமிருக்க முடியாது.

**✉ சிந்தியா! ஒன்று வாங்கினால் இன்னொன்று**




**இலவசம் என்றால் நீர் முண்டியடிப்பீராமே?**
**-ப.தர்ஷினி, தோணிக்கல்.**

அது அமெரிக்கா போயிருந்தபோது புதிதாக ஒரு புகைப்படக்கருவி வேண்டினேன். அதற்காக அவர்கள் நமது நாட்டு மதிப்பில் 22000 ரூபா பெறுமதியான இன்னொரு புகைப்படக்கருவியை இனாமாகத்தந்தார்கள். இது நடந்து இரண்டு வருடமாகிறதே உமக்கு யார் இந்தக் கதையைச் சொன்னது.

## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)**

கிரக தோஷம், காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு, உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு

Tele/Fax : 065-2224825, +94777032844. Balu Sothidar @ hotmail.com.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"


## கனடாவில் சானியா தோல்வி.


கனடாவில் உள்ள மொன்ட்ரியல் நகரில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுள்ள ரோஜர்ஸ் டென்னிஸ் போட்டி 14.08.2006 அன்று தொடங்கியது.


சானியா மிர்சா

இதில் பங்கேற்றுள்ள இந்திய வீராங்கனை சானியா மிர்சா தனது முதல் சுற்றில் இத்தாலி வீராங்கனை. அல்பேர்ட்டாவுடன் மோதினார். ஆனால் சானியா 6-2, 1-6, 2-6 என்ற நேர்செட்டில் தோல்வியடைந்தார்.

## குரோஞேயின் மரணத்தின் பின்னணி

தென்னாபிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குரோஞ்சி சிறந்த சகலதுறை ஆட்டக்காரரான இவர், அற்புதமான ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணியை பலமுறை வெற்றிக்கு அழைத்துச் சென்றுள்ளார். சிறந்த கேப்டன் என்ற பெயர் எடுத்த இவர், கிரிக்கெட் சூதாட்டப் பிரச்சினையில் சிக்கினார். அதனைத் தொடர்ந்து அவர் தென்னாபிரிக்க அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டார்.


குரோஞ்சி

கிரிக்கெட் சூதாட்ட பிரச்சினையில் சிக்கிய சில மாதங்களுக்குள் குரோஞ்சி விமான விபத்தில் சிக்கிப் பலியானார்.. 2002ஆம் ஆண்டு ஜூன் 1ஆந் திகதி ஜார்ஜ் நகரம் அருகே உள்ள மலையில் விமானம் மோதியதால் இந்த விபத்து நடந்தது. விபத்துக்குள்ளான விமானத்தில் லில்லியம் மேயர், இயான் நோக்ஸ் ஆகிய 02 விமானிகள் மற்றும் குரோஞ்சி உட்பட மூன்று பேர் இருந்தனர். விபத்தில் விமானத்தில் இருந்த மூன்று பேரும் உடல் கருகி இறந்தனர்.

இந்நிலையில் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தச் சம்பவம் குறித்து விசாரணை தொடங்கி தொடர்ந்து நடந்தது. இந்த வழக்கை நீதிபதி சிராஜ் தேசாய் விசாரித்தார். குரோஞ்சி சென்ற விமானம் விபத்துக்குள்ளானதற்குக் காரணம் விமானிகளின் கவனக்குறைவே ஆகும் என்று அவர் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

## புதிய போர்முனைகளும்... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி....

**இதன்போது பல்குழல் பீரங்கித் தாக்குதல்களைப் படைத்தரப்பு மிக அதிகமாகவே நடத்தியுள்ளது. இதில் படைத்தரப்புக்கும் கணிசமான இழப்புக்கள் ஏற்பட்டபோதும் ஊடுருவிய புலிகளுக்கு சொல்ல முடியாதளவு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. சுமார் 150க்கும் அதிகமான புலிகள் பலியாகி இருக்கக்கூடும் என்று புலிகளின் உள்ளகத் தவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. இந்தத் தகவலை பக்கச் சார்பில்லாமல் உறுதி செய்ய முடியவில்லை. படைத்தரப்பைப் பொறுத்தவரை புலிகளின் தாக்குதலில் பலாலி கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எம்.212 ரக உலங்கு வானூர்தி சிறிய சேதமடைந்ததோடு, அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் அரியாலை கிழக்கு 514 பிரிகேட் படைத்தளமும் தாக்குதலுக்கு உள்ளானது. அதேபோல் கொழும்புத்துறையிலும் படையினரின் சில இலக்குகள் தாக்குதலுக்கு உள்ளாகின. அதுதவிர, வரணியில் இருக்கும் 521 இராணுவத் தளத்துக்கும் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த இராணுவ முகாமை நோக்கிப் புலிகள் ஏவிய எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் மந்துவில், கொடிகாமம், பொக்கட்டிப் பகுதிகளில் பொதுமக்கள் 5 பேர் படுகாயமடைந்தனர்.**

**இதேபோல் அல்லைப்பிட்டியில் பிலிப் நேரியார் தேவாலயத்தில், மக்கள் தஞ்சமடைந்திருந்த போது அங்கு வீழ்ந்து வெடித்த எறிகணையினால் சுமார் 35 பேர் இறந்துள்ளதோடு 100க்கு அதிகமானோர்கள் காயமடைந்தனர். இந்தத் தேவாலயத்தில் சுமார் 700 தொடக்கம் 1,000பேர் வரை அந்த வேளையில் தங்கியிருநதுள்ளனர்.**

**யாழ்ப்பாணத்தில் தொடர்ந்த தாக்குதல்களில் படைத்தரப்பில் 88 பேர் இறந்துள்ளதோடு 120க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இந்தத் தகவல்களை உறுதி செய்ய முடியவில்லை.**

**யாழ்ப்பாணத்தில் இதுவரை இடம் பெயர்ந்துள்ள மக்களின் நிலைமையைப் பார்க்கும் போது தென்மராட்சி கிழக்குப் பகுதியான உசன், எழுதுமட்டுவாள், மிருசுவிலில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் ஆகிய பகுதிகளிலிருந்து 2500 குடும்பங்கள் இடம்பெயர்ந்து கரவெட்டியில் உள்ளன. தென்மராட்சி தெற்குப் பகுதிகளான கரம்பக்குறிச்சி, இடைக்குறிச்சி, வரணி, சுட்டிபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து 4,500 குடும்பங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி மரநிழல்களிலும், வயல்வெளிகளிலும் வாழ்கின்றனர். இது தவிர, கரையோரப் பகுதிகளான கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் சென் பற்றிக்ஸ் கல்லூரி, பேரண்ணை ஆலயம், கொஞ்சேஞ்சி மாதா ஆலயம் ஆகிய பகுதிகளில் தங்கியுள்ளனர். இங்கு சுமார் 11,000பேர் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேபோல் தீவகப் பகுதியில் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான், வேலணை ஆகிய பகுதிகளிலிருந்து முற்றாக வெளியேறிய சுமார் 4,500 குடும்பங்கள் ஊர்காவற்துறையில் தஞ்சமடைந்துள்ளனர். குறிப்பாக ஊர்காவற்றுறை சிறிய புஸ்ப மகளிர் கன்னியர் மடத்திலேயே அதிகமானவர்கள் தங்கியுள்ளனர். மொத்தமாக 25,000பேர் வரை இடம்பெயர்ந்துள்ளனர்.**

**இதற்கு மேலதிகமாக, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து புலிகள் சரியான தகவலைத் தெரிவிக்கவில்லை. கிடைத்த தகவல்களின்படி 40 பொதுமக்கள் இறந்திருக்கலாமென்றும், 5000 பேர் வரை இடம்பெயர்ந்திருக்கலாமென்றும் கூறப்படுகிறது.**

**இதேவேளை கவனிக்கப்படவேண்டிய இன்னொரு சம்பவம் யாழில் தாக்குதல்கள் ஆரம்பமானதும் புலிகள், மக்களை இராணுவ முகாம்களுக்கு அருகிலிருந்து வெளியேறுமாறு கேட்டதும், இராணுவம், மக்கள் வீட்டை விட்டே வெளியேறாதவாறு ஊரடங்குச் சட்டத்தைப், பிறப்பித்ததுமாகும்.**

**மூதூரில் மக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தி புலிகள் தாக்கியதும், பின்னர் ஓடிய மக்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுள் உள்வாங்கியதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, படையினரை இலக்கு வைத்துப் புலிகள் ஏவிய எறிகணைகள் மக்கள் தங்கியிருந்த கட்டிடங்களில் விழுந்ததால் பலர் உயிரிழந்தனர். அதேபோல் யாழ்ப்பாணத்திலும், மக்களை வெளியேற்ற முயன்றதோடு, தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர். குறிப்பாக அல்லைப்பிட்டியில் தேவாலயம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே இருந்தது. அங்கு எறிகணையை இராணுவமே ஏவியிருக்கும் என்ற சந்தேகத்தை விடவும், புலிகளே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி எறிகணையை ஏவி இருக்கலாம் என்று மக்கள் நம்புகின்றனர்.**

**ஆகவே இரண்டு தரப்பும் தமக்குள் மோதிக் கொள்வதில் அப்பாவி மக்களை கேடயங்களாகப் பாவிக்காமல் இருக்க வேண்டும். மக்களை பலி கொண்டு அதனூடாக யுத்த வெற்றிகளைப் பெற முயற்சிப்பது பேடித்தனம் மட்டுமல்லாது, மனித் உரிமை மீறலுமாகும். அதுபோல் தாக்குதல் நடைபெறக்கூடிய பகுதியிலிருந்து மக்கள் வெளியேறி பாதுகாப்பான இடத்துக்குச் செல்ல விடாதபடி ஊரடங்குச்சட்டம் பிறப்பித்தமையானது கண்டிக்கப்படவேண்டியதாகும். திடீரென்று வெடித்த தாக்குதல்களும், அதையொட்டிய ஊரடங்கும் என்பது அப்பாவி மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதித்துள்ளது. மக்களுக்கு தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையை மறுப்பது பாரிய குற்றமாகும். இதை எந்தத் தரப்புச் செய்தாலும் பாகுபாடு அற்ற வகையில் கண்டிக்க வேண்டும். தாக்குதல்கள் தொடர்ந்து நீடிக்கும் சாத்தியம் காணப்படுவதால் பொதுமக்களைப் பாதுகாப்பது தொடர்பில் எல்லாத் தரப்பும் கூடுதல் கவனமெடுப்பது அவசியமாகும்.**

## ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

மேலும் விபத்துக்கு வேறு காரணங்களும் இருக்கக்கூடும். இருந்தாலும் சில எச்சரிக்கை நடவடிக்கைகளைக் கேட்டு அந்த விமானி செயல்பட்டு இருந்தால், அந்த துயர சம்பவத்தை தவிர்த்து இருக்கலாம்.

விமானியின் கவனக்குறைவு ஒரு காரணமாக இருந்தாலும், மோசமான சீதோஷ்ண நிலை, விமானத்தில் சில கோளாறுகள், விமானத் தளத்தில் விமானம் இறங்கும் முறையில் குறைபாடு ஆகியனவும் இருந்துள்ளன. மேலும் உயரமாகப் பறக்கச் சொல்லி விமானிக்கு உத்தரவு தரப்பட்ட போதிலும், அவர் விமானத்தை உயரமாக பறக்கவிடவில்லை. தலைமை விமானி ஒருவர் இவ்வளவு மெத்தனமாக இருந்திருக்கிறார் என்று நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் சாதாரண விமானி செய்யக்கூடியவற்றைக்கூட, இவர் செய்யவில்லை என்றும் நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ளார்.

விமானப் போக்குவரத்து தலைமைப் புலனாய்வு அதிகாரி அண்டோ டி காக், விபத்து தொடர்பாகக் கொடுத்துள்ள அறிக்கை திருப்தி அளிப்பதாக உள்ளது என்றும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.




## தென்னாபிரிக்க அணி விலகுகிறது?

இலங்கையில் இந்தியா, தென்னாபிரிக்கா, இலங்கை ஆகிய மூன்று நாடுகளுக்கு இடையேயான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் 14.08.2006 இல் தொடங்குவதாக இருந்தது. மழை காரணமாக மைதானத்தில் நீர் தேங்கியதால் போட்டி நடைபெறுமா? இல்லையா? என்ற சந்தேகத்தில் இருந்த வேளையில் சுமார் 1.50 மணியளவில் இந்திய கிரிக்கெட் வீரர்கள் தங்கியுள்ள ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் இருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள லிபர்டி பிளாசா எனும்



சினிமா தியேட்டர் அருகே பயங்கர குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை பாகிஸ்தான் உயர் அதிகாரிகள் சந்தித்து விட்டுவரும் வழியில் புலிகள் இந்த பயங்கர தாக்குதல் சம்பவத்தை நிகழ்த்தினர். இதில் 07 இராணுவ வீரர்கள் பலியானார்கள். மற்றும் 10 பேர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தபோது இந்திய கிரிக்கெட் வீரர்கள், ஹோட்டலில் தான் இருந்தார்கள். மழை காரணமாகப் பயிற்சியில் ஈடுபடச் செல்லாத அவர்கள் ஹோட்டலில் பொழுதைக் கழித்தனர். யாரோ ஒருவர் கூறியதன் மூலமே குண்டு வெடிப்பு நடந்தது வீரர்களுக்குத் தெரியவந்தது. இதைக் கேட்டு வீரர்கள் அதிர்ச்சியடைந்தனர். அதிலும் தென்னாபிரிக்க வீரர்கள் கடும் பீதியடைந்தனர்

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து வீரர்கள் உள்ள ஹோட்டலுக்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. மேலும் மைதானத்திற்கும் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டது. எனினும் இந்தக் கிரிக்கட் போட்டித் தொடர் நடைபெறுமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 6, கூட்டெண் - 6

6,15,24 போன்ற தேதியில் பிறந்து, தேதி மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால் இவர்கள் பூரண சுக்கிர ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு அழகாகவும், நிதானமுடையவர்களாகவும் காட்சியளிப்பர். எதையும் சிந்தித்துச் செல்படும் மனிதராவர். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று கூறாது தன் மனதில் தோன்றிய கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் கூறுவர். எல்லோரும் நலமாக வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தனது முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாயிருக்கும் இவர்கள் ஒவ்வொரு மனிதனும் உயர்ந்தால் நாடு தானாக உயரும் என்ற எண்ணம் கொண்டவர்.

இவர்களது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக பெயர் அமைந்துவிட்டால் வாழ்க்கையில் உச்ச ஸ்தானத்தை அடைவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் ஞானமுள்ளவராகவும், தர்மசிந்தனை படைத்தவர்களாகவும், பலருக்கு அறிவுரை கூறுபவர்களாகவும் இருப்பதோடு பெரும் செல்வந்தராகவும் வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருந்தால் முன்னேற்றம் அவ்வளவு சிறப்பாக இருப்பதில்லை. எங்கு சென்றாலும் போட்டியையும், பொறாமையையும் சந்திக்க நேரிடுகிறது. இதனால் பெயரைப் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொள்வது அவசியம். இளகிய மனம் கொண்ட இவர்கள் பிறருக்கு உதவுவதாலும், சமூக சேவைகள் செய்வதாலும் மக்களிடத்து மதிப்புள்ள மனிதராக விளங்குவர்.

சிலர் இயற்கையிலேயே வசதி படைத்தவர்களாக இருந்தாலும், பெயர் நன்றாக அமையாவிட்டால் மனம் குழம்புவர். எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் சிறிது நேரம் சிந்தித்து உடனே முடிவெடுக்கும் ஆற்றல் பெற்றவர். இவர்களுடைய எண்ணங்கள் மின்னல் வேகத்தில் செல்லக் கூடியது. இந்த உலகத்திலுள்ள நன்மைகள் எல்லாம் நாம் அனுபவிப்பதற்காக உருவாக்கப்பட்டதே என்று கூறுவர். இதனால் இவர்களை சுகபோகத்தைப் பூரணமாக அனுபவிக்கும் மனிதர் என்று சொல்லலாம்.

தத்துவம், மதம், சட்டம், கணிதம், சாஸ்திரம் போன்றவற்றை ஆராய்ச்சி செய்வர். பசுமையான இடங்களையும், இயற்கையான சூழ்நிலைகளையும், மலைப் பிரதேசங்களையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர். இவர்களது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமைந்துவிடுமானால் இந்த உலகில் அனுபவிக்க வேண்டிய எல்லா விதமான பாக்கியங்களையும் அனுபவித்து வாழ்வர்.

ஆனால் பிறந்த தேதிக்குப் பொருத்தமற்ற நிலையில் பெயர் இருக்குமேயானால் இவர்களது நிலை தலை கீழாக மாறிவிடும். நாட்டியம், இசை போன்றவற்றில் கலைஞானம் கொண்ட இவர்கள் எல்லோரையும் மகிழ்விக்கக்கூடிய காரியங்களைச் செய்து புகழ் அடைவர். இவர்களுக்கு மனக்கட்டுப்பாட்டால் வரக்கூடிய சித்திகள் கைகூடும். ஆண்டவனை வழிபடுவதில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பர்.

அழகான வீடு கட்டுவதும், தோட்டம் அமைப்பதிலும், புதிது புதிதாக ஆபரணம் செய்வதிலும் விருப்பம் உடையவர்கள்.

வாசனைத் திரவியங்கள் என்றால் இவர்கள் மனதைக் கவரும். பெயர் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் ஆகிவற்றைப் பெற்றுச் சிறப்பாக வாழ்க்கை நடத்துகின்றனர். உத்தியோகம் பார்க்கும் சிலருக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் படிப்படியாக உயர்ந்த ஸ்தானத்தை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமற்ற நிலையில் இருந்தால் பல்வேறு குழப்பத்திற்கு ஆளாவர். இதனால் பெயரைத் தமது பிறந்த தேதிக்குப் பொருத்தமாக மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம்.

***தொழில்:-***

இவர்கள் ஆடம்பரம் சம்பந்தமான பொருட்களை வியாபாரம் செய்வதாலும், அழகு சாதனங்கள், ஆபரணங்கள், இரும்பு சம்பந்தமான தொழில், ஜவுளி, மருத்துவப் பொருட்கள், பச்சைப் பொருட்கள் போன்றவற்றாலும் உயர்வடைய வாய்ப்புள்ளது.

***நோய்:-***

இந்த எண்ணிக்கையாளர்களுக்கு உஷ்ண சம்பந்தமான வியாதிகள், ரத்த அழுத்தம், மூத்திரக் கோளாறு, பல்வலி, முதுகுவலி போன்றவைகள் வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை:-***

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு சுக்கிரனின் பூரண பலன் இருப்பதால் சூரியன், செவ்வாய், சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பெயர் வைக்கலாம். மேற் குறிப்பிட்ட ஆதிக்கமான 19,37,46,64; 27,36,45; 15,24,33,42,60,69 உள்ள எண்ணில் பெயர் அமைவது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை:-**

யோகமான எண் - 1,6.
யோகமான தேதிகள் : 1,10,19,28; 16, 15,24; 9,18,27.
யோகமான நிறம் - பச்சை, வெளிர் நீலம்.
யோகமான மோதிரக்கல் -மரகதம்.
ஆகாத தேதிகள் - 3,12,21,30.
ஆகாத நிறம் - ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம்.

*அடுத்த வாரம் பிறப்பெண் 6, கூட்டெண் 7 பற்றிப் பார்ப்போம்.*

# சாய் லுன்
# (கி. பி - 105 நூற்றாண்டு)

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

**சென்ற வாரத் தொடர்ச்சி...**

**கா**கிதம் ஆகிய இரண்டின் கூட்டிணைவு மூலமாக அதிகமான நூல்களை அச்சிட்டிருக்க முடியும்.

உலகில் வாழ்ந்த மிகச் செல்வாக்கு மிக்க பத்துப் பெரியவர்களில் கூட்டன்பர்க், சாய் லுன் இருவரையும் சேர்ப்பது பொருத்தமாக இருக்குமா? காகிதம், அச்சுக்கலை ஆகிய கண்டுபிடிப்புகளின் முழு முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொள்வதற்கு, சீனாவிலும், மேலை நாடுகளிலும் ஏற்பட்ட பண்பாட்டு முன்னேற்றத்தை ஒப்பு நோக்குவது அவசியமாகும். இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் சீன நாகரீகம், மேலை நாட்டு நாகரீகத்தை விட வளர்ச்சி குன்றியதாகவே இருந்து வந்தது. முதல் ஆயிரம் ஆண்டுகளின் போது, மேலை நாடுகளைவிட சீனா விரைவாக முன்னேற்றமடைந்தது. ஏறத்தாழ 700 அல்லது 800 ஆண்டுகள் வரை உலகில் சீன நாகரிகம்தாம் மிகவும் முன்னேறிய நாகரீகமாகத் திகழ்ந்தது. ஆயினும், 15ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர், மேற்கு ஐரோப்பா, சீனாவைவிட மிக அதிக முன்னேற்றமடைந்தது. இந்த மாறுதல்களுக்குப் பல்வேறு பண்பாட்டு விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. எனினும், அந்த விளக்கங்களில் பெரும்பாலானவை நான் கருதும் மிக எளிமையான விளக்கத்தைப் புறக்கணித்து விட்டன.

வேளாண்மையும், எழுத்து முறையும் சீனாவைவிட மத்திய கிழக்கில் முன்னதாகவே முன்னேற்றமடைந்தது உண்மைதான். ஆனால், மேலை நாட்டு நாகரீகத்தைவிடச் சீன நாகரீகம் பின்தங்கியதற்கு இதை மட்டும் காரணமாகக் கூறமுடியாது. இதற்கு முக்கிய காரணம் சாய் லுன்னுக்கு முன்பு வரை, சீனாவில் வசதியான எழுது பொருள் எதுவும் இல்லாமலிருந்ததுதான் என நான் கருதுகிறேன். மேலை நாடுகளில் 'பப்ரைஸ்' என்ற எழுதுபொருளில் குறைபாடுகள் இருந்த போதிலும், பப்ரைஸ் நூல்கள், மரத்தினால் அல்லது மூங்கிலால் ஆக்கப்பட்ட நூல்களைவிட மிகவும் உயர்தரமாக இருந்தன. பொருத்தமான எழுதுபொருள் இல்லாதிருந்தது சீனப் பண்பாட்டு முன்னேற்றத்திற்குப் பெருந்தடங்கலாக அமைந்தது. ஒரு சீன அறிஞர் தமக்கு ஓரளவுக்குத் தேவையான நூல்களை எடுத்துச் செல்வதாக இருந்தால்கூட, அவற்றை ஒரு பார வண்டியில் ஏற்றிச் செல்ல வேண்டியிருந்தது. இந்த அடிப்படையில், ஓர் அரசின் நிருவாகத்தை நடத்துவது எத்துணை கடினமாக இருந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

எனினும், காகிதத்தை சாய் லுன் கண்டுபிடித்ததையொட்டி நிலைமை அடியோடு மாறியது. இப்பொழுது பொருத்தமான எழுதுபொருள் கிடைத்து விட்டமையால் சீன நாகரீகம் மிகத் துரிதமாக முன்னேறியது. மிகச் சில நூற்றாண்டுகளிலேயே அது மேலை நாடுகளுக்கு இணையாக வளர்ச்சியடைந்தது. மேலை நாடுகளில் காணப்பட்ட அரசியல் வேற்றுமை இதற்கு ஒரு காரணமாக இருந்ததெனினும், அதுவே முழுக் காரணம் என்று சொல்ல முடியாது. நான்காம் நூற்றாண்டில், மேலை நாடுகளைவிடச் சீனாவில், அரசியல் வேற்றுமை அதிகமாக நிலவியது. ஆயினும், அங்கு பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டுதான் இருந்தது. அடுத்து வந்த நூற்றாண்டுகளில், மேலை நாடுகளில் முன்னேற்றம் மிகவும் மந்தமடைந்திருந்த அதே சமயத்தில், சீனாவில், திசைகாட்டி, துப்பாக்கி மருந்து, அச்சுப்பாள அச்சு முறை ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன. ஆட்டுத் தோலைவிடக் காகிதம் மலிவாக இருந்தமையாலும், அது பெருமளவில் கிடைத்தமையாலும், மேலை நாடுகளை விடச் சீனா விரைவாக வளர்ச்சியடைந்தது.

மேலை நாடுகள் காகிதத்தைப் பயன்படுத்தத் தொடங்கிய பின்பு, அவை வளர்ச்சி வேகத்தில் சீனாவை விஞ்சின. எனினும், 18ஆம் நூற்றாண்டில் கூட ஐரோப்பாவைவிட சீனா அதிகச் செல்வச் செழிப்புடன் திகழ்ந்தது என்பதை மார்க்கோபோலோவின் எழுத்துகள் உறுதிப்படுத்துகின்றன.

அப்படியிருந்தும், சீனா மேலை நாடுகளுக்குப் பின்தங்கியதேன்? இதற்குப் பல சிக்கலான பண்பாட்டுக் காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் தொழில்நுட்பக் காரணம் ஒன்றை மட்டும் சொன்னாலே இதற்குப் போதுமானதாகும். பதினைந்தாம் நூற்றாண்டு ஐரோப்பாவில் ஜோஹான் கூட்டன்பர்க் என்ற அறிஞர் தோன்றி, ஒரே சமயத்தில் நூல்களின் ஏராளமான படிகளை அச்சிடுவதற்கான ஓர் உத்தியைக் கண்டுபிடித்தார். அதன் பின்பு ஐரோப்பிய பண்பாடு மிக விரைவாக முன்னேறியது. சீனாவில் ஒரு கூட்டன்பர்க் தோன்றாமற் போனதால், சீனர்கள் அச்சுப் பாள அச்சுமுறையுடன் நின்று விட்டனர். அவர்களுடைய முன்னேற்றம் மந்த கதியிலேயே நடந்தது.

மேற்சொன்ன முடிவினை ஏற்றுக்கொள்வதாயின் மனிதகுல வரலாற்றில் சாய் லுன், கூட்டன்பர்க் இருவரும் தலையாயவர்கள் என்ற முடிவினையும் ஏற்றுக் கொண்டேயாகவேண்டும். வேறொரு காரணத்தினாலும், மற்ற அனைத்துப் புத்தமைப்பாளர்களையும்விட சாய் லுன் தனிச் சிறப்பு வாய்ந்தவராகத் திகழ்கிறார். பெரும்பாலான கண்டுபிடிப்புகள், அந்தந்தக் காலத்திய ஒரு விளைபொருள் ஆகும். அவற்றை உண்மையில் கண்டுபிடித்தவர்கள் தோன்றாமலிருந்தால் கூட அவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். ஆனால், இந்த உண்மை காகிதத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமாகப் பொருந்தாது. சாய் லுன் காகிதத்தைக் கண்டுபிடித்த 1000 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் ஐரோப்பியர்கள் காகிதம் தயாரிக்கலானார்கள். சீனர்கள் காகிதம் தயாரிப்பதைப் பார்த்த பிறகுங்கூட, மற்ற ஆசிய மக்கள் தாங்களே காகிதம் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடிக்கவில்லை. காகிதம் தயாரிக்கும் முறையைக் கண்டு பிடிப்பது உண்மையிலேயே மிகக் கடினமானதாக இருந்தது. ஓரளவு முன்னேற்றமடைந்த ஒரு பண்பாட்டில் யார் வேண்டுமானாலும் அதைக் கண்டுபிடிக்கக் கூடியதாக இல்லை. அருந்திறம் வாய்ந்த ஒருவரால்தான் அது கண்டுபிடிக்கப்படத்தக்கதாக இருந்தது. அத்தகைய அருந்திறம் வாய்ந்தவராக சாய் லுன் திகழ்ந்தார். காகிதம் தயாரிப்பதற்கு அவர் கையாண்ட அதே முறைதான் (1800 வாக்கில் எந்திரமுறை புகுத்தப்பட்ட பின்னரும்) அடிப்படையில் மாற்றமின்றி இன்றும் கையாளப்படுகிறது.

இந்தக் காரணங்களினாலேயே, இந்த

## உலகை வியக்க வைத்தவர்கள்

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



வணக்கமுங்கோ!

> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

மாவிலாறு அணை திறக்கப்பட்டு தண்ணி வருகுது. அந்தச் சந்தோசத்தோடை இருக் கிறன். தாங்கள் தான் தண்ணியைத் திறந்து விட்டனாங்கள் எண்டு அவையும், இல்லை இல்லை, நாங்கதான் திறந்து விட்டனாங்கள் எண்டு இவையும் பிரசாரம் செய்யினம். யார் திறந்து விட்டால் என்ன, சனத்துக்கு தண்ணீர் தான் வேணும் எண்டதுதான் சனத்தின்ர நிலைப் பாடு.

சும்மா சொல்லக்கூடாது, அரசாங்கமும், புலிகளும் பிரசாரப் போரிலையும் ஒரு முடிவு காணுறதெண்டுதான் கொடுக்குக் கட்டிக் கொண்டு நிக்கினம். தண்ணியைத் திறந்து விட்டதிலை மட்டும் சொல்லயில்லை. ஆளை யாள் தாக்கினதிலையும், சேதப்பட்டதிலையும், தங்களுக்கு ஏற்ற மாதிரி முப்பது பேர் எண்டி னம் நாற்பது பேர் எண்டினம். உதைப் பார்க் கேக்க எந்தத் தரப்பு உண்மை சொல்லு தெண்டதையே சனத்துக்குத் தெரிஞ்சு கொள்ள ஏலாம இருக்கு. ஆனால் ஒட்டு மொத்தத்தில ரெண்டு தரப்பும் மாறி மாறி நல்லா அடி வாங்கிக் கொண்டு உண்மையை வெளியில சொல்லாமல் மறைக்கினம் எண்டது மட்டும் உண்மை. இப்புடி ரெண்டு தரப்பும் தையா தக்கா எண்டு உண்மையைப் போட்டு களிமண் மிதிக்குமாப்போலை மிதிச்சுக் கொண்டிருக் கிறதை ஊடகங்கள் நல்லாத் திரிச்சு அவைக்கு ஏற்ற விதத்தில செய்தி போட்டு கொஞ்ச நாளா நல்லா பிஸினஸ் பாக்கினம்.

இனி எங்கடை ஆக்களைத் தெரியும் தானே! காசு எண்டால் நஞ்சையும் குடிப் பாங்கள். உந்த விஷயத்தில எங்கட ஊடகக் காரர் மட்டுமில்லையுங்கோ. சிங்கள ஊடகக் காரரும் ஆங்கில ஊடகக்காரரும் அடங்கு வினம். "ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" எண்டுவினமெல்லோ. அது போலை தானுங்கோ, இப்ப மீடியாக்காரரும் சண்டை நடந்தால்தான் தங்களுக்கு இலாபம் எண்ட நினைப்பில இருக்கினம். ஆனால் பாவம் சனங்கள் தான். அரசாங்கமும், புலிகளும் 'ஆட்டிலெறி, மல்டிபெரல்' எண்டு அங்க இருந்து இங்காலையும், இங்க இருந்து அங்காலையும் ஷெல்லுகளை அடிக்கினம். இடையில மாட்டிக்கொண்டு சனம் படுகிறபாடு சொல்ல முடியாததுங்கோ. அப்பாவிச் சனங்கள் நிறையப் பேர் இந்த முறை செத்துப் போயிட் டினம். பெருந் தொகையானவை காயப்பட்டுப் போயிருக்கினம். ஆயிரக் கணக்கானவை இடம் பெயர்ந்து அகதிகளாகியிருக்கினம். உதில புலிகளை நம்ப ஏலாது. புலிகளால ஆபத்து எண்டு ஓடி வந்த முஸ்லிம் மக்கள், அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ள வந்து கஞ்சியோ, சோறோ சாப்பிட்டுக்கொண்டு இருக்கினம். இவையளைப் போலை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ள ஓடி வந்த தமிழ் மக்களும் தப்பிட்டினம். அப்புடி இல்லாமல் புலிகளின்ர கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ள இருந்த சனமும், ஓடின சனமும் மேலும் மேலும் தாக்குதல்களில சிக்குப்பட்டுப் போயிருக்கிறது மட்டுமில்லையுங்கோ. உதவிகளைக் கூட வெளியால இருந்து பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கினம். அதில என்ன நடக்குது தெரியுமோ? படையினரின்ர முகாம் எங்க இருக்கு? எங்க தாக்கவேணும்? எண்டு புலிகளுக்குத் தெரியும். ஆனால் படையின ருக்குப் புலிகள் எங்க இருக்கினம் எண்டது குறிப்பாத் தெரியாது எண்டபடியாலை வடிவேலு சொல்லுமாப் போலை எதிர்தரப்பைப் பார்த்து ஒரு குத்துமதிப்பிலதான் ஷெல் அடிக்கினம். அதுபோய் சனங்களுக்குள்ள விழுகுதோ, இல்லாட்டில் புலிகளின்ர முகாம்களுக்குள்ள விழுகுதோ எண்டெல்லாம் யார் கண்டது?

சண்டை ஒண்டு வந்தால் உதுதான் நடக்கும் எண்டு புலிகளுக்கு நல்லாத் தெரியும். தெரிஞ்சுகொண்டே அரச கட்டுப்பாட்டுக்குள்ள இருந்த சனத்தையும் தங்கட கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ள வாங்கோ எண்டு கட்டாயப் படுத்திக் கூப்பிட்டிச்சினம். நான் அப்பவே சொன்னனான், அந்தப் பக்கம் போகாதீங்கோ. அதுக்க போனால் திரும்பவும் பாதிக்கப் படுவியள். உங்களை ஒரு கவசமாகப் பயன் படுத்தத்தான் கூப்பிடுகினம் எண்டு. இருந்தாலும் சனம் என்ன செய்ய முடியும்? அவை துவக்குக ளோடை சொல்லேக்க சனம் வாய்திறக்க ஏலாமல் இருந்திச்சினம். இண்டைக்கு நிலை மையைப் பாருங்கோ. அரசாங்கமும் போக ஏலாமல், தொண்டு நிறுவனங்களும் போக ஏலாமல் தமிழ் சனம் நிண்டு தவிக்கினம். உந்த செய்திகளைக் கேக்கேக்க மனசு கிடந்து பதறுது. நாம தான் என்ன செய்ய முடியும். புலிகளுக்கு அடிக்கிறமெண்டு சனங்களுக்கு அடிக்காதேங்கோ எண்டு சொல்லலாம். சும்மா சொன்னால் சரியோ? அங்க என்ன நடக்குது எண்டெல்லோ பார்க்க வேணும்.

இதுவரைக்கும் நாற்பதாயிரத்துக்கும் அதிகமான தமிழ் சனம் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து மரங்களுக்குக் கீழையும், செடி கொடிகளுக்குள்ளையும் இருக்கினமாம். அதிலையும் காயப்பட்டவையின்ர பாடு படு மோசமாம் எண்டெல்லாம் சொல்லினம். எனக்கெண்டால் என்ன செய்யிறதெண்டதே தெரியமாட்டேன் என்கிறது. அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள்தான் எப்புடியாவது போய் உந்தச் சனத்தின்ர கரண்ட் சிச்சுவேஷன் எப்புடி இருக்கெண்டு பார்க்கவும் உதவவும் வேணும்.

இனியாச்சும் புலிகள் எங்கட சனத்தை உங்க தடுத்து வைக்காமல், தப்பிச்சுப் போங்கோ எண்டு இங்காலைப் பக்கம் அனுப்பி வச்சிச்சினமெண்டால் அது பெரும் உதவியாக இருக்கும். என்ன செய்யப் போகினம் எண் டதைப் பொதுமக்கள் தானுங்கோ முடிவு செய்யவேணும்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


# இந்த வாரம் உங்கள் பலன்

**(17.08.2006 தொடங்கி 23.08.2006 வரை)**

## சோதிட மாமணி தில்லை


### இந்த வாரக் கிரக நிலை

சிங்கம் - சூரியன், செவ்வாய். கன்னி - கேது, தூலம். வியாழன்.
மீனம் - இராகு. கர்க்கடகம் - புதன், வெள்ளி, சனி. சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.




**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் மந்தம், பணச் செலவு, வீண் குறை கேட்டல், மனக்குழப்பம், பிரயாணக் கஷ்டம், உறவினர் பகை, எதிர்பாராத தொல்லை, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**




**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் நன்மை, புதிய முயற்சி, பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், உறவினர் உதவி, குடும்ப சுகம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**




**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, பண வரவு, தூர இடப் பிரயாணம், அந்நியர் நட்பு, குடும்பப் பொறுப்பு, மேலதிகச் செலவு, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**




**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மாற்றம், புதிய முயற்சி, மனக்குறையதிகம், வெளியார் தலையீடு, பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு, குடும்பச் சுமை, உத்தியோக அலைச்சல், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் மாற்றம், பணச் செலவு, பெரியோர் உதவி, தூர இடப் பயணம், வெளியிட வாசம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகக் கவலை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் பயம், பெரியோர் உதவி, கௌரவம், உயர்ந்த எண்ணம், குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி நன்மை, உயர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**




**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் கலக்கம், பணியாளர் பகை, பணமுடங்கல், வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும், குடும்ப மேன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகத் தொல்லை, வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**




**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மந்தம், பணச் செலவு, பெரியோர் உதவி, தேகசுகக் குறைவு, தூர இடப் பயணம், குடும்பத் தொல்லை, எதிர்பாராச் செலவு, உத்தியோக முயற்சி, புதிய பதவி, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03**




**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் அலைச்சல், பங்காளர் தொல்லை, மனக் கலக்கம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் பகை கொள்வர், மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**




**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், தூர இடப் பயணம், மனக்குறையதிகம், உறவினர் உபத்திரவம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**



**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் அனுகூலம், பண வரவு, தேகசுகக் கஷ்டம், உறவினர் பகை, மனக்கலக்கம், உத்தியோக மேன்மை, பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் பகை, வீண் விரயம், மனக் கலக்கம், பெரியோர் நட்பு, தூர இடப் பயணம், தேகசுகம் குடும்பப் பேறு, உத்தியோக அலைச்சல், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)

## ஆலயம்



படத்தில் காணப்படுவது அடுக்குமாடி வீட்டுத் தொகுதியாகும். முன்னர் கிறிஸ்தவ தேவாலயமாக இருந்த இந்த ஆலயத்தை (condo) என்று அழைத்தனர்.

கனடாவில் மொன்ரீல் நகரில் சென்ற் லோரன்ஸ் வீதியில் 'குட்டி இத்தாலி' என அழைக்கப்படும் இடத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இப்போது இந்தக் கட்டிடம் தேவாலயமாக இல்லை. இத்தேவாலயத்தை குடியிருப்பாக மாற்றி தனித்தனி வீடுகளாகப் பிரித்து விற்றுவிட்டார்கள். "ஆலயம் என்பது வீடாகும்" என்பார்கள். இங்கு ஆலயமே வீடாகக் கிடைத்தால் விடுவார்களா? அனைத்தும் விற்றுத் தீர்ந்து விட்டதாம். வீடுகளுக்காக விண்ணப்பித்தும் கிடைக்காமல் போனவர்கள் ஏக்கத்தோடு பார்க்கிறார்களாம்.

## யதார்த்தம்!



கலவர வேளைகளிலும் இயற்கை அனர்த்தங்களின் போதும் "இலகுவில் பாதிக்கப்படக்" கூடியவர்கள் சிறுவர்களும் பெண்களுமாகும். இங்குள்ள சிறுவர்களும். எதற்கும் முகங்கொடுக்கத் தங்களைத் தயார் படுத்துகிறார்கள் போலும்! ஏறாவூர்ப் பகுதியைச் சேர்ந்த றிழ்வான்,அப்துல் ஹாதி,தஸ்பிஹா,அப்துல் பத்தாஹ் ஆகியோர் மணல் மேட்டில் தங்களைத் தாங்களே புதைத்துக்கொண்டு அபயக் குரல் எழுப்புகிறார்கள். இதுவும் ஒருவகையான முன்னோடி யுத்த முனைப்புதானோ?


## பார்க்க மட்டும்



## 1ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் கபிகரன்

**19 . 08 . 2006**



இத்தாலி, பலேர்மோ நகரத்தில் வசிக்கும் குகநாதன் - சசிகலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் கபிகரன் 19-8-2006 அன்று தனது முதலாவது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, சுதா சித்தப்பா, இத்தாலியில் வசிக்கும் தேவா அப்பப்பா குடும்பத்தினர், மகாலிங்கம் தாத்தா, தீபன் மாமா மற்றும் ஜேர்மனியில் வசிக்கும் மாமா, அத்தை, மச்சான்மார், மச்சாள்மார் மேலும் கனடாவில் வசிக்கும் தருமன் அப்பப்பா குடும்பத்தினர், சிங்கப்பூரில் இருக்கும் சசிதரன் மாமா, இலங்கையில் வசிக்கும் அத்தை, மச்சான்மார், மச்சாள்மார், கொழும்பில் இருக்கும் தாத்தா குடும்பத்தினர், யாழ்ப்பாணம், கொக்குவிலில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, ஜெயநாதன் சித்தப்பா குடும்பத்தினர் மற்றும் சின்னம்மா, பெரிய அம்மம்மா, தாத்தா, மாமாமார்கள் மற்றும் அப்பம்மாமார், தாத்தாமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.


தகவல்:- சுதா (கொழும்பு)

தொலைபேசி:- 00393478835887.


தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

கொவிசெத லொத்தரின் அடுத்த
கோடீஸ்வரரா நீங்களா ?

கோடீஸ்வரராகுங்கள்,
மென்மேலும் கொவிசெத
டிக்கெட்டுகளை
வாங்குங்கள்!



கொவிசெத

இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம் www.nlb.lk